தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

CHENNAI | Volume- 3 | Issue:291 | 06-05-2026 | புதன்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


MLM SOFTWARE Company
• Binary MLM Plan
• Single Leg MLM Plan
• Autopool MLM Plan
• Unilevel MLM Plan
• Matrix MLM Plan
• Stairstep MLM Plan
• Party MLM Plan
• Board MLM Plan
• Generation MLM Plan
PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

## இன்றைய பஞ்சாங்கம்

புதன்கிழமை
(06–05–2026)
பராபவ ஆண்டு,
சித்திரை–23

சூரிய உதயம் 5.50

திதி:
சதுர்த்தி காலை 6.37 வரை
பிறகு பஞ்சமி

நட்சத்திரம்:
மூலம் பிற்பகல் 230 வரை
பிறகு பூராடம்

யோகம் :
மரண/அமிர்தயோகம்.

நல்ல நேரம்
காலை 6.00 – 7.00.
மாலை 4.00 – 5.00.

இராகு காலம்
நண்பகல் 12.00–1.30 மணி.

எமகண்டம்
காலை 7.30–9.00 மணி.

குளிகை
காலை 10.30 – 12.00 மணி

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# முதலமைச்சராக நாளை பதவியேற்கிறார் விஜய்?

## பதவியேற்பு விழாவை நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடத்த திட்டம்

**சென்னை, மே 6:**

தமிழக சட்டசபை தேர்தல் ஒரே கட்டமாக கடந்த 23-ந்தேதி வாக்குப்பதிவு நடைபெற்றது. தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி நேற்று நடந்தது. வாக்கு எண்ணிக்கை முடிவில் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது.

நேற்று நடைபெற்ற தமிழக வெற்றி கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் அக்கட்சியின் சட்டமன்றக் குழுத் தலைவராக விஜய் தேர்வு செய்யப்பட்டுள்ளார். மேலும் விஜய் முதல்-அமைச்சராக ஆதரவு அளித்து அக்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களிடம் உறுதிமொழி பத்திரத்தில் கையெழுத்து பெறப்பட்டுள்ளது.



மொத்தமுள்ள 234 தொகுதிகளில் பெரும்பான்மைக்கு 118 இடங்கள் தேவை. ஆனால் த.வெ.க.வுக்கு, அந்த அளவுக்கு பெரும்பான்மை இல்லை. இருந்தாலும் விஜய் ஆட்சியை அமைக்க கவர்னரிடம் உரிமை கோர இருக்கிறார். கவர்னரும் அதற்கு அனுமதி அளிப்பார். அதனால் விஜய் முதல்-அமைச்சராக பொறுப்பேற்ற பின்பு சட்டசபையில் குறிப்பிட்ட தினங்களுக்குள் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும்.

த.வெ.க.பெரும்பான்மைக்கு கூடுதலாக 12 இடங்கள் தேவைப்படுகிறது. எனவே தி.மு.க. கூட்டணியில் உள்ள காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள், தே.மு.தி.க. மற்றும் அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள பா.ம.க. ஆகியோர் விஜய்க்கு ஆதரவு அளிப்பார்கள் என்று அரசியல் வட்டாரத்தில் பேசப்பட்டு வருகிறது.

தமிழக கவர்னர் ஆர். வி. அர்லேகரை சந்திக்க த.வெ.க. தலைவர் விஜய் தரப்பில் ஏற்கெனவே நேரம் கேட்கப்பட்டுள்ளது. இந்த சந்திப்பின்போது தமிழகத்தில் ஆட்சி அமைக்க விஜய் உரிமை கோர உள்ளார். இரண்டு வாரங்களில்பெரும்பான்மையை நிரூபிப்பதாக கவர்னருக்கு த.வெ.க. கடிதம் எழுதி உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் நாளை (மே 7) த.வெ.க. தலைவர் விஜய் தமிழ்நாட்டின் முதல்-அமைச்சராக பதவியேற்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அவரது பதவியேற்பு விழாவை நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில், விஜய் முதல்வராகபதவியேற்கும்போதே அவரது அமைச்சரவையும் பதவியேற்குமா அல்லது வேறொரு நாளில் பதவியேற்குமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

நேற்று அமைச்சரவையில் இடம்பெறுவோர் குறித்து விஜய் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்று வரும் நிலையில், விஜய் தலைமையிலான அமைச்சரவையில் தவெக பொதுச் செயலர் ஆனந்த், செங்கோட்டையன், ஆதவ் அர்ஜுனா, நிர்மல் குமார் ஆகியோருக்கு முக்கிய துறைகள் ஒதுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதுபோல, பெண் உறுப்பினர்களான திருப்பூர் சத்யபாமா, விஜயலட்சுமி உள்ளிட்டோருக்கும் வாய்ப்புகள் வழங்கப்படலாம் என்றும் அருண்ராஜ், விஜய் சரவணன், தமிழன் பார்த்திபன், முகமது பர்வேஸ், கல்லாண் உள்ளிட்டோரும் அமைச்சரவையும் இடம்பெற வாய்ப்பு உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது எதுவுமே கட்சித் தலைமை அல்லது கட்சி நிர்வாகத்தின் மூலம் இதுவரை உறுதி செய்யப்படவில்லை.

## முதல்வர் பதவியை ராஜினாமா செய்தார் மு.க.ஸ்டாலின்: ஆளுநருக்கு கடிதம்

**சென்னை, மே 6:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக தோல்வியடைந்தது. தவெக தனிப்பெருங் கட்சியாக உருவெடுத்துள்ளது. கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்ட முதல்வர் மு.க. ஸ்டாலின் தோல்வியடைந்தார். இதனையடுத்து அவர் இன்று தனது பதவியை ராஜினாமா செய்தார். அவர் தனது ராஜினாமா கடிதத்தை ஆளுநர் ராஜேந்திர அர்லேகருக்கு அனுப்பிவைத்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்ட நிலையில், தனிப்பெரும் கட்சியாக தமிழக வெற்றிக் கழகம் 108 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. திராவிட முன்னேற்றக் கழகம் 59 தொகுதிகளிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 47 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன.



காங்கிரஸ் கட்சி 5, பாட்டாளி மக்கள் கட்சி 4, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 2, சிபிஐ 2, சிபிஎம் 2, விசிக 2, பாஜக 1, தேமுதிக 1, அமமுக 1 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளன.

சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்க 118 உறுப்பினர்களின் ஆதரவு தேவை எனும் நிலையில், தற்போது எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை.அதேநேரத்தில், பெரும்பான்மக்குநெருக்கத்தில் தவெக இருப்பதால், அக்கட்சி பிற கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இது தொடர்பாக ஆளுநர் அர்லேகருக்கு தவெக சார்பில் கடிதம் எழுதப்பட்டுள்ளதாகவும், இரண்டு வாரங்களில் பெரும்பான்மையை நிரூபிக்கத் தயார் என அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

இதனிடையே, தேர்தலில் திமுக தோல்வி அடைந்ததை அடுத்து முதல்வர் மு.க. ஸ்டாலின் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். தனது ராஜினாமா கடிதத்தை ஆளுநர் அர்லேகருக்கு மின்னஞ்சல் மூலமாக ஸ்டாலின் அனுப்பியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

## தலைமைச் செயலாளர், டிஜிபி, அதிகாரிகள் ஆலோசனை

**சென்னை, மே 6:**

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் தலைமைச் செயலாளர் சாய்குமார், உள்துறை செயலாளர் மணிவாசன், காவல் துறை டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் மற்றும் சென்னை காவல் ஆணையர் உள்ளிட்ட பல்வேறு அதிகாரிகளும் பங்கேற்றுள்ளனர். தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. இதனையடுத்து தவெகவின் சட்டமன்றக் குழு தலைவராக அக்கட்சியின் தலைவர் விஜய் இன்று ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தச் சூழலில், ஆட்சியமைக்க உரிமை கோரி ஆளுநருக்கு விஜய் கடிதம் எழுதியுள்ளார். தவெக தலைமையிலான புதிய அரசு அமையவுள்ள நிலையில், பதவியேற்பு விழா மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆலோசிக்க தலைமைச் செயலகத்தில் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் தலைமைச் செயலாளர் சாய்குமார், உள்துறை செயலாளர் மணிவாசன், காவல் துறை டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் உள்ளிட்ட பல்வேறு உயர் அதிகாரிகளும் பங்கேற்றுள்ளனர்.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
➤ Public Notice ➤ Loss of Share
➤ Legal Notice ➤ Merger
➤ Tender Notice ➤ Acquisition
➤ Society Notice ➤ AFR, UFR, etc.
for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர்
9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

## ஒரே குடும்பத்தில் 3 பேர் எம்.எல்.ஏ.வாக தேர்வு



**புதுச்சேரி, மே 6:**

புதுவை மற்றும் தமிழக சட்டசபை தேர்தல் முடிவுகள் நேற்று வெளியானது. இதில் புதுச்சேரி காமராஜர் நகர் தொகுதியில் தொழிலதிபர் மார்டினின் மகன் ஜோஸ் சார்லஸ் மார்டின் தேசிய ஜனநாயக கூட்டணியில் தனது கட்சியான எல்.ஜே.கே. சார்பில் போட்டியிட்டார். இதில் தன்னை எதிர்த்து போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் தேவதாசைவிட 10 ஆயிரம் ஓட்டுகள் கூடுதல் பெற்று அபார வெற்றி பெற்றார்.

அதுபோல் தமிழக சட்டசபை தேர்தலில் லால்குடி தொகுதியில் அ.தி.மு.க.சார்பில் போட்டியிட்ட ஜோஸ் சார்லஸ் மார்டினின் தாய் லீமாரோஸ் மார்டின் தன்னை எதிர்த்து போட்டியிட்ட தி. மு.க. வேட்பாளர் பாரிவள்ளலை விட 5230 கூடுதல் ஓட்டுகள் பெற்று வெற்றி வாகை சூடினார். மேலும் சென்னை வில்லிவாக்கம் தொகுதியில் இவர்களது மருமகன் ஆதவ் அர்ஜுனா த.வெ.க. சார்பில் போட்டியிட்டார். அவர் தி.மு.க. சார்பில் போட்டியிட்ட கார்த்திக் மோகனை 17,302 ஓட்டு வித்தியாசத்தில் வீழ்த்தினார். ஒரே குடும்பத்தில் தாய், மகன் மற்றும் மருமகன் தேர்தலில் வெற்றி வாகை சூடியது குறிப்பிடத்தக்கது.

## மேற்கு வங்கம்: மே 9ல் புதிய பாஜக அரசு பதவியேற்பு!

**புதுடெல்லி, மே 6:**

மேற்கு வங்கத்தில் வருகிற மே 9 ஆம் தேதி பாஜக அரசு பதவியேற்பு விழா நடைபெறும் என்று பாஜக மாநில தலைவர் சாமிக் பட்டாச்சார்யா தகவல் தெரிவித்துள்ளார்.

மேற்குவங்கசட்டப்பேரவைத் தேர்தலில் ஆளும் திரிணமூல் காங்கிரஸை வீழ்த்தி முதல்முறையாக அங்கு பாஜக ஆட்சியமைக்க உள்ளது. இந்த தேர்தலில் பாஜக 207, திரிணமூல் காங்கிரஸ் 80, காங்கிரஸ் 2, இதர கட்சிகள் 4 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது.

இதையடுத்து மேற்கு வங்கத்தில் புதிய பாஜக



அரசு வருகிற மே 9 ஆம் தேதி பதவியேற்கும் என்று பாஜக மாநில தலைவர் சாமிக் பட்டாச்சார்யா தகவல் தெரிவித்துள்ளார்.

தற்போதைய மாநில எதிர்க்கட்சித் தலைவர் சுவேந்து அதிகாரி, மேற்கு வங்க முதல்வராக பதவியேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கெனவே மேற்கு வங்கத்தில் கடைசி நாள் பிரசாரத்தின்போது, 'அடுத்து மேற்கு வங்க பாஜக அரசு பதவியேற்பு விழாவுக்கு வருவேன்' என்று பிரதமர் மோடி கூறியிருந்தார்.

மேலும் மே 9 ஆம் தேதி ரவீந்திரநாத் தாகூரின் பிறந்தநாள் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேநேரத்தில் மேற்கு வங்கத்தில் வாக்குப்பதிவு இயந்திரங்களில் பாஜக முறைகேட்டில் ஈடுபட்டுள்ளதாகவும் முதல்வர் பதவியிலிருந்து விலக மாட்டேன் என்றும் திரிணமூல் காங்கிரஸ் தலைவர் மமதா பானர்ஜி கூறியுள்ளதும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

## 17-வது சட்டசபைக்குள் நுழையும் 22 பெண் உறுப்பினர்கள்!

**சென்னை, மே 6:**

நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் த.வெ.க. 108, தி.மு.க. கூட்டணி 73, அ.தி.மு.க. கூட்டணி 53 இடங்களில் வெற்றி பெற்றது. யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், 59 ஆண்டு கால திராவிட கட்சிகளின் ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து த.வெ.க ஆட்சி அமைக்க இருக்கிறது. அக்கட்சியின் தலைவர் விஜய் முதல்-அமைச்சராக பொறுப்பு ஏற்க இருக்கிறார்.

இந்த நிலையில், 17-வது சட்டசபைக்குள் 22 பெண் உறுப்பினர்கள் நுழைய இருக்கின்றனர். த.வெ.க.வில் இருந்து 12, அ.தி.மு.க.வில் இருந்து 6, தே.மு.தி.க., பா.ம.க., காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகளில் இருந்து தலா ஒருவர் இடம்பெறுகின்றனர். அவர்களின் விவரம் வருமாறு:-

1.எம்.ஆர்.பல்லவி (த.வெ.க., திரு.வி.க.நகர்), 2.காமாட்சி (த.வெ.க., பல்லாவரம்), 3.மரகதம் குமரவேல் (அ.தி.மு.க., மதுராந்தகம்), 4.சிந்து (த.வெ.க., குடியாத்தம்), 5.எல். ஜெயசுதா (அ.தி.மு.க., ஆரணி), 6.பிரேமலதா விஜயகாந்த் (தே.மு.தி.க., விருத்தாசலம்), 7.உஷாராணி (அ.தி.மு.க., ஏற்காடு), 8.சவுமியா அன்புமணி (பா.ம.க., தர்மபுரி), 9.மரகதம் வெற்றிவேல் (அ.தி.மு.க., பாப்பிரெட்டிப்பட்டி), 10.விஜயலட்சுமி (த.வெ.க., குமாரபாளையம்).

11.தமிழ்செல்வி (த.வெ.க., பவானிசாகர்), 12.சத்தியபாமா (த.வெ.க., திருப்பூர் வடக்கு), 13.கமலி (த.வெ.க., அவினாசி), 14.சத்தியபாமா (அ.தி.மு.க., தாராபுரம்), 15.கனிமொழி சந்தோஷ் (த.வெ.க., கவுண்டம்பாளையம்), 16.லீமாரோஸ் (அ.தி.மு.க., லால்குடி), 17.சத்யா (த.வெ.க., கிருஷ்ணராயபுரம்), 18.லதா (மா. கம்யூ, கீழ்வேளூர்), 19.குழந்தை ராணி நாச்சியார் (த.வெ.க., சிவகங்கை), 20.கீர்த்தனா (த.வெ.க., சிவகாசி), 21.ஜெகதீஸ்வரி (த.வெ.க., ராஜபாளையம்), 22.தாரகை கத்பர்ட் (காங்கிரஸ், குளச்சல்).

Follow our WhatsApp Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper WhatsApp channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel

## திருக்குறள் குறள்-611

அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்



இது செய்வதற்கு அருமையாகாது என்று சோர்வுறாமல் இருக்க வேண்டும், அதைச் செய்வதற்குத் தக்க பெருமையை முயற்சி உண்டாக்கும்,

## சிந்திக்க ஒரு நொடி



வயதில் மூத்தவர்களிடம் இருக்கும் அனுபவத்தை அறிவுரை யாக ஏற்றுக் கொள்ளுங்கள் கற்றதை விட பட்டதை எடுத்து மிக அருமையாக விளக்குவார்கள்...

**உஷா முத்துராமன்**

## சித்ரா பௌர்ணமி சிறப்பு வழிபாடு






**சென்னை, மே 06:** சோழிங்கநல்லூர் புதிய குமரன் நகரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ விஜய கணபதி திருக்கோயிலில் சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு ராமகிருஷ்ணன் ஐயர் அவர்களால் சித்ரகுப்தருக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ண மலர்மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு, வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் சித்ரகுப்தரை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

## ஓய்வு பெற்ற அரசு பள்ளி தலைமையாசிரியருக்கு சால்வை



திருவண்ணாமலை மாவட்டம் செங்கத்தில் ஓய்வு பெற்ற அரசு பள்ளி தலைமையாசிரியர் திரு. பா. ஜெயவேல் அவர்களுக்கு செங்கம்TNGPA வட்ட செயலாளர் பத்மநாப மூர்த்தி சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

## காட்பாடி ஸ்ரீவரசித்தி விநாயகர் கோவிலில் சங்கடஹர சதுர்த்தி விழா!



**வேலூர், மே06:** வேலூர் மாவட்டம் , காட்பாடி வள்ளிமலை கூட்டுரோடு அருகில் உள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகர் கோயிலில் மார்ச் மாத சங்கடஹர சதுர்த்தி விழா நடந்தது. இதையொட்டி ஸ்ரீவரசித்தி விநாயகருக்கு பல்வேறு வகையான திரவியங்கள் கொண்டு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. இதை தொடர்ந்து மலர் மாலை, வெட்டிவேர் மாலை, அருகம்புல் மாலை, பட்டுவஸ்திரம் அணிவித்து மகா தீபாரதனை காண்பிக்கப்பட்டது. அதையடுத்து சுவாமிக்கு தங்கக்கவசம் அணிவிக்கப்பட்டது. திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். ஸ்ரீசங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது. பூஜைகளை பிரம்மபுரம் ஸ்ரீஜெயக்குமார் அர்ச்சகர் விமரிசையாக செய்திருந்தார்.

## சங்ஹட ஹர சதுர்த்தி அபிஷேகம் ஆராதனை விழா!!













**விழுப்புரம், மே 06:** விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் வட்டம் கோட்டைப்பூண்டி கிராமத்தில் பால விநாயகருக்குதமிழ்நாடு இபேப்பர் பண்பலை மற்றும் தெய்வம் இதழ் தமிழாடிவி சார்பில் சங்ஹட ஹர சதுர்த்தி அபிஷேகம் ஆராதனை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

முன்னதாக வாசகர்கள் சார்பில் சங்கல்பம் செய்யப் பட்டது பால் விநாயகருக்கு. திரவியம் மஞ்சள் பொடி மாப்பொடி இளநீர் தயிர் பால் பஞ்சாமிர்தம் தேன் அபிஷேகம் ஆராதனை செய்யப் பட்டது.. அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது விழா ஏற்பாடுகளை பட்டதாரி ஆசிரியர் திரு ஆர் மணிவண்ணன் கோவில் நிர்வாகம் கமிட்டி திரு ரவி ஆகியோர் சிறப்பாக செய்தனர்!

## சிறப்பாகச் செயல்பட்ட தலைமை காவலர்களுக்கு பாராட்டு




இருசக்கர வாகனத்தின் என்னை மாற்றி ஒருவர் ஒட்டி இருந்ததை கண்டுபிடித்து அதனை பிடித்து உரிமையாளரிடம் ஒப்படைத்த தலைமை காவலர்களுக்கு திட்டக்குடி காவல் உதவி ஆய்வாளர் பாக்கியராஜ் பாராட்டுத் தெரிவித்தார்.

**கடலூர், மே06:** கடலூர் மாவட்டம் திட்டக்குடி காவல் நிலையத்தில் கடந்த 5.10 2025 ஆம் தேதி விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் தாலுக்கா கீழ்புத்துப்பட்டு கிராமத்தை சேர்ந்த கோவிந்து மகன் லோகேஷ் (23) என்பவர் தனக்குச் சொந்தமான PY -01-CZ-6435 என்ற பல்சர் இருசக்கர வாகனம் திருடு போய்விட்டதாக கோட்டகுப்பம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு திட்டக்குடி காவல் நிலையத்தை சேர்ந்த தலைமை காவலர்கள் கார்த்திக் மற்றும் முகமது ரஃபீக் ஆகியோர் வாகனத் தணிக்கை செய்தபோது இருசக்கர வாகனத்தின் என்னை மாற்றி ஒருவர் ஒட்டி இருந்ததை கண்டுபிடித்து அதனை உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது மேற்படி சிறப்பாக செயல்பட்ட தலைமை காவலர்களை அழைத்து உதவி ஆய்வாளர் பாக்கியராஜ் பாராட்டி வெகுமதி கொடுத்து வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்தார்.

## விதவைத் தாயின் மகள்களுக்கு திருமண உதவித்தொகை மாவட்ட சமூக நல அலுவலர் வழங்கினார்




**வாடிப்பட்டி, மே.06:** மதுரை மாவட்ட முத்தூட் நிதி நிறுவ னம் மண்டல அலுவலக பயிற்சி மைய த்தில் சமூகப் பொறுப்பு திட்டம் மூலம் மதுரை மாவட்டத்தில் விதவை தாய்மார்களின் மகள்களுக்கு திருமண உதவி திட்டத்தின் படி திருமண உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

இந்த நிகழ்ச்சிக்கு மண்டல மேலாளர் அருண்குமார் தலைமை தாங்கினார். சமூகப் பொறுப்பு வேளாளர் ஜெயக்குமார் வரவேற்று திட்டம் பற்றி அறிமுக உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக மதுரை மாவட்ட சமூக நல அலுவலர் காந்திமதி 9 விதவை தாய்மார்களின் மகள்களுக்கு திருமண உதவியாக தலா ரூ.50,000 வீதம் நிரந்தர வைப்பு காசோலைகள் வழங்கினார்.

இதில் வருவாய் திட்ட மேலாளர் நாகராஜன், மாவட்ட மேற்பார்வையாளர் ஜெயபாண்டி, விரிவாக்க நிறுவனர் இயக்குனர் இப்னுல் ஹபீஸ், மற்றும்நிதி நிறுவன மண்டல பாதுகாப்பு அலுவலர் பால் ஜெயராஜ், மண்டல வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜேஷ் செல்வராஜ், மண்டல வணிக மேம்பாட்டு அதிகாரி முருகேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.

இதில் பல்வேறு சமூக அலுவலர்கள், தொண்டு நிறுவனத் தினர் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் மண்டல சந்தைமேலாளர் முருகான ந்தம் நன்றி கூறினார்.

## காட்பாடி கழிஞ்சூர் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் சங்கடஹர சதுர்த்தி விழா!



**வேலூர், மே 06:** வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், கழிஞ்சூர் ஸ்ரீசெல்வ விநாயகர் ஆலயத்தில் சங்கடஹர சதுர்த்தி விழா சிறப்பாக நடைபெற்றது. சங்கட ஹர சதுர்த்தி விழாவை முன்னிட்டு மாலை 4 மணிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள், தீப தூப ஆராதனை நடந்தது.

இதை யடுத்து மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீ செல்வ விநாயகருக்கு சிறப்பு பூஜைகள் நடந்தது. இதைதொடர்ந்து பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு ஸ்ரீ செல்வ விநாயகரை வழிபட்டனர்.

பூஜைக்கான ஏற்பாடுகளை ஸ்ரீ மணிகண்டன் அர்ச்சகர் வெகு விமரிசையாக செய்திருந்தார்.

பூஜையில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு ஸ்ரீ சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது.



திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் எஸ். ராமச்சந்திரன் அவர்கள் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை பெற்றுக்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலிக்கும் பரமேஸ்வரி அம்மன்



**பொள்ளாச்சி மே06** ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் திருக்கோயிலில் நம் வாசவி அம்மனுக்கு செவ்வாய்க் கிழமையை முன்னிட்டு வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், தங்க ஆபரணங்களுடன் சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர்

## மானாமதுரை சித்திரை திருவிழா வீர அழகர் கருட சேவை உலா பக்தர்கள் திரண்டு வரவேற்றனர்



**மானாமதுரை, மே 06:** சிவகங்கைமாவட்டம் மானாமதுரை ஸ்ரீ ஆனந்த வல்லி சோமநாதர் கோவிலில் சித்திரை திருவிழா தொடங்கி மே 1 ந்தேதி நிறைவு பெற்றது. அதே போல் வைகை ஆற்றில் கீழ் கரையில் உள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீ வீர அழகர் கோவிலில் கடந்த ஏப்ரல் 27 தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது.

முக்கிய விழாவான வைகை ஆற் றில் அழகர் இறங்கும் விழா இரவு வைகை ஆற்றுக்குள் மானா மதுரை கிராமத்தார் மண்ட கப்படியில் அழகர் பத்தி உலாத்தல் நிகழ்ச்சி, தசாவதார நிகழ்ச்சிக்காக வீர அழகர் கருட வாகனத்தில் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்த பின்னர் கோர்ட் டார் மண்டகப்படிக்கு எழுந்தருளினார். அதைத் தொடர்ந்து சிவகங்கை சாலை வழியாக செட்டியதெரு வழியாக மானாமதுரை ஊராட்சி ஒன்றியம் அலுவலகத்தில் எழுந்தருளினார்.

அங்கு அரசு அலுவலர்கள் பக்தர்கள் வரவேற்றனர். அதைதொடர்ந்து கருட வாகனத்தில் புறப்பட வீர அழகர் கருட சேவையில் மாரியம்மன் கோவில் தெரு, தபால் ஆபீஸ் தெரு, பிருந்தா வனம் வழியாக கோவில் திரும்பினார்.

வீதிகளில் வலம் வந்த வீர அழகரை பக்தர்கள் கோவிந்தா கோவிந்தா என அழைத்து வழிபாடு செய்தனர்.





முன்னதாக செட்டிய தெருவில் உள்ள ஸ்தபதி சண்முகம் வீட்டின் முன்பு வீர அழகரை வர வேற்று ஸ்தபதி சண்முகம் குடும்பத்தினர் ஸ்வாமி தூக்கும் சீர்பாதம் குழுவினருக்கு ஆடை தானம் தேனீர் மற்றும் பலகாரம் கொடுத்துஉபசரித்தனர்.

அங்கு வீர அழகர்க்கு சிறப்பு தீபாராதனை காட்டி பூஜை வழிபாடு நடைபெற்றது. நேற்று அப்பன் பெருமாள் கோவிலில் சந்த னக்காப்பு உற்சவத்துடன் சித்திரை திருவிழா இன்று இரவு நிறைவு பெறுகிறது.

## அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் பட்டயப் படிப்பு சேர்க்கை: விண்ணப்பப் பதிவு தொடக்கம்

**சென்னை, மே 6:**

தமிழக அரசின் அனைத்து பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான (பாலிடெக்னிக்) முதலாமாண்டு, இரண்டாம் ஆண்டு மற்றும் பகுதி நேரப் பட்டயப் படிப்புகளுக்கான சேர்க்கைக்கு விண்ணப்பப் பதிவு, சான்றிதழ் பதிவேற்றம் செய்ய இணைய வசதி தொடங்கப்பட்டுள்ளதாக தமிழக அரசின் தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் திங்கள்கிழமை அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அதில் கூறிப்பட்டுள்ளது வருமாறு: தமிழக அரசின் அனைத்து பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் 2026-27- ஆம் ஆண்டுக்கான நேரடி முதலாமாண்டு, இரண்டாமாண்டு பட்டயப் படிப்புகள் மற்றும் பகுதி நேரப் பட்டயப் படிப்புகளுக்கு HTTPS://WWW.TNPOLY.IN என்ற இணையதள வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்யவும், சான்றிதழ்களைப் பதிவேற்றமும் செய்யலாம். இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க இயலாத மாணவர்கள் மாவட்ட சேவை மையங்கள் (டிஎன்இஏ சேவை மையங்கள்) மூலம் விண்ணப்பிக்கலாம்.

முதலாமாண்டு பட்டயச் சேர்க்கைக்கான கல்வித் தகுதி பத்தாம் வகுப்பு தேர்ச்சி அல்லது அதற்கு இணையான கல்வித் தகுதியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். நேரடி இரண்டாமாண்டு பட்டயச் சேர்க்கைக்கு 12-ஆம் வகுப்பு தேர்ச்சி அல்லது அதற்கு இணையான கல்வித் தகுதியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது 10-ஆம் வகுப்பு தேர்ச்சிக்கு பின்னர், எதெனும் பொறியியல் தொழில்நுட்பப் படிப்பில் 2 ஆண்டுகள் பயின்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

நான்காண்டு பகுதிநேர பட்டயச் சேர்க்கைக்கான தகுதி பத்தாம் வகுப்பு தகுதியுடன் இரு ஆண்டுகள் பணி அனுபவம் அவசியம். கட்டணம் இணையதள வாயிலாக செலுத்தலாம். பட்டியலினத்தவர்கள் கட்டணமின்றி விண்ணப்பிக்கலாம். முதலாமாண்டு மற்றும் பகுதிநேர பட்டயப் படிப்புக்கான விண்ணப்பப் பதிவு மே 4-ஆம் தேதி தொடங்கி மே 30- ஆம் தேதி முடிவடையும். இரண்டாமாண்டு பட்டயச் சேர்க்கைக்கான கடைசி தேதி மே 25. அனைத்து பட்டயச் சேர்க்கைக்கும் மதிப்பெண் சான்றிதழ், ஜாதி அல்லது சிறப்பு பிரிவினர் சான்றிதழகள், புகைப்படங்கள் போன்றவற்றை இணையதளத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தேவையான அளவுகளில் பதிவேற்றம் செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கன்னியாகுமரியில் வீட்டு கதவை உடைத்து ரூ.25 லட்சம் நகை-, பணம் கொள்ளை

**கன்னியாகுமரி, மே 6:**

கன்னியாகுமரி சுவாமிநாதபுரம் பகவத்சிங் தெருவை சேர்ந்தவர் பொன்னையா. இவர் சிங்கப்பூரில் வேலை பார்த்து வருகிறார்.

இவருடைய மனைவி முத்துலட்சுமி. இந்த தம்பதியினருக்கு 2 மகன்கள் உள்ளனர். இதில் மூத்த மகன் துபாயில் வேலை பார்த்து வருகிறார். இளைய மகன் ஐதராபாத்தில் படிக்கிறார். இதனால் இங்குள்ள வீட்டில் முத்துலட்சுமி மட்டும் தங்கியிருந்தார்.

இந்தநிலையில் முத்துலட்சுமி கடந்த வெள்ளிக்கிழமை மாலையில் வீட்டை பூட்டி விட்டு நெல்லை மாவட்டம் வடக்கன்குளத்தில் உள்ள கோவில் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக சென்றார்.

பின்னர் நேற்று முன்தினம் மாலையில் அவர் வீட்டுக்கு வந்த போது வீட்டின் பின்பக்க கதவுகள் உடைக்கப்பட்டு திறந்து கிடந்தது.

வீட்டின் அறையில் இருந்த பொருட்கள் அனைத்தும் ஆங்காங்கே சிதறி கிடந்தன. பூஜை அறையில் சென்று பார்த்த போதும் கதவு உடைக்கப்பட்டி ருந்தது. பதற்றத்துடன் அங்கு வைத்திருந்த ரூ.12 லட்சம் ரொக்கம், 13 பவுன் நகைகளை முத்துலட்சுமி தேடியுள்ளார். ஆனால் நகை, பணத்தை காணவில்லை.

வீட்டில் ஆளில்லாததை நோட்டமிட்ட மர்மஆசாமிகள் கொள்ளைடித்து சென்றது தெரிய வந்தது. கொள்ளை போன நகை, பணத்தின் மதிப்பு ரூ.25 லட்சம் இருக்கும் என கூறப்படுகிறது.

இந்த துணிகர கொள்ளையர்களை பிடிக்க போலீசார் 2 தனிப்படையை அமைத்துள்ளனர். முதற்கட்டமாக அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராவில் ஆசாமிகளின் உருவம் பதிவாகி உள்ளதா? என போலீசார் விசாரணை நடத்தினர். மேலும் இதுதொடர்பாக வழக்குப்பதிவு செய்து மர்ம ஆசாமிகளை தேடிவருகின்றனர்.

## 8 ரயில்களை இணைக்கும் விதமாக கூடுதல் சேவை: போடி - மதுரைக்கு பகல் நேர ரயில் இயக்கக் கோரிக்கை

**மதுரை, மே 6:**




மதுரை - போடிநாயக்கனூர் இடையே அகல ரயில்பாதை பணிகள் முடிந்து ரயில் சேவை தொடங்கப்பட்டாலும், போதிய அளவில் ரயில்கள் இயக்கப்படாததால் தேனி மாவட்ட பயணிகள் மற்றும் வர்த்தகர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

மதுரை போடி இடையிலான 90.4 கி.மீ. தொலைவிற்கு, 12 ஆண்டுகள் காத்திருப்புக்குப் பிறகு கடந்த 2022 மே மாதம் முதல் ரயில் சேவை மீண்டும் தொடங்கியது. தற்போது இந்த வழித்தடத்தில் ஒரேயொரு பயணிகள் ரயில் மட்டுமே இயக்கப்படுகிறது.

இந்த ரயில் மதுரையிலிருந்து காலை 6 மணிக்கு புறப்பட்டு, தேனிக்கு 8:20 மணிக்குச் சென்றடைகிறது. பின்னர் அங்கேயே சுமார் 8 மணி நேரம் நிறுத்தி வைக்கப்பட்டு, மீண்டும் மாலை 6 மணிக்கு மேல்தான் மதுரைக்குக் கிளம்புகிறது. இதனால் பகல் நேரத்தில் பயணம் செய்ய விரும்பும் மாணவர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் வியாபாரிகளுக்கு இந்த ரயில் சேவை எவ்விதப் பயனும் அளிப்பதில்லை.

தினமும் காலையில் போடியில் இருந்து ஒரு ரயிலை இயக்கினால், அது காலை 9 மணிக்கு மதுரை வந்தடையும். இதன் மூலம் மதுரையிலிருந்து புறப்படும் கீழ்க்கண்ட 8 முக்கிய ரயில்களை பயணிகள் எளிதாகப் பிடிக்க முடியும் எனத் தேனி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்:

16343அமிர்தா விரைவு ரயில்காலை 9:2522627திருச்சி திருவனந்தபுரம் இன்டர்சிட்டிகாலை 9:3016846 நெல்லை ஈரோடு (செங்கோட்டை வழி)காலை 9:4016848 செங்கோட்டை மயிலாடுதுறைகாலை 10:1016731பாலக்காடு திருச்செந்தூர்காலை 11:00161 28குருவாயூர் சென்னைகாலை 11:2016321நாகர்கோவில் கோவை மதியம் 12:15-ராமேசுவரம் ரயில்

இதுகுறித்து தேனி மாவட்ட மக்கள் கூறுகையில், "போதிய வழித்தட வசதிகள் இருந்தும் ரயில்வே நிர்வாகம் கூடுதல் ரயில்களை இயக்காமல் எங்களை வஞ்சிக்கிறது. காலையில் போடியில் இருந்து ரயில் இயக்கப்படாததால் ஆன்மிகப் பயணம் மேற்கொள்பவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். மக்கள் பிரதிநிதிகளும், எம்.பி.க்களும் தலையிட்டு போடியில் இருந்து பகல் நேர ரயிலை இயக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என வலியுறுத்தினர்.

தற்போதுள்ள ஒற்றை ரயில் சேவையை மாற்றி அமைப்பதன் மூலமோ அல்லது புதிய ரயிலை அறிமுகப்படுத்துவதன் மூலமோ தென் மாவட்டங்களின் இணைப்புச் சங்கிலியை வலுப்படுத்த வேண்டும் என்பதே ஒட்டுமொத்த தேனி மாவட்ட மக்களின் கோரிக்கையாக உள்ளது.

## அண்ணாமலையார் கோவில் ஊழியர்களுக்கும் தெலுங்கானா மாநில பக்தர்களுக்கும் இடையே மோதல்

**திருவண்ணாமலை, மே 6:**



உலக பிரசித்தி பெற்ற பஞ்சபூத ஸ்தலங்களில் அக்னி ஸ்தலமாகவும், நினைத்தாலே முக்தி அளிக்கும் திருத்தலமாக விளங்கும் திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் வார விடுமுறை நாட்களில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா உள்ளிட்ட பல்வேறு வெளிமாநிலங்களில் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தும் 14 கிலோமீட்டர் தூரம் கொண்ட கிரிவலம் கிரிவலம் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால் அண்ணாமலையார் கோவிலில் வெளி மாநில பக்தர்கள் அதிக அளவில் குவிந்தனர். அப்போது தெலங்கானா மாநிலம் ஐதராபாத் அருகே உள்ள மணிகொண்டா பகுதியிலிருந்து 10 நபர்கள் கொண்ட குழுவினர் கோயிலுக்குள் வந்துள்ளனர், இவர்கள் அனைவரும் முறையாக வரிசையில் செல்லாமல் மாறி மாறி சென்றுள்ளனர். அப்போது கோயில் ஊழியர்கள் இதுகுறித்து கேட்டபோது இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு ஒரு கட்டத்தில் கைகலப்பாக மாறி ஒருவருக்கு ஒருவர் மாறி மாறி தாக்கிக் கொண்டதால் கோவில் வளாகத்தில் பரபரப்பு காணப்பட்ட நிலையில், அந்த தாக்குதலில் பலத்த காயமடைந்த இளம் பெண் ஒருவர் வாயிலிருந்து ரத்தம் ஓடுவதைக் கண்ட உடன் வந்திருந்தோர் மீண்டும் சரமாரியாக தாக்கியதால் கோவில் வளாகமே பெரும் கலோபுரமாக காட்சியளித்தது.

இதனை தொடர்ந்து இரண்டு தரப்பினரும் அண்ணாமலையார் கோவில் காவல் நிலையத்தில் புகார் அளித்துவிட்டு திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இரண்டு தரப்பினரும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக தெலுங்கானா மாநிலம் ஐதராபாத் அடுத்த மணிகொண்டா பகுதியை சேர்ந்த வரதன், புனித், வருண், நித்தின் மற்றும் ஷிவானி ஆகிய ஐந்து பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் படுகாயம் அடைந்த நித்தின் என்ற நபர் தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். மீதமுள்ள நான்கு நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு தற்போது அவர்களிடம் காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் ஷிவானி அணிந்திருந்த மூன்று சவரன் தங்க நகை பறிக்கப்பட்டதாகவும் பாதிக்கப்பட்ட நபர்கள் குற்றம் சாட்டினார். இதேபோல் அண்ணா மலையார் கோவில் ஊழியர்களான தன்ராஜ், மணிமாறன், சேது, திருமாறன், வசந்த், சேட்டு, செங்குட்டுவன், அருணாச்சலம், புகழ் மற்றும் ஞானசேகர் ஆகிய 10 பேர் திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## சூரிய சக்தி மின்சார உற்பத்தியில் 5.48 கோடி யூனிட்டுகளாக அதிகரித்து தமிழகம் புதிய சாதனை

**சென்னை, மே 6:**



சூரிய சக்தி மின்சார உற்பத்தியில் 5.48 கோடி யூனிட்டுகளாக அதிகரித்து தமிழகம் புதிய சாதனை படைத்து வருகிறது.

தமிழ்நாடு மின்சார வாரியம் சூரிய ஒளி, காற்றாலை போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வாயிலாக மின்சார உற்பத்தி செய்ய முக்கியத்துவம் அளித்து வருகிறது. தமிழகத்தில் தற்போது சூரிய ஒளி மின்சார நிலையங்களின் உற்பத்தி திறன் 12 ஆயிரத்து 352 மெகாவாட்டாகவும், காற்றாலைகளின் திறன் 10 ஆயிரம் மெகாவாட்டாகவும் உள்ளது.

தமிழகத்தின் மின்சார தேவை தினமும் சராசரியாக 350 மில்லியன் யூனிட்டுகள் என்ற அளவில் இருக்கும். ஆனால் கோடை காலங்களில் அதிகரித்து விடுகிறது. தமிழகத்தின் அதிகபட்ச மின்சார நுகர்வு என்பது கடந்த 2024-ம் ஆண்டு ஏப்ரல் 30-ந் தேதி 454 மில்லியன் யூனிட்டுகளாக பதிவானது. இந்த ஆண்டு கோடைகாலம் மற்றும் தேர்தல் காலமாக இருந்ததால் மின்சார நுகர்வு உச்சத்தை தொட்டுள்ளது. வெயிலின் தாக்கம் அதிகரித்து மின்சார நுகர்வு அதிகரித்தாலும், சூரிய சக்தி மின்சார உற்பத்தியும் அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டில் சூரிய சக்தி மின்சார உற்பத்தி என்பது 2026-ம் ஆண்டின் நிலவரப்படி, குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் அடைந்துள்ளது என்று மின்சார வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து எரிசக்தி துறை அதிகாரிகள் கூறியதாவது: தமிழ்நாட்டின் சூரிய சக்தி மின்சார உற்பத்தி 5.48 கோடி யூனிட்டுகளாக அதிகரித்துள்ளது. தினசரி உற்பத்தியில் புதிய சாதனை படைத்துள்ளது. மாநிலத்தின் தற்போதைய மின்சார தேவையில் சூரிய சக்தி மூலம் சுமார் 13 சதவீதத்துக்கும் மேல் பூர்த்தி செய்யப்படுகிறது.

தற்போது தமிழ்நாடு சூரிய மின்சக்தி உற்பத்தியில் இந்தியாவில் 4-வது இடத்தில் உள்ளது. 2030-ம் ஆண்டுக்குள் சூரிய சக்தி மூலம் 20 ஆயிரம் மெகாவாட் மின்சார உற்பத்தி செய்ய தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

விவசாயிகளுக்கு மானிய விலையில் சூரிய சக்தி பம்பு செட்டுகள் வழங்கும் திட்டம் மற்றும் கூரை சூரிய சக்தி திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்படுகின்றன.

தனியார் நிறுவனங்கள் அதிக திறனில் சூரிய சக்தி நிலையங்களை அமைத்து மின்சார உற்பத்திக்கு வழிவகுத்துள்ளன. உள்கட்டமைப்பை பொறுத்த வரையில் 7 ஆயிரத்து 400 மெகாவாட்டுக்கும் அதிகமான நிறுவு திறன் கொண்ட பெரிய அளவிலான சூரிய சக்தி திட்டங்கள் மற்றும் கூரை சூரிய சக்தி அமைப்புகள் மாநிலம் முழுவதும் செயல்படுகின்றன.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

## கோட்டாறில் லாரி மூலம் குடிநீர் விநியோகம்

**நாகர்கோவில், மே 6:**

கன்னியாகுமரி மாவட்டத்தில் கோடை வறட்சி காரணமாக கோட்டாறு பகுதிகளில் பத்து நாட்களுக்கு மேலாக குடிநீர் வினியோகம் இல்லாததால் பொதுமக்கள் கடும் அவதிக்கு உள்ளாகினர். இந்நிலையில மாநகராட்சி குடிநீர் வாகனம் மூலம் ஞாயிறன்று கோட்டார் செட்டி தெரு பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது.

## பணம்-நகைகள் கொள்ளை

**கன்னியாகுமரி, மே 6:**

கன்னியாகுமரி சுவாமிநாதபுரம் பகவத்சிங் தெருவை சேர்ந்தவர் பொன்னையா. இவர் சிங்கப்பூரில் பணியாற்றி வருகிறார். இவரது மனைவி முத்துலட்சுமி (வயது 52). இத்தம்பதியினருக்கு மகன்கள் உள்ளனர். மூத்த மகன் துபாயில் பணியாற்றுகிறார். இளைய மகன் ஹைதராபாத்தில் கல்வி பயின்று வருகிறார். இதனால் முத்துலட்சுமி மட்டும் வீட்டில் தனியாக வசித்து வந்தார். சம்பவத்தன்று முத்துலட்சுமி நெல்லை மாவட்டம் வடக்கன்குளத்தில் கோவில் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக வீட்டை பூட்டிவிட்டு சென்றார். அவர் வீடு திரும்பியபோது, வீடு திறந்துகிடந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். வீட்டில் இருந்த பொருட் கள் அனைத்தும் சிதறிக் கிடந்தன. வீட்டின் பின்பக்க கதவு உடைக்கப் பட்டிருப்பது தெரிய வந்தது. மர்ம நபர்கள் நள்ளிரவில் உள்ளே புகுந்து, பூஜை அறையில் வைக்கப்பட்டிருந்த ரூ.12 லட்சம் ரொக்க பணம் மற்றும் 13 சவரன் தங்க நகைகளை திருடிச் சென்றிருந்தனர். இது குறித்து முத்துலட்சுமி கன்னியாகுமரி காவல்நிலையத்தில் புகார் அளித்தார். காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பழனியில் அதிமுக வெற்றி

**பழனி, மே 6;**

பழனி தொகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக வேட்பாளராக என்.பாண்டி போட்டியிட்டார். இந்தத் தொகுதியில் அதிமுக வேட்பாளர் ரவி மனோ கரன் 66,986 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். சிபிஎம் வேட்பாளர் என்.பாண்டி 65,534 வாக்குகளும், தவெக வேட்பாளர் பிரவீன் குமார் 66,293 வாக்குகளும், நாம் தமிழர் வேட்பாளர் முருகேஸ்வரி 6,300 வாக்கு களும் பெற்றனர். 693 வாக்குகள் வித்தியாசத்தில் அதிமுக வேட்பாளர் வெற்றி பெற்றார் என்பது குறிப்பி டத்தக்கது.

## விஜய்யின் கார் ஓட்டுநரின் மகன் விருகம்பாக்கத்தில் போட்டியிட்டு வெற்றி

**சென்னை, மே 6:**

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய், தனது நீண்டகால கார் ஓட்டுநரின் மகனான சபரிநாதனுக்கு சட்டப்பேரவைத் தேர்தலில் விருகம்பாக்கம் தொகுதியில் போட்டியிட வாய்ப்பளித்திருந்தார். சபரிநாதனின் தந்தை ராஜேந்திரன் விஜய்யிடம் சுமார் 30 ஆண்டுகளாக ஓட்டுநராகவும், தனிப்பட்ட உதவியாளராகவும் பணியாற்றி வருகிறார். தவெக விருகம்பாக்கம் தொகுதிச் செயலாளராக பணியாற்றி வந்த சபரிநாதனுக்கு இந்தத் தேர்தலில் வாய்ப்பளிக்கப்பட்டது அரசியல் களத்தில் கவனம் பெற்றது.

தவெக வேட்பாளரான சபரிநாதன் 15,738 வாக்குகள் பெற்று 5,138 வாக்குகள் முன்னிலை வகிக்கிறார். திமுகவின் தற்போதைய எம்.எல்.ஏ -வான ஏ.எம்.வி. பிரபாகர ராஜா 10,600 வாக்குகளும், அதிமுகவின் முன்னாள் எம்.எல்.ஏ விருகை வி.என். ரவி 8,915 வாக்குகளும் பெற்று அடுத்தடுத்த இடத்தில் உள்ளனர்.

## தவெகவுக்கு காங்கிரஸ் ஆதரவளிக்குமா? கிரீஷ் சோடங்கர் பதில்

**சென்னை, மே 6:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக தவெக உருவெடுத்தாலும், ஆட்சி அமைக்கத் தேவையான 118 எம்எல்ஏக்கள் எண்ணிக்கைக் கிடைக்கவில்லை.

இந்த நிலையில், தமிழக பேரவைத் தேர்தல் முடிவுகள் தொடர்பாக கிரீஷ் சோடங்கர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழக இளைஞர்கள், பெண்கள் மாற்றத்துக்காக வாக்களித்துள்ளனர். எனவே, தனிப்பெரும் கட்சியாக தவெக உருவெடுத்துள்ளது. ஏற்கெனவே, தமிழக தேர்தல் முடிவுகள் தொடர்பாக அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஆகியோருக்கு அறிக்கை அனுப்பியுள்ளேன். தேர்தலில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை தவெக நிறைவேற்ற வேண்டும். விஜய்யிக்கு வாழ்த்துகள் என்றார் அவர்.

## கோடை விடுமுறை முடியும் வரை திருமலையில் நேரடி இலவச தரிசன டோக்கன்கள் ரத்து

**திருமலை, மே 6:**

கோடை விடுமுறையையொட்டி பக்தர்கள் வருகை அதிகரித்துள்ளது. சனிக்கிழமை நிலவரப்படி தர்ம தரிசனத்துக்கு (தரிசன டோக்கன்கள் இல்லாதவர்கள்) 24 மணிநேரமும், ரூ.300 விரைவு தரிசனத்துக்கு 3 முதல் 4 மணிநேரம் ஆனது.

மேலும், நேரடி இலவச தரிசன டோக்கன்கள் வழங்குவதை வெள்ளிக்கிழமை முதல் கோடை விடுமுறை முடியும் வரை தேவஸ்தானம் ரத்துசெய்துள்ளது. அலிபிரி வழியில் திவ்ய தரிசன டோக்கன்கள் வழங்குவது ரத்து செய்யப்பட்டுள்ளது. வெள்ளிக்கிழமை முழுவதும் 71, 008 பக்தர்கள் தரிசனம் செய்தனர்; 36, 144 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர்.

உண்டியல் காணிக்கையை கணக்கிட்டதில் ரூ.3.52 கோடி வசூலானது. இனி தரிசன டிக்கெட்டுகள் இல்லாமல் ஏழுமலையான் தரிசனத்திற்காக திருமலைக்கு வரும் பக்தர்கள் காத்திருப்பு அறைகளில் காத்திருந்து மட்டுமே தரிசனத்துக்கு செல்ல முடியும். எனவே பக்தர்கள் தங்கள் பயணத்தை திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும் என தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

## எஸ்.வி. அன்னபிரசாதம் அறக்கட்டளைக்கு ரூ. 1 கோடி நன்கொடை

**திருமலை, மே 6:**

ஏழுமலையான் சேவையின் ஒரு பகுதியாக, ஹைதராபாதைச் சேர்ந்த பெயர் குறிப்பிட விரும்பாத பக்தர் ஒருவர் எஸ்.வி. அன்னபிரசாதம் அறக்கட்டளைக்கு ரூ. 1,00,10,116 நன்கொடையாக வழங்கினார்.

இந்த நன்கொடைக்கான வரைவோலை, திங்களன்று திருமலை தேவஸ்தான நிர்வாகக் கட்டிடத்தில் உள்ள செயல் அலுவலர் அறையில், திருமலை தேவஸ்தான செயல் அலுவலர் ரவிச்சந்திராவிடம் ஒப்படைக்கப்பட்டது.

## ஸ்ரீ பத்மாவதி தாயார் வசந்தோற்சவம் நிறைவு

**திருமலை, மே 6:**

திருச்சானூரில் உள்ள ஸ்ரீ பத்மாவதி தாயார் கோவிலில் மூன்று நாட்கள் நடைபெற்ற வருடாந்திர வசந்தோற்சவம் சனிக்கிழமையன்று நிறைவடைந்தது.

இறுதி நாள் நிகழ்வுகளின் ஒரு பகுதியாக, காலையில் சுப்ரபாதத்துடன் தாயாரை துயில் எழுப்பி சகஸ்ரநாமார்ச்சனை செய்யப்பட்டது. பின்னர், தாயாரின் உற்சவமூர்த்தி ஊர்வலமாக வெள்ளிக்கிழமை தோட்டத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

பிற்பகல் 2.30 மணி முதல் 4.30 மணி வரை ஸ்நபன திருமஞ்சனம் நடைபெற்றது. மாலை 7.30 மணி முதல் 8.30 மணி வரை, கோவிலின் நான்கு மாட வீதிகளிலும் தாயார் புறப்பாடு கண்டருளினார். அதனைத் தொடர்ந்து, யாகம் வளர்த்து மகாபூர்ணாஹுதியுடன் தாயாரின் வருடாந்திர வசந்தோற்சவம் நிறைவடைந்தது.

## மயிலாடுதுறை ஐயாறப்பர் கோவிலில் சித்திரை சப்தஸ்தான பெருவிழா



**மயிலாடுதுறை, மே 6:**


மயிலாடுதுறையில் சோழர் காலத்தில் கட்டப்பட்ட அறம்வளர்த்த நாயகி சமேத ஐயாறப்பர் சுவாமி கோவில் உள்ளது. திருவையாறில் நடைபெறும் சப்தஸ்தான பெருவிழாவைப் போன்று இந்த கோவிலில் ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் சப்தஸ்தான பெருவிழா விமரிசையாக நடைபெறுவது வழக்கம்.

ஏழூர் திருவிழா எனப்படும் சித்திரை சப்தஸ்தான பெருவிழாவில் மயிலாடுதுறை மாயூரநாதர், கூறைநாடு புனுகீஸ்வரர், சித்தர்காடு பிரம்மபுரீஸ்வரர், மூவலூர் மார்க்கசகாயேஸ்வரர், சோழம்பேட்டை அழகியநாதர், திருவிழந்தூர் தான்தோன்றீஸ்வரர் ஆகிய கோவில்களில் இருந்து சுவாமி, அம்பாள் உள்ளிட்ட பஞ்சமூர்த்திகள் புறப்பாடாகி மாயூரநாதர் கோவிலில் ஒரே இடத்தில் சப்தஸ்தான விழா நடப்பது வழக்கமாகும்.

அவ்வகையில் நிகழாண்டு சப்தஸ்தான பெருவிழா ஏப்.22-ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவின் முக்கிய நிகழ்வான ஏழூர் சுவாமிகள் எழுந்தருளும் சப்தஸ்தான பெருவிழா நடைபெற்றது. சித்தர்காடு பிரம்மபுரீஸ்வரர், மூவலூர் மார்க்கசகாயேஸ்வரர் கோவில்களில் பாலாலயம் செய்யப்பட்டுள்ளதால், மற்ற கோவில்களில் இருந்து பஞ்சமூர்த்திகள் விழாவில் எழுந்தருளினர். பின்னர், அனைத்து கோவில்களின் பஞ்சமூர்த்திகள் சமயக்குரவர்களான அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோருக்கு காட்சி கொடுக்கும் ஐதீக உற்சவம் நடைபெற்றது.

## ஏழுமலையான் தரிசனம்: 8 மணி நேரம் காத்திருப்பு





**திருமலை, மே 6:**

திருமலை ஏழுமலையானை தரிசிக்க பக்தர்கள் தர்ம தரிசனத்தில் 8 மணி நேரம் காத்திருந்தனர்.

திருமலையில் திங்கள்கிழமை காலை நிலவரப்படி, வைகுண்டம் காத்திருப்பு அறைகளில் உள்ள 10 அறைகளில் பக்தர்கள் ஏழுமலையான் தரிசனத்துக்காக காத்திருந்தனர்.

தர்ம தரிசனத்துக்கு (தரிசன டோக்கன்கள் இல்லாதவர்கள்) 8 மணி நேரமும், ரூ.300 விரைவு தரிசனத்துக்கு 3 முதல் 4 மணி நேரமும் ஆனது. நேரடி இலவச தரிசன டோக்கன்கள் வழங்குவதை வெள்ளிக்கிழமை முதல் கோடை விடுமுறை முடியும் வரை தேவஸ்தானம் ரத்து செய்துள்ளது.

அலிபிரி நடைபாதை வழியாக மதியம் 2 மணி வரை 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள், பக்தர்களும், அவர்களின் பெற்றோர்களும், இரவு 10 மணி வரை அனைத்து பக்தர்களும் அனுமதிக்கப்படுகின்றனர். எனினும் அலிபிரி வழியில் திவ்ய தரிசன டோக்கன்கள் வழங்குவது ரத்து செய்யப்பட்டுள்ளது.

ஏழுமலையானை ஞாயிற்றுக்கிழமை முழுவதும் 83,098 பக்தர்கள் தரிசனம் செய்தனர்; இவர்களில் 37,187 பேர் தலைமுடி காணிக்கை செலுத்தினர்.

உண்டியல் மூலம் பக்தர்கள் சமர்ப்பித்த காணிக்கைகளைக் கணக்கிட்டதில், ரூ. 5.06 கோடி வசூலானதாக தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

இனி தரிசன டிக்கெட்டுகள் இல்லாமல் ஏழுமலையான் தரிசனத்துக்காக திருமலைக்கு வரும் பக்தர்கள் காத்திருப்பு அறைகளில் காத்திருந்து மட்டுமே தரிசனத்துக்குச் செல்ல முடியும். எனவே பக்தர்கள் தங்கள் பயணத்தை திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும் என தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

## திருமலையில் கூட்ட நெரிசல்: பக்தர்களுக்கு விரிவான மருத்துவ சேவைகள்!



**திருமலை, மே 6:**

கோடை விடுமுறை கூட்ட நெரிசல் அடுத்து திருமலையில் பக்தர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதில் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது.

கோடை விடுமுறையை ஒட்டி திருமலைக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடும் கூட்ட நெரிசலைக் கருத்தில் கொண்டு, பக்தர்களுக்குச் சிறந்த மருத்துவ மற்றும் பாதுகாப்பு வசதிகளை வழங்குவதற்காகத் திருமலை திருப்பதி தேவஸ்தானம் சிறப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

அதன்படி, பட்டகங்கம்மா வளைவு முதல் கோகர்ப்பம் அணை வளைவு வரையிலும், வெளிவட்டச் சாலை நெடுகிலும் நிழல் தரும் பந்தல்களை அமைப்பது உள்ளிட்ட, ரூ.2 கோடி மதிப்பிலான பொறியியல் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

வைகுண்டம் வரிசை வளாகம்-2, அருங்காட்சியக வளாகம் மற்றும் நாராயணகிரி பூங்கா ஆகிய இடங்களில் கூடுதல் நிழல் பந்தல்கள், வெப்பத்தின் தாக்கத்தைக் குறைக்கும் வகையில், வரிசைப் பாதைகளிலும் நான்கு மாட வீதிகளிலும் வெப்பத்தைத் தணிக்கும் சிறப்பு வர்ணம் பூசப்பட்டுள்ளது. குடிநீரைத் தடையின்றி விநியோகிப்பதற்காகச் சுகாதாரத் துறை தன்னார்வலர்களைப் பணியில் அமர்த்தியுள்ளது.


மேலும், வரிசைப் பாதைகளிலும் பொது இடங்களிலும் தூய்மைப் பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ளது. மொத்தம் 16 மருத்துவ மையங்களும், வரிசைப் பாதைகள் மற்றும் நாராயணகிரி பூங்கா ஆகிய இடங்களில் நடமாடும் முதலுதவிப் பிரிவுகளும் பக்தர்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.






## நலம் தரும் மருத்துவம்

### 'குளிர்ச்சியாகவும், நீரேற்றமாகவும், ஆரோக்கியமாகவும் இருக்க...



தர்பூசணி, முலாம்பழம், ஆரஞ்சு, ஆப்பிள் மற்றும் பேரிக்காய் ஆகியவை உடலுக்கு நீர்ச்சத்தை அளித்து, அத்தியாவசிய வைட்டமின்களை வழங்குகின்றன.

வெள்ளரிக்காய், தக்காளி, கீரை மற்றும் சாலடுகள், செரிமானத்தை சீராக வைத்து, உணவை இலகுவாக்குகின்றன.

புரோபயாடிக்குகள் நிறைந்த தயிர் மற்றும் மோர், குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதோடு, இயற்கையான குளிர்ச்சியையும் அளிக்கின்றன.

பழுப்பு அரிசி, குயினோவா, ஓட்ஸ் மற்றும் சிறுதானியங்கள் ஆகியவை ஆற்றல் மற்றும் நார்ச்சத்துக்கான சிறந்த ஆதாரங்களாகும்.

இளநீர், எலுமிச்சை நீர், மூலிகை தேநீர் மற்றும் புதிய பழச்சாறுகள் உடலில் திரவ சமநிலையைப் பராமரிக்க உதவுகின்றன.

கிச்சடி, வேகவைத்த பருப்பு, மற்றும் சூப்கள் போன்ற எளிய உணவுகள், லேசான மற்றும் வேகவைத்த உணவுகள் உடலை அதிக வெப்பமாக்காமல் ஆற்றலை வழங்குகின்றன.

பொதுவாக இந்த வெப்ப அலையால் ஏற்படும் மனித உடல் பாதிப்புகளை தடுக்க தாகம் இல்லாவிட்டாலும் தண்ணீர், பழச்சாறு அல்லது உப்பு, சர்க்கரை கரைசல் குடிக்க வேண்டும். வெளியே செல்லும் போது அடர் நிற உடைகளை தவிர்த்து வெளிர் நிற பருத்தி ஆடைகள் அணிய வேண்டும். குடை, தொப்பி அல்லது துணியால் தலையை மூடிக்கொள்ள வேண்டும். காற்றோட்டமான இடங்களில் இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது..

## யூ டியூபின் புதிய அப்டேட்: இனி வீடியோ பார்த்துக்கொண்டே மற்ற வேலைகளையும் செய்யலாம்!

நமது அன்றாடத் தேவைகளில் ஒன்றாக மாறிவிட்ட யூடியூப், பயனர்களின் நீண்ட கால எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒரு அதிரடி மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளது. 'பிக்சர்-இன்-பிக்சர்' (PICTURE-IN-PICTURE - PIP) எனப்படும் வசதியை இனி அனைத்துப் பயனர்களும் பயன்படுத்தலாம் என்று அறிவித்துள்ளது. இதன் மூலம் வீடியோக்களைப் பார்த்துக்கொண்டே, திரையில் மற்ற செயலிகளையும் ஒரே நேரத்தில் பயன்படுத்த முடியும். இந்த வசதி உலகளவில் படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட்டுவருவதால், மொபைல் பயன்பாடு இனி இன்னும் எளிதாகப் போகிறது.

### பிக்சர்-இன்-பிக்சர் (PIP) என்றால் என்ன?

சுருக்கமாகச் சொன்னால், PIP என்பது ஒரு மிதக்கும் விண்டோ (FLOATING WINDOW) வசதியாகும். வழக்கமாக யூடியூப்பில் ஒரு வீடியோவைப் பார்க்கும்போது, நாம் அந்த ஆப்பை விட்டு வெளியேறினால் வீடியோ நின்றுவிடும்.

ஆனால், இந்த PIP வசதி இருந்தால், நீங்கள் ஆப்பை மூடினாலும் வீடியோ ஒரு சிறிய கட்டத்திற்குள் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கும். இந்தச் சிறிய திரையை நீங்கள் போனின் எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் நகர்த்திக்கொள்ளலாம், அதன் அளவை மாற்றிக் கொள்ளலாம். இதனால் வீடியோவை ரசித்துக்கொண்டே நண்பர்களுக்கு மெசேஜ் அனுப்பவோ அல்லது இணையதளங்களில் தேடவோ முடியும். முன்னதாக, இந்த வசதி யூடியூப் பிரீமியம் (YOUTUBE PREMIUM) சந்தாதாரர்களுக்கும், குறிப்பிட்ட சில நாடுகளுக்கு மட்டுமே பிரத்யேகமாக வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போது, இந்த எல்லையை யூடியூப் உடைத்துள்ளது. சாதாரண பயனர்களுக்கும் இந்த வசதி விரிவுபடுத்தப் பட்டுள்ளது. இதில் ஒரு சிறிய வித்தியாசம் உள்ளது.




சாதாரண பயனர்கள்: இசை அல்லாத (NON-MUSIC) சாதாரண வீடியோக்களுக்கு மட்டும் இந்த PIP வசதியைப் பயன்படுத்தலாம்.

பிரீமியம் பயனர்கள்: பாடல்கள், மியூசிக் ஆல்பங்கள் உட்பட அனைத்து வகையான வீடியோக்களுக்கும் இந்த வசதியைப் பெறலாம்.

### இந்த அம்சம் எவ்வாறு செயல்படுகிறது?

இந்த வசதியைப் பயன்படுத்துவது மிகவும் எளிது. நீங்கள் யூடியூப் ஆப்பில் ஏதேனும் ஒரு வீடியோவைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது, நேரடியாக ஹோம் பட்டனை அழுத்தினால் அல்லது வேறு ஆப்பிற்கு மாறினால், வீடியோ தானாகவே ஒரு சிறிய மிதக்கும் திரையாக மாறிவிடும். அந்தச் சிறிய திரையிலேயே வீடியோவை நிறுத்துவதற்கும் (PAUSE), இயக்குவதற்கும் (PLAY) வசதிகள் இருக்கும். மின்னஞ்சல்களைச் சரிபார்க்கும்போதோ அல்லது சமூக வலைத்தளங்களில் ஸ்க்ரோல் செய்யும்போதோ வீடியோ தடைபடாமல் ஓடுவது ஒரு சிறந்த மல்டிடாஸ்கிங் அனுபவத்தைத் தருகிறது.

### PIP வசதியை ஆன் அல்லது ஆ∴ப் செய்வது எப்படி?

இந்த வசதி உங்கள் போனில் செயல்படவில்லை என்றால் அல்லது இதை நீங்கள் தவிர்க்க விரும்பினால், கீழ்க்கண்ட முறையைப் பின்பற்றலாம்.

உங்கள் போனின் செட்டிங்ஸ் பகுதிக்குச் சென்று, ஆப்ஸ் (APPS) பிரிவில் யூடியூப்பைத் தேர்ந்தெடுத்து, அதில் 'PICTURE-IN-PICTURE' ஆப்ஷனை 'ALLOW' செய்ய வேண்டும். யூடியூப் ஆப்பிற்குள் சென்று, செட்டிங்ஸ் (SETTINGS) சென்று, பின்பு ஜெனரல் (GENERAL) பகுதிக்குச் சென்றால் அங்கேயும் PIP வசதியை ஆன் அல்லது ஆ∴ப் செய்துகொள்ளலாம்.

உங்கள் போனின் இயங்குதளத்தைப் பொறுத்து இந்த செட்டிங்ஸ் சற்று மாறுபடலாம்.

இன்றைய வேகமான உலகில், நாம் ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்ய விரும்புகிறோம். குறிப்பாக இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் கல்வி தொடர்பான வீடியோக்களைப் பார்த்துக்கொண்டே குறிப்புகள் எடுக்க இந்த PIP வசதி பெரிதும் உதவும். தனது பயனர் அனுபவத்தை மேம்படுத்த யூடியூப் எடுத்துள்ள இந்த முடிவு, சந்தையில் அதன் ஆதிக்கத்தைத் தக்கவைக்க உதவும்.

யூடியூப்பின் இந்த 'பிக்சர்-இன்-பிக்சர்' விரிவாக்கம் என்பது பயனர்களின் மொபைல் பயன்பாட்டு நேரத்தை அதிகப்படுத்துவதோடு, சுவாரஸ்யமான வீடியோக்களைப் பார்க்கும்போது மற்ற வேலைகளைத் தள்ளிப்போட வேண்டிய அவசியத்தையும் குறைக்கிறது. உலகெங்கிலும் உள்ள கோடிக்கணக்கான பயனர்களுக்கு இது ஒரு பயனுள்ள மற்றும் மகிழ்ச்சியான செய்தியாகும். இனி உங்கள் மொபைல் திரையில் பொழுதுபோக்கும் வேலையும் தடையின்றி ஒன்றாகப் பயணிக்கும்.

# காதல் அகதிகள் !



" கீதா, என்ன சொல்றே ?" நம்ப முடியாமல் சுதா கேட்டாள். இருவரும் அக்கா தங்கைகள். கீதா பெரியவள். ஒரு முக்கியமான விஷயம் பற்றி பேசுவதற்காக இருவரும் பார்க்குக்கு வந்து ஒரு மூலையில் அமர்ந்திருத்தனர்.

" ஆமாம் சுதா ! நான் ஒருத்தரை மனதார காதலிக்குறேன். அதனால்தான் எனக்காக அப்பா பார்த்த மூணு வரனையும் தட்டிக் கழிச்சேன் ."

" சரி, அப்பாக்கிட்ட நேர சொல்ல வேண்டியதுதானே! அப்பாவும் விழுந்து விழுந்து உனக்காக ஏன் வரன் தேடணும்?"

" சொல்றதுக்கு பயமாயிருக்கு சுதா ! ப்ளீஸ் எனக்காக நீ அப்பாகிட்ட சொல்லிப் பாரேன். "

" சரி, யார் அவர் ?"

" உனக்குத் தெரிஞ்சவர்தான் சுதா !"

சுதா புருவம் நெருக்கிக் கேட்டாள். " என்ன சொல்றே, எனக்குத் தெரிஞ்சவரா ?"

" ஆமாம், வேற யாருமில்ல. நம்ம எதிர் வீட்டு ரங்கமணிதான். "

" வாட்..." அதிர்ச்சியில் தாக்குண்டு போய் கேட்டாள் சுதா. " ஆமாம் சுதா, எனக்கு அவரை ரொம்பவும் பிடிச்சிருக்கு ..." மேற்கொண்டு தொடரும் முன்னால் சுதா இடை மறித்தாள். " சரி, அந்த ரங்கமணிக்கு உன் மேல ஆசை இருக்கா?"

" அது எனக்குத் தெரியாது. ஆனால் எனக்கு அவர் மேல கொள்ளை ஆசை !" வேதனையுடன் சிரித்தாள் சுதா. தன் காதலனையே பங்கு போட அக்கா கேட்பது விசித்திரமாகவும் இருந்தது. சுதாவும் ரங்கமணியும் கடந்த ஆறு மாதங்களாக காதலிக்கின்றனர் .

அக்கா கீதா கல்யாணமாகி புகுந்த வீடு போனதும் தன் காதல் விஷயம் பற்றி அப்பாவிடம் கூறலாம் என நினைத்துக் கொண்டிருந்தாள்சுதா. ஆனால் கதை வேற வழியில் போய்அதுவும் தனக்கு பெரிய இடர்பாடு ஒன்றை ஏற்படுத்தப் போகிறது என்பதை சுதா கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. இதில் எந்த அளவிற்கு ரங்கமணியின் ஒத்துழைப்பு கிடைக்கும் எனவும் தெரியவில்லை. ஆனாலும் அக்காவுக்காக விட்டுக் கொடுக்கலாம் என நினைத்து இந்த விஷயத்தை தந்தைக்குச் சொல்ல கொஞ்ச நாள் எடுத்துக் கொண்டாள் சுதா. தன் காதலனையும் கன்வின்ஸ் பண்ணி அக்காவை திருமணம் செய்து கொள்ளும்படி செய்ய வேண்டும் எனவும் எண்ணம் கொண்டாள் சுதா .

ஆனால் அடுத்த சில நாளில் ரங்கமணி ஆஃபிஸ் வேலையாக மூன்று வருட காண்ட்ராக்டில் ஸ்டேட்ஸ் புறப்பட்டுச் சென்றான். தன் அக்கா அவனை நேசிப்பதை சுதாவால் சொல்ல முடியவில்லை . ஸ்டேட்ஸ் சென்றவன் கொஞ்சம் கொஞ்சமாக சுதாவிடம் தொடர்பு கொள்வதை நிறுத்திக் கொண்டான். கவலையுற்றாள் சுதா. ஆனால் ஸ்டேட்ஸிலேயே ஒரு தமிழ்ப் பெண்ணை ரங்கமணி திருமணம் செய்து கொண்டது தெரியாமல் பாவம் இன்னும் அவனை நினைத்து வாடிக்கொண்டிருக்கிறாள் சுதா . ஏறக்குறைய கீதாவுக்கும் இதே நிலைதான்!

**வி.கே.லக்ஷ்மிநாராயணன்**

# "ஒற்றுமையே வெற்றி"



காட்டில் சிங்கமும்புலியும் மோதிக் கொண்டிருந்தன. ஒரு இரைக்காக இரண்டும் போராடின. கர்ஜனை, கோபம், நகம், பற்கள் அனைத்தும் வெளிப்பட்டன.

வானத்தில் ஒரு கழுகு வட்டமிட்டுக் கொண்டிருந்தது. "சண்டை போட்டு ஓயட்டும்... இரையும் நாம கைப்பற்றிடலாம்"அது காத்திருந்தது.

நகரத்தில்... வித்யாகரும், சுரேஷும் பெரிய வியாபாரிகள். சரியான போட்டியாளர்கள். ஆனால் அது போட்டியாக மட்டுமில்லாமல், பொறாமையாக மாறியது.

"அவனைக் கீழே இறக்கணும்!"

"அவனைக் கவிழ்க்கணும்'

இருவரும் ஒருவர் வியாபாரத்தை ஒருவர் கெடுக்கத் தொடங்கினர். விலைக் குறைப்பு, பொய்யான வதந்திகள்,ஊழியர்களை இழுத்தல், என கவனத்தைத் திருப்பியதில் தங்கள் வியாபாரத்தையே மறந்து விட்டார்கள்.

அப்போது அருணாச்சலம் என்ற மூன்றாவது வியாபாரி அமைதியாக காத்திருந்தான். "இவர்கள் சண்டை போடுவதுதான் எனக்கு சாதகம்,"

புதிய திட்டங்களுடன், நல்ல தரத்துடன்,குறைந்த விலையுடன் சந்தைக்குள் நுழைந்தான். கூட்டம் அவன் பக்கம் திரும்பியது.

சில மாதங்களில்... வித்யாகரும், சுரேஷும் பெரும் நஷ்டத்தில் மூழ்கினர்.


ஒருநாள், இருவரும் நேருக்கு நேர் சந்தித்தனர். "நாம சண்டை போட்டதால தான் இது நடந்தது..." என்றான் வித்யாகர். சுரேஷும் அதை ஒப்புக் கொள்ள, இருவரும் கைகுலுக்கிக் கொண்டனர்.

ஒன்றாக இணைந்து, புதிய திட்டம் தொடங்கினர். தரத்தையும் நம்பிக்கையையும் மீண்டும் கொண்டு வந்தனர்.


காட்டில், சண்டை போட்டுச் சோர்ந்த சிங்கமும் புலியும்... மேலே பறக்கும் கழுகை பார்த்து உணர்ந்தன. சண்டையை நிறுத்திக் கொண்டன.



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



# ஊர்மிளையின் ஊமைமனம் 11



**கே.பானுமதி நாச்சியார்**
சிவகிரி

## சீதையின் நினைவுகள்

"ஊர்மிளா! இப்பட்டாபிஷேக ஓவியத்தை அண்ணனிடமும் காட்டுவோமா?" என்றான் நடந்து கொண்டே.

இதனை முன்பே சொல்லி இருக்கலாமே! வேகமாக நடைபோட்டு அதனைப் பத்திரமாக ஒரு பேழையில் இட்டுக் கொணர்ந்தாள். அதனை வாங்கிய லக்குவனன் முகத்தில் சந்தோஷம் குடி கொண்டது.

"அண்ணா இதனைப் பார்த்தால் ரொம்பவும் சந்தோஷப்படுவார் ஊர்மிளா!

"அவர்கள் இருவருக்கும் ஓவியத்தில் இருப்பவர்களைப் பார்த்தால் வனத்தில் நடந்தவைகள் ஞாபகம் வரும். நன்று நன்று!" என்று நினைத்தான்.

அத்தாணி மண்டபத்தில் இவர்களைக் கண்ட ராமனும் சீதையும் மிகவும் மகிழ, சீதை ஊர்மிளையிடம் "சௌக்கியமாக இருக்கிறாயா? சந்தோஷமாக இருக்கிறாயா?" என்றவுடன் ராமன் சீதையின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

அதற்குள் லக்குவனன் ராமன் இடத்தில் ஊர்மிளையின் கைவண்ணத்தில் வரைந்த பட்டாபிஷேக ஓவியப் பேழையைத் திறந்து பட்டாபிஷேக ஓவியத்தை இலக்குவனன் ஊர்மிளா வரைந்ததாகக் காண்பித்தான்.

உடனே அவனும் சீதையிடத்து அதனைக் காண்பித்து மகிழ்ந்தான். அனுமனை, அங்கதனை, சுக்ரீவனை, சாம்பவனை, விபீடணனைக் கண்ட சீதையின் மனம் அசோக வனத்திற்குச் சென்றது. ஆழ்ந்த பெருமூச்சு ஒன்றில் "அங்கு இனி செல்ல வாய்ப்பு உண்டா?" என்பது போல் இருந்தது.

ஊர்மிளையின் கைவண்ணத்தைக் கண்டு ராமன் முகத்தில் ஏகப்பட்ட ஒளி. "அனுமனே அரியணை தாங்கினான்!" என்ற ஊர்மிளையின் சொற்களைக் கேட்டவன், தலையை அசைத்துக் கொண்டு "இவன் சுந்தரன், பேச்சிலும் செயலிலும்!" என்றான்.

"இவன் இளையோனை இருமுறை உயிர்பிழைக்க வைத்திருக்கிறான். என்னை ஒரு முறையும் சீதா பிராட்டியை ஒரு முறையும் இப்போது பரதனின் உயிரையும் தக்க சமயத்தில் காத்தவன். என்னிடத்தில் அபரிதமான அன்பு பிரியம் வைத்தவன். எங்கு ராம நாமம் கேட்கிறதோ அங்கு உடன் வருவான். அவனுக்குச் சிரஞ்சீவி என்ற ஆசீர்வாதத்தைச் சீதையிடம் பெற்றான்!"

அப்பொழுது ஊர்மிளை சீதையிடம் "அனுமனைப் பற்றி ஒரு தகவல் சொல்லட்டுமா?" என்றாள்.

அன்று லக்குவனன் வரவில்லை என்பதால் ஊர்மிளா தன் அன்பருக்குக் குறிப்பாக ஏதோ சொல்ல நினைக்கிறாள் என்று நினைத்தாள் சீதா.

ஊர்மிளா தொடர்ந்தாள் "பட்டாபிஷேகம் முடிந்து எல்லோருக்கும் பரிசளிக்கும் போது சீதைக்கா இவருக்கு ஒரு முத்துமாலை கொடுத்தாள்".

"ஆஹா! எப்பேர்பட்ட பரிசு!" என்றான் லக்குவன்.

ஆனால் வாங்கிய அனுமன் ஒரு ஓரத்தில் அமர்ந்து "என்ன செய்தார் தெரியுமா?" என்றாள் குறும்பாக.

"ஆஹா ஏதோ குறும்பு செய்து விட்டாரோ அனுமன்!" என்றான் தன் நிலையைச் சொற்கள் ஆக்கி.



"குறும்பு என்று சொல்ல முடியாது, எல்லாருக்கும் பொருள் விளங்கும் படியான ஒரு செயல் என்று சொல்லலாம் இல்லையா அக்கா!"என்றாள் ஊர்மிளை.

"அப்படி என்ன செய்தார்? "

முத்து மாலையைக் கையில் எடுத்து ஒவ்வொரு முத்தாகக் கடித்துக் காதில் வைத்து பார்த்துத் தூர எறிந்து கொண்டிருந்தார்.

"சீதா பிராட்டி ஒன்றும் சொல்லவில்லையா? "

"சொல்லாமல் இருப்பார்களா என்ன?" உடனே சீத்தாக்கா "அனுமனே! என்ன காரியம் செய்கிறீர்கள்? இது என்னை அவமானப்படுத்துவது போல் இல்லையா?" என்றாள்.

"இல்லை தேவி! இதில் எனக்கு என் ராம நாமம் கேட்கவில்லை. எனவே என்னால் இதனை விருப்புற்று ஏற்றுக் கொள்ள முடியவில்லை!" என்றான்.

சீதா அக்கா கண்களில் கண்ணீர் பெருகியது. "இல்லையா அக்கா?" என்று சீதையையும் துணைக்கு அழைத்தாள்.

"ஏனாம்! அது என்ன ஆனந்தக் கண்ணீரோ!"

"ஆமாம்! அவளின் நினைவில் ஒரு முறை அனுமன் சீதக்காவிடம் "நெற்றியில் சிந்தூர் இடுவது எதற்காக?" என்று கேட்க "ராமபிரான் நன்றாக இருக்க வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் இடும் சிந்தூரமிது!" என்றாராம்

"ஒரு சிறு கீற்று சிந்தூர் எம் ராமபிரானைக் காக்கும் என்றால் நான் உடல் முழுதும் பூசிக் கொள்வேன் என்று சிந்தூர் அனுமனாகத் தோன்றினாராம்!"

வெட்கத்தால் முகத்தில் செவ்வரி ஓட, பழைய நினைவுகளில் மூழ்கினாள் சீதை.

"சூர்ப்பநகை தவிர்த்து வனத்தில் நடந்தவை அத்தனையும் தித்திப்பே!" இதற்கெல்லாம் காரணமான கைகேயி அன்னையை எத்தனை தரம் போற்றினாலும் தகும்!" என்றனர்.

"அது சரி உம்மை இருமுறை காத்தான் என்றீர்களே அது எப்போது?" எனக் கேட்டாள் மெதுவாக லக்குவனிடம்.

அங்கு நடந்த கதைகளைக் கூற கூறத் தித்திப்புடன் காலத்தையும் எடுத்துக் கொள்ளும்.

ராமர் ஊர்மிளையிடம், "ஊர்மிளை! இலக்குவனிடம் காட்டில் நடந்த அத்தனை நிகழ்ச்சிகளையும் கேட்டு அதனை ஓவியமாகத் தீட்டித் தருவாயாக!" என்றார்.

நேற்று தன் அன்பரிடம் தான் கூறியதை நினைவுப் படுத்திக் கொண்டாள் ஊர்மிளை. "அன்பரே! எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாக, அத்தனை நிகழ்வுகளையும் சொல்லி விடுங்கள்! நான் ஓவியமாகத் தீட்டி வைக்கிறேன். நமக்குப் பின்னும் அவை உயிரோடு காவியம் பாடும் அல்லவா?"

வார்த்தைகள் நினைவில் வர, ராமரைப் பார்த்து "பிரபு கண்டிப்பாக ஓவியங்களைத் தீட்டுகிறேன்!" என்றாள்.

சீதை அவ்வோவியத்தையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அனுமனை, அங்கதனை, சுக்ரீவனை, சாம்பவனை, விபீடனனை கண்ட சீதையின் மனம் அசோகவனத்திற்குள் சென்றது. ஆழ்ந்த பெருமூச்சு வந்தது. அவள் அருகில் வந்த ஊர்மிளையிடம் " உன் இந்த ஓவியம் அழகாக உள்ளது. அதில் வரைந்தவை உயிர்பெற்றன போல் உள்ளன".

"ஆம்!.அக்கா நிறைய காட்சிகள் என் கண்முன்னே வந்து போகிறது! நேற்று கூட அன்பரிடத்தில் சூர்ப்பநகை பற்றிக் கேட்டேன்".

சீதையின் உடல் நடுங்கி ஒடுங்கியதை உணர முடிந்தது.

"ஆம்! அவளைச் சந்தித்தது தான் வனத்திலேயே ஒரு பெரும் பிழை!" என்றாள்.

அதற்குள் "அது என்ன அன்பர்! அது யார்?" என்றார் ராமர்.

"நான் பிரான், பிரபு, நாதா என்று சொல்லுவதுபோல் ஊர்மிளா அன்பர் என்று சொல்கிறாள்!" என்றாள் சிரித்துக் கொண்டே சீதா.

"சரி ஊர்மிளா! என்னவெல்லாம் ஓவியத்தில் தீட்டப் போகிறாய்!" என்று ஆர்வமாக கேட்டாள்.

"நான் முதல் முதலில் பார்த்தது கங்கைக்கரை நாவாய் மைந்தன் குகனை. அவனுடன் படகில் நீங்கள் வேகமாக. சென்றதனை முதலில் வரையப் போகிறேன்!"

ஆமாம்! கங்கை நதியின் இயற்கை காட்சிகளை வரை! கோதாவரி வரை! எனக்குக் கோவையாகச் சொல்லத் தெரியவில்லை. லக்குவனனிடம் கேட்டு அழகழகாய் வரைந்துவிடு ஊர்மிளா!" என்றாள்.

இதோ! இதுபோல் நாட்கள் பல கதைகளோடும், சந்தோஷங்களோடும் சென்றாலும், ஏதோ ஒரு சோகம் குடி கொண்டிருப்பது போலவே தோன்றியது அயோத்தியில்.

ராமனின் வீர தீர செயல்கள், வைதேகி கல்யாணம், ராமன் பட்டாபிஷேகம் நாள் குறித்தல், வனவாசம் செல்லுதல், தசரதன் மறைவு, ராமனைப் பிரிய மனமில்லாமல் அழுது, அவன் பின் சென்ற அயோத்தி மக்கள், 14 ஆண்டுகள் வனத்தில் என்ன நடந்தது என்று தெரியாமல், பரதன் நாட்டில் ராமனை மறந்த மக்கள், பரதன் தன் உயிரைத் துறக்க துணிய, பின்னும் ஒரு சோகம், அனுமன் வருகை அவனுடன் வருகை தந்த ராமன் வருகை, பட்டாபிஷேகம், பரதன் இளவரசு பட்டம், ராம லக்குவனன் என ராம ராஜ்ஜியம் போய்க் கொண்டிருந்தாலும், மனதில் 14 ஆண்டுகள் என்ன நடந்திருக்கும் என்ற எண்ணம் மக்களின் மனதில் பரவலாக எழ ஆரம்பித்தன. குழந்தைகளுக்குச் சோறு ஊட்ட, அழுகைதனை நிறுத்த எனப் பரவலாகப் பாட்டுகளாய்ப் பரவின.

அதிலும் சிலவற்றில் நம்ப முடியாமல் ஆச்சரியமாக பார்க்கப்பட்ட நிகழ்வுகள் மெதுவாக வம்புகளாக மாறின.

சீதையைப் பற்றிய செய்திகள் வளர ஆரம்பித்தன. சீதையை ராவணன் தூக்கிச் சென்றது, நம்ப முடியாமல் பேசுபடு பொருளாக ஆரம்பித்தது. இதனை ஆரம்பத்திலேயே ஊர்மிளை தடுக்க முயன்றாள். தன் அன்பரிடம் கூறுகையில் "பெண் என்பவள் பலவீனமானவளா?" என்று"ஏன் அப்படி கேட்கிறாய்?" என்றான் இலக்குவன்.

"காகாசுரன் பற்றிய செய்திகளும் பரவத் தொடங்கி சீதையேன் பொறுமை காத்தாள்? என்ற எண்ணம் எனக்கும் வரத்தான் செய்கிறது. பூமி தேவியாக இருந்தாலும், பொறுமை ஒரு அளவு தான். அதிலேயும் சீதையாலேயே அவரை அடித்து துரத்த முடியும் என்னும் போது ராமண்ணா தூங்குவதற்காகப் பொறுத்து இருந்தாள் என்ற காரணம் பெண்மை பலவீனப்பட்டதோ என்று தோன்றுகிறது?" என்றாள்.

மேலும் அவளது தற்கொலைக்குத் தன்னை ஏன் தயார்படுத்திக் கொண்டாள்? இதுவும் சீதையைப் பற்றிய நினைவுகளில் தம் மனதை அரித்துக் கொண்டே இருந்த கேள்விகள். ஆனாலும் இப்போதுள்ள மனநிலையில் அதனைக் கேட்டுப் பெறும் பதில்கள் காலம் கடந்தவைகள். அதனால் எந்தப் பலனும் இல்லை.

இப்பொழுதும் பொறுமை காக்கும் ராமபிரான் இந்த மக்களின் நிலைமையை எவ்வாறு சரி செய்யப் போகிறார் என்று பயம் முதன்முதலாக ஊர்மிளைக்கு வந்தது.

பார்க்கலாம் காலத்தின் ஆட்டத்தை ...

- தொடரும்

# உலகத்திலேயே மிகவும் பணக்கார நாடு இந்தத் தமிழ்மண்தான், இங்கு மட்டும் நாற்பாதயிரம் கோயில்கள் உள்ளன, அவ்வளவு கோயில்கள் ஏன்? அவசியம் என்ன?

சோழர் காலத்தில் தமிழ்நாடு தான் உலகத்திலேயே மிகவும் பணக்கார நாடு.
சுமார் 40,000 கோயில்களை சோழர்கள் தங்கள் ஆட்சிக் காலத்தில் கட்டினார்கள். அன்று உலகிலேயே உயர்ந்த கட்டிடம் தஞ்சை பெரிய கோவிலும், கங்கை கொண்ட சோழபுரமும்தான்.
அப்போது வட அமெரிக்கா தென் அமெரிக்கா கிடையாது. இலண்டன் ஒரு சிறு மீன்பிடிக்கும் கிராமமாக 1066 -இல் நிறுவப்பட்டது.
#தஞ்சை பெரிய கோபுரம் முழுவதும் தங்கத்தால்_ போர்த்ப்பட்டது. இது பற்றிக் கல்வெட்டும் உள்ளது. இந்தத் தங்கப் போர்வை 1311 - ஆம் வருடம் மாலிக்கபூரின் படைகளால் கொள்ளையடிக்கப்பட்டு, 500 யானைகள் மேல் எடுத்துச் செல்லப்பட்டது.

**இவ்வளவு கோவில்கள் கட்டுவதற்கு எங்கிருந்து பணம் வந்தது?**

எல்லாம் கடல் வாணிபம் ஏற்றுமதிதான். ஜப்பான் நாட்டில் தங்கச் சுரங்கம் கிடையாது. ஆனால் ஏற்றுமதி வியாபாரம் மூலம் அவர்களுக்குத் தங்கம் கிடைக்கிறது. அதே போல் சோழ நாட்டில் தங்கச் சுரங்கம் கிடையாது. இரும்பு சாமான்கள், துணிகள், கைவினைப் பொருட்கள், தானிய ஏற்றுமதி மூலம் தங்கம் கிடைத்தது.
உலகிலேயே ஒரே சீராக 80 இலட்சம் ஏக்கர் விளை நிலம் காவிரிப் படுகைப் பகுதியில்தான் அமைந்துள்ளது. எங்கும் மூன்று போகச் சாகுபடிக்குக் காவிரியில் நீர் வந்து கொண்டிருந்தது.
வியாபாரத்திலும், ஏற்றுமதியிலும், விவசாயத்திலும் கிடைத்த பணத்தை - தங்கத்தை சோழர்கள் படை பலத்தைப் பெருக்கிக் கொள்ள பயன்படுத்தினர்.
மலேயா காடுகளிலிருந்தும், மைசூர் காடுகளிலிருந்தும் யானைகள் பிடித்து வரப்பட்டன.
பர்மாவிலிருந்து தங்கம் கொடுத்து குதிரைகள் வாங்கப்பட்டன.
ஏன் கோவிலை கட்டினார்கள்?

***தமிழர்கள் ஏன், கோயில் கோயில் என்று அதைச் சுற்றியே வருகிறோம் ?**

தமிழகத்தை ஆண்ட பெரும்பாலான அரசர்கள் அவரவர் ஆண்ட பொழுது ஏன் மருத்துவமனை கட்டவில்லை, கல்விச்சாலை அமைக்கவில்லை ஆனால் கோயில்களை கட்டினார்கள்.

***கோயில்கள் எப்பொழுதெல்லாம் கட்டப்பட்டன ?**

மக்களுக்கு பிரித்து கொடுக்காமல், அரசன், அரசின் நிலங்களை, ஏன் கோயில்களுக்கு மானியமாக எழுதி வைத்தான் ?

***உலகின் குருவாக தமிழகம் ஆனது எப்படி ?**

எந்த ஒரு அரசும் பட்ஜட் போடும் பொழுது வரி வசூல் என்ன, அதில் அரசு நடத்த அதிகாரிகளுக்கு ஆகும் செலவு, மக்கள் நல திட்டங்களுக்கு ஆகும் செலவு ன்னு வரவு செலவை வைத்து தன்னிறைவு திட்டத்தை அடையத்தான் நிதிநிலை அறிக்கை போடுவார்கள்.
இதையேதான் தமிழக கோயில்கள் செய்தன.
கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம் ன்னு அதைத்தான் சொல்லி வெச்சாங்க.
மன்னன் கோயில் கட்ட ஆரம்பித்தவுடன், கட்டுமான பணிக்கு அந்த ஊரை சுற்றி உள்ள கட்டுமான கலைஞர்கள், சிற்ப கலைஞர்கள், கல் தச்சர்கள், கட்டுமான



பொருட்களான செங்கல், சுண்ணாம்பு போன்றவற்றை உற்பத்தி செய்வோர், அதை ஓரிடத்தில் இருந்து கோயில் கட்டும் இடத்திற்கு கொண்டு செல்லும் போக்குவரத்து, வர்ணம் அடிக்க, ஓவிய கலைஞர்கள், இப்படி அனைவருக்கும் வேலை வாய்ப்பு, அதுவும் அரசரால் கொடுக்கப்படும், அரசு வேலை.
கோவிலுக்கு மானியமாக கொடுக்கப்படும் நிலங்கள், குத்தகை மூலமாக விவசாயிகளுக்கு விடப்பட்டு அதன் மூலம் விவசாய உற்பத்தி, அதற்கு ஒரு சமூகம், பாண்ட மாற்று முறையில், தன்னிறைவு பெற்ற பொருளாதாரம்.
கோவிலுக்கு கொடுக்கப்பட்ட பசுமாடுகள், அதை கவனித்தல், அதற்கு ஒரு சமூகம், இதனால் கோயிலுக்கும் அந்த கிராமத்தாருக்கும் பால் சார்ந்த பொருட்கள்.
நெய்வேத்தியம் சமைக்க சமையல் கலைஞர்கள். அதற்கு ஒரு சமூகம்.
சமையல் செய்ய பாத்திரங்கள் செய்ய மண்பானை செய்வோர் மற்றும் உலோக பாத்திரம் செய்வோர், அதற்கு ஒரு சமூகம்.
அவர்களுக்கு தொடர்ந்து வேலை.
நந்தவனம் மூலம் தெய்வத்திற்கு பூ மாலை மற்றும் அலங்கார சேவை செய்ய நந்தவனம் காப்போருக்கு வேலை. அதற்கு ஒரு சமூகம்.
அவருக்கு தொடர்ந்து வேலை இருக்க, அதற்கேற்ப கோவில் உற்சவங்கள்.
மங்கள இசை இசைக்கும் கலைஞர்கள் ஓர் சமூகம். கூத்து கலைஞர்கள் என, அவர்களுக்கும் வருட மானியம் மற்றும் வேலை. மாலை வேளைகளில் ஆன்மீக கச்சேரி என்று மனதிற்கு இனிய பொழுது போக்கு நிகழ்ச்சிகள்.
தெய்வத்தின் வஸ்திரங்கள் நெய்ய ஒரு சமூகம்.
அந்த வஸ்திரங்களை துவைக்க ஒரு சமூகம், அவருக்கும் தொடர்ந்து கோவில் மானியம் மூலம் வேலை.
கோயிலை சுத்தமாக வைத்துக்கொள்ள ஒரு தேவை, அதை செய்ய ஒரு சமூகம்.
அவருக்கும் கோயில் மூலம் மானியம், வருட வருமானம்.
இவை அனைத்தையும் நிர்வாகம் செய்ய, கணக்கு பார்க்க, ஒரு சமூகம்.
இவர்கள் அனைவரும் அவரவர் வேலையை பார்க்க, அதன் மூலம் வாழ்வாதாரம் பெறவும், கோயில் ஒரு மிகப்பெரிய தொழிற்சாலை.
ஆன்மீகம் ஒட்டி வாழ்வாதாரம்.
பெரு வெள்ளம் வந்து ஊரே மூழ்கி போனாலும், கோயிலின் கோபுரத்தில், கலசம் மூலம், செறிந்த விஞ்ஞான அறிவுடன், அதனுள் 12 வருடம் வரை கெடாத அந்த கிராமத்தில் மண்ணுக்கேற்ப விளையும் விளை பொருட்களின் விதை பொருட்கள்.
12 வருடத்திற்கு ஒரு முறை அதை மாற்றி அமைத்து, மராமத்து பணிகள் மேற்கொள்ள மேற் சொன்ன அனைவருக்கும் ஒரு கூட்டு வேலை வாய்ப்பு.
இப்படி அவர் அவருக்கு தெரிந்த பணி, அதை சார்ந்த சமூகம், ஒன்றிணைந்து தன்னையும் காப்பாற்றிக்கொண்டு, தன்னிறைவு வாழ்க்கை என வாழ்வதற்கு கட்டமைக்கப்பட்டதே, நம் கோயில்கள்.
ஊருக்கு ஒரு கோயில், அதை சுற்றிலும் அனைத்து சமூகம், அந்த அந்த ஊரை சுற்றி உள்ள இயற்கை வளங்கள் பாதுகாக்கபட்டு, மூலிகை மூலம் வைத்தியம், அதற்க்கென ஒரு சமூகம் என, ஊரை சுற்றியே, ஓர் தன்னிறைவு வாழ்க்கை.
இப்படி அமைக்கப்பட்டது தான் நம் பொருளாதார கட்டமைப்பு.
மாத சம்பளம் பணமாக, பணத்திற்கு பொருள், அதன் விலை ஏற்ற இறக்கம், பண வீக்கம், இவை எதுவுமே சாராமல் ஓர் தன்னிறைவு வாழ்க்கை.
தெய்வங்களுக்கு உயிரூட்டி, அந்த தெய்வங்கள் அங்கே வாழ்வதாகவும், அந்த கோயிலின் சொத்துக்கள், அந்த தெய்வங்களின் சொத்துக்கள் என்றும், உயிருள்ள ஒருவர், எப்படி தினமும் குளிப்பாரோ, உடை உடுத்தி கொள்வாரோ, தினமும் உணவு உண்பாரோ, நம் வாழ்வாதாரத்திற்கு உதவும் ஒருவரை நாம் எப்படி போற்றி கவனிப்போமோ, அப்படி அவருக்கு நன்றி செலுத்தும் விதமாக, அனைவரின் சார்பாக, பூஜைகளை கவனிக்க ஒரு சமூகம்.*
இப்படி ஒரு கோயிலை வைத்து, ஆன்மீகம் மூலமாக ஒரு *தன்னிறைவு பொருளாதாரத்தை உலகிற்கு வாழ்ந்து காட்டியதாலேயே, தமிழகம் உலக குருவாக திகழ்ந்தது.
வாழிய பைந்தமிழ் நாடு...
திருச்சிற்றம்பலம்*
வழிபாடே இல்லாமல் இருக்கும் சிவ ஆலயங்களில் அபிடேக வழிபாடு செய்வது பல மடங்கு பயனை தரும்.
வழிபாடு செய்ய அடியார்களே வாரீர்......
திருச்சிற்றம்பலம்
*ஈசன்*
*அடி*
*தேடி*
ஆலவாயர் அருட்பணி மன்றம் மதுரை
சிவனை விஞ்சிய தெய்வம் இல்லை : சைவத்தை மீறிய மார்க்கம் இல்லை !
திருச்சிற்றம்பலம்
தமிழும் சைவநெறியும் சைவசமயமும் தழைத்தோங்க சிவவழிபாடு பின்பற்றுவோம்....
*ஈசன் அடி தேடி பின்பற்றி*
ஆலவாயர் அருட்பணி மன்றம். மதுரை..
மாதம் ஒருமுறை சித்தர்கள், நாயன்மார்கள் வழிபட்ட பழமையான சிவனார் ஆலயத்தில் உழவாரம், திருவாச முற்றோதுதல், தமிழ் முறையில் சிவவேள்வி, திருக்கைலாய வாத்திய இசையோடு அம்மையப்பர் திருமேனியுடன் திருவீதி உலா, மற்றும் 108மூலிகை பொடிகளால் அபிடேக நன்னீராட்டு பெருந்திருவிழா நடைபெறுகிறது...
அனைவரும் வருக...
**தற்போது தென்தமிழ்நாட்டில் உள்ள யாரும் அதிகமாக அறியப்படாத சிவனார் ஆலயங்களை நோக்கி எமது வழிபாடுகள் ஆலயப் பயணங்கள்...
வாருங்கள் நம் முன்னோர்கள் எதிர்கால சந்ததிக்காக பாதுகாத்து வழிபட்ட பழம்பெருமை வாய்ந்த சிவனார் ஆலயங்களை நாமும் பாதுகாத்து வழிபடுவோம்

முனைவர்
**இராம வேதநாயகம்.**

தினம் ஒரு தலைவர்கள்

# அழகுமுத்துக்கோன் வரலாறு

1728ல் இல் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கட்டாலங்குளத்தில் பிறந்தவர். இவரது தந்தை அழகுமுத்துக்கோன் தாய் அழகு முத்தம்மாள்.

அந்த காலகட்டத்தில் தாத்தா, தந்தை பெயரே மகனுக்கு வைப்பது வழக்கம். அந்தவகையில் தான் இவருக்கும் வீர அழகுமுத்துக்கோன் என பெயரிடப்பட்டது.

1729ஆம் ஆண்டு இவரது தம்பி சின்ன அழகு முத்துக்கோன் பிறந்தார். இவர்கள் அழகுமுத்து சகோதரர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

1750 ல் தந்தை மன்னர் அழகுமுத்துக்கோன் அனுமந்தகுடி போரில் மரணம் அடைந்தார். தந்தையின் மரணத்தை தொடர்ந்து தனது 22 வயதில் அண்ணன் அழகுமுத்துக்கோன் கட்டாலங்குள சீமையின் மன்னரானார்.

வீர அழகுமுத்துக்கோனுக்கு எட்டயபுரம் மன்னரான ஜெகவீரராமபாண்டிய எட்டப்பர் மன்னர் சிறந்த நண்பராக இருந்தார்.

அழகுமுத்துக்கோன் ஆங்கிலேயர்கள் தன்னுடைய நாட்டில் வியாபாரம் செய்வதை விரும்பவில்லை, அதனால் ஆங்கிலேயர்கள் மீது அவருக்கு வெறுப்பு அதிகமாக இருந்தது.

எந்த உரிமையில் வரி கேட்கிறீர்கள்? இப்படியொரு நிலையில் 1750ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் தளபதி அலெக்சாண்டர் கிரேன் மற்றும் மருதநாயகம் (கான்சாகிப்) ஆகியோர் எட்டயபுரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு வரி வசூலிக்க வந்தனர்.

ஆங்கிலேயர்களை எதிர்க்க வீர அழகுமுத்துக்கோன் ஆலோசனைக் கூட்டத்தை ஏற்பாடு செய்தார். இந்த கூட்டத்தில் அழகுமுத்து சகோதரர்கள், ஜெகவீரராம எட்டப்பர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இதில், ஆங்கிலேயர்களுக்கு வரி செலுத்துவதில்லை என முடிவு செய்யப்பட்டது.

தொடர்ந்து வரி கட்ட முடியாது என்று பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது.

“வணிகம் செய்ய வந்த நீங்கள் எங்கள் மக்களிடம் வரி வசூலிக்க என்ன உரிமை இருக்கிறது? வரி வசூல் செய்ய வந்தால் கும்பினிகளின்( ஆங்கிலேய வியாபாரக் கூட்டம்) தலை இந்த மண்ணில் உருளும்” என்று அந்த கடிதத்தில் எழுதியிருந்தது.

இதனால் ஆத்திரம் கொண்ட பிரிட்டிஷார்கள் எட்டயபுரபாளையத்தில் தனது படைகளை குவித்தனர். அப்போது, எட்டயபுர மன்னரையும் மக்களையும் பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்த வீரன் அழகுமுத்துக்கோன் படையை திரட்டத் தொடங்கினார்.

எட்டயபுரம் பாளையத்துக்கு ஆதரவாகப் போராடிய அழகுமுத்து சகோதரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே போர் மூண்டது. இந்த போரில் அழகுமுத்துக்கோன் வென்றார். இதுதான் பிரிட்டிஷாருக்கு எதிராக நடந்த முதல் போர் என வரலாறு கூறுகிறது.

இதைத்தொடர்ந்து பல இடங்களில் ஆங்கிலேயர்களுக்கு எதிர்ப்பு கிளம்பிய நிலையில், 1755 பிப்ரவரி மாத தொடக்கத்தில் திருநெல்வேலி சீமை நோக்கி ஒரு பெரிய படை அணிவகுத்தது.

இந்தப் படையெடுப்பின் முக்கிய நோக்கம் தென்நாட்டு அரசர்களிடம் இருந்து கப்பம் வசூலிப்பதும், கும்பினிகளின் அதிகாரத்தை தென் நாட்டில் நிலைநிறுத்துவதுமாகும்.

மார்ச் 9, 1755இல், மருதநாயகம் தலைமையிலான படைகள் காளமேகப் பெருமாள் கோயிலுக்கு தீ வைத்து, அங்கிருந்த அனைத்து



ஆபரணங்களையும் கொள்ளையடித்தன.

அந்த சமயத்தில் மதுரையில் இருந்து ஆங்கிலேயப் படை திருநெல்வேலிக்கு வருவதை அறிந்து அவர்களை எதிர்க்க மன்னர் பூலித்தேவன் எட்டயபுர மன்னரிடம் உதவி கேட்டார். ஆனால் அவர் உதவி செய்யவில்லை. அழகுமுத்துக்கோன் சகோதரர்கள் பூலித்தேவனுக்கு உதவி செய்ய முன் வந்தனர்.

பூலித்தேவனின் படையும் திருவிதாங்கூர் ராணுவமும் அழகுமுத்துக்கோனின் படையுடன் இணைந்து ஆங்கிலேய படைகளை எதிர்த்து போரிட்டது. இதுவே குறுநில மன்னர்களின் கூட்டமைப்புக்கான முதல் படி.

1755ல் எட்டயபுரத்தைத் தாக்க வந்த ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக வீர அழகுமுத்துக்கோனின் படையை சின்ன அழகுமுத்துக்கோன் வழிநடத்தினார்.

அங்கிருந்த பெருமாள் கோயிலை தாக்க வந்த போது, அதை காக்க அழகுமுத்துக்கோனின் படைகள் கடுமையாகப் போராடிக் கொண்டிருந்த நேரத்தில், சின்ன அழகுமுத்துக்கோன் ஆங்கிலேயர்களால் சுடப்பட்டு 1755 ஏப்ரல் 07ஆம் தேதி பெருமாள் கோயில் முன் மரணமடைந்தார்.

தனது தம்பியின் மரணத்தை தாங்கிக் கொள்ள முடியாத மன்னர் வீர அழகுமுத்துக்கோனும், அவரது வீரர்களும் கடும் போரில் ஈடுபட்டனர். போர் முடிவடையும் தருவாயில் பிரிட்டிஷ் படைகள் பின்வாங்கின.

அப்போது அழகுமுத்துக்கோனின் வீரத்தை நன்கறிந்த மருதநாயகம் எட்டயபுரம் அரண்மனையை தாக்கப்போவதாக அறிவித்தார். அந்த பதட்டமான சூழலில் எட்டயபுரம் மன்னரையும், மக்களையும் காத்து பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்த வீர அழகுமுத்துக்கோன், வெளியே சென்று ஆள்திரட்டி 700க்கும் அதிகமானவர்களை தனது படையில் சேர்த்தார்.

இவர்கள் பெத்தநாயக்கனூர் கோட்டையில் தங்கியிருந்த நிலையில் கான்சாகிப் படைகள் தாக்குதலில் ஈடுபட்டன. வீர அழகுமுத்துக்கோனும் அவரது தளபதிகளும் கடுமையாகப் போரிட்டனர். அப்போது அழகுமுத்துக்கோனின் குதிரை சுட்டுதள்ளப்பட்டது.

முத்துகோனின் வலது காலிலும் சுடப்பட்டது. இருந்தபோதிலும் ரத்தம் சொட்ட, சொட்ட தொடர்ந்து மூன்று மணி நேரம் போர் புரிந்தார் அழகுமுத்துக்கோன். பல வீரர்கள் இறந்தனர்.

அழகுமுத்துக்கோனையும், அவரது 6 தளபதிகளையும், 248 வீரர்களையும் ஆங்கிலேயப்படை சிறை பிடித்தது. நடுக்காட்டுச்சீமை பகுதிக்கு அழைத்துச் சென்று பீரங்கி முன்பு நிறுத்தி வரி செலுத்துமாறு வற்புறுத்தினர்.

தாய் நாட்டுக்காக மரணத்துக்கு முத்தம்

மன்னிப்பு கேட்டால் உயிர் மிஞ்சும் என எச்சரித்தனர். ஆனால் எதற்கும் அஞ்சாத அழகுமுத்துக்கோன், வரி கட்ட ஒப்புக்கொள்ள முடியாது என்று மறுத்துவிட்டார். பின்னர் அனைத்து வீரர்களின் வலது கரங்களும் வெட்டப்பட்டன.


வீரன் அழகுமுத்துக்கோனும் 6 தளபதிகளும் பீரங்கியால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதில், 7 பேரும் உடல்கள் சிதறி உயிரிழந்தனர். அவர்களின் உடல்கள் சேகரிக்கப்பட்டு, எட்டயபுரம் அருகில் உள்ள சோழாபுரம் கண்மாயில் எரியூட்டப்பட்டது.

”கட்ட மிகுந்திடம் கட்டாலங்குளம் அழகு முத்துக்சேருவைகாரன் அவன் கோட்டை பெத்த ஊரிலும் தானுமே கொற்றவன் காக்கவே சண்டை செய்தான் வீராதி வீரரும் சூராதி சூரரும் வெங்கல கைகளை தானிழந்தார்... மன்னாதி மன்னரை மார் காத்து நின்ற முத்து மாணிக்க சேர்வையும் மாய்ந்து விட்டார் பரிமேல் ஏறிரண கள மேவிய பச்சைமால் சேர்வையும் மாண்டுவிட்டான்” என்ற “சேவைக்காரர் சண்டை கும்மி” பாடல் அழகுமுத்துக்கோனின் போரையும் அவர் போரில் கொல்லப்பட்டதையும் கூறுகிறது.

தனது நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் இவர் மரணத்தை முத்தமிட்ட ஆண்டு 1759

ஆங்கிலேயருக்கு எதிராக போரிட்ட வீரமுத்துக்கோனுக்கு தமிழக அரசு, கட்டாலங்குளத்தில் மணி மண்டபம் கட்டியது. இங்கு ஆண்டுதோறும் ஜூலை 11ஆம் நாள் அரசு சார்பில் மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது. 2015 ஆம் ஆண்டு இந்திய அரசின் சார்பில் தபால் தலை ஒன்று வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரபல தயாரிப்பாளர் ஆர்.பி. சௌத்ரி சாலை விபத்தில் உயிரிழப்பு!



பிரபல திரைப்படத் தயாரிப்பாளரும், நடிகர் ஜீவாவின் தந்தையுமான ஆர்.பி. சௌத்ரி, ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில் இன்று நடந்த வாகன விபத்தில் காலமானார்.

ராஜஸ்தானில் உள்ள தனது சொந்த ஊரான உதய்பூருக்குச் சென்றபோது நடந்த கார்விபத்தில் படுகாயம் அடைந்த நிலையில், மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

'சூப்பர் குட் பிலிம்ஸ்' நிறுவனத்தின் தலைவரான இவர், 'புது வசந்தம்', 'நாட்டாமை', 'பூவே உனக்காக', 'ஆனந்தம்', 'திருப்பாச்சி' உள்ளிட்ட பல வெற்றித் திரைப்படங்களைத் தயாரித்துள்ளார்.

தென்னிந்திய அளவில் வளர்ந்து வரும் நடிகைகளில் ஒருவர் க்ரித்தி ஷெட்டி. ரசிகர்களின் மனம் கவர்ந்த நடிகையாக இருக்கும் இவர், தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிடும் புகைப்படங்கள் உடனடியாக இணையத்தில் வைரலாகும்.

அந்த வகையில், தற்போது தன்னுடைய லேட்டஸ்ட் அழகிய போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டா பக்கத்தில் க்ரித்தி பதிவிட்டுள்ளார். க்ரித்தி ஷெட்டி வெளியிட்டுள்ள இந்த புகைப்படங்கள் தற்போது ரசிகர்கள் மத்தியில் வைரலாகி வருகின்றன.



# விஜய் வெற்றி: மம்மூட்டி, மோகன்லால் வாழ்த்து



தமிழகத்தில் நடந்து முடிந்துள்ள சட்டமன்ற தேர்தலில் பெரும்பான்மையை பெற்று, வெற்றி பெற்றுள்ள தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜய்க்கு, மலையாள சூப்பர்ஸ்டார் மோகன்லால் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

மொத்தமுள்ள 234 தொகுதிகளில், தனித்து போட்டியிட்ட தமிழக வெற்றி கழகத்தின் வேட்பாளர்கள், 108 தொகுதிகளை கைப்பற்றியுள்ள நிலையில், வரலாறு காணாத தனிப்பெரும் கட்சியாக த.வெ.க உருவாகியுள்ளது.

இந்த நிலையில், த.வெ.க தலைவர் விஜய்க்கு எக்ஸ் பக்கத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துள்ள நடிகர் மோகன்லால், பொதுமக்கள் உங்களை தேர்வு செய்துள்ளதாகவும், அவர்கள் உங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையே, மிகப்பெரிய கௌரவம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மக்கள் உங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையோடு, மக்கள் சேவைக்கான தங்களின் புதிய பயணம் உத்வேகத்துடன் தொடங்கட்டும் என்றும் நடிகர் மோகன்லால் பதிவிட்டுள்ளார்.

இதைத்தொடர்ந்து தமிழக வெற்றி கழகத்தின் மகத்தான வெற்றிக்கு வாழ்த்துக்களை கூறியுள்ள நடிகர் மம்மூட்டி, மாநிலத்தை வழிநடத்தும் மனவலிமை த.வெ.க தலைவர் விஜய்க்கு கிடைக்க தான் வாழ்த்துவதாகவும் பதிவிட்டுள்ளார்.

சின்னத்திரையில் தற்போது அதிக சம்பளம் வாங்கும் நடிகைகளில் ஒருவர் சுவாதி கொண்டே. இவர் சன் டிவியில் ஒளிபரப்பாகி வரும் மூன்று முடிச்சு சீரியலில் கதாநாயகியாக நடித்து வருகிறார். இவர் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிடும் புகைப்படங்களுக்கு ரசிகர்கள் மத்தியில் கவனம் கிடைக்கும். அந்த வகையில் தற்போது சேலையில் எடுத்துக்கொண்ட அழகிய போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டாவில் பதிவு செய்துள்ளார் நடிகை சுவாதி கொண்டே.



## விஜய் வெற்றி.. பார்த்திபன் சொன்ன பஞ்ச்!



"வாய் வழி காற்றை ஊதி, மெழுகுவர்த்தியின் சுடர் அணைத்து, 'happy birthday'சொல்வதைப்போல,

விசில் ஊதி சூரியனையே அணைத்து புதிய அரசு விடிகிறது!

விஜயம் யார் வேண்டுமானாலும் செய்யலாம்... ஆனால், ஜெயம் திரு விஜய் அவர்களால் மட்டுமே அசுர பலத்தோடு நிகழ்த்த முடியும் என்பதற்கு, தமிழக மக்கள் எண்ணிக்கையில் 108 இடங்கள் கொடுத்ததோடு, தங்களின் இதயம் என்கிற இடத்தையே சிம்மாசனமாக்கி அதில் முதல்வராக அமர, திரு விஜய் அவர்களுக்கு அமோக ஆதரவு அளித்திருக்கிறார்கள். இந்த சரித்திர வெற்றியைக் கண்டுள்ள real HERO -வை விசிலடித்து கொண்டாடி வாழ்த்துவோம்!" என்று தெரிவித்துள்ளார்.

# விஜய்க்கு வாழ்த்து சொன்ன மகேஷ் பாபு!



தமிழக சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களை கைப்பற்றி வெற்றி பெற்றுள்ளது. திமுக கூட்டணி 73 இடங்களிலும், அதிமுக 53 இடங்களிலும் வென்றுள்ளது.

தவெக வெற்றிக்கு அதன் தலைவர் விஜய்க்கு பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில் விஜய் நடித்த கில்லி, போக்கிரி உள்ளிட்ட ரீமேக் படங்களில் ஒரிஜினல் வெர்ஷனில் நடித்த தெலுங்கு சூப்பர்ஸ்டார் மகேஷ் பாபு விஜய்க்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "புதிய அளவுகோல்களை அமைத்து, ஒரு பிரம்மாண்டமான வெற்றியை ஈட்டிய நடிகர் விஜய்க்கு என் மனமார்ந்த வாழ்த்துகள்!!!

மக்கள் உங்கள் மீது வைத்துள்ள அளப்பரிய நம்பிக்கையை இன்றைய தினம்(நேற்று) பிரதிபலிக்கிறது... இந்த வெற்றியானது தமிழ்நாட்டிற்குப் பயனுள்ள முன்னேற்றமாக நிச்சயம் உருவெடுக்கும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# நடிகர்கள் நினைத்தால் வரலாற்றை மாற்றி எழுத முடியும்



தெலுங்கு நடிகரும் தெலுங்கு தேசம் கட்சி சட்டமன்ற உறுப்பினருமான பாலகிருஷ்ணா, தமிழக சட்டமன்றத் தேர்தலில் நடிகர் விஜய்யின் தவெகவின் அமோக வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள பதிவில், "தமிழகத்தில் எம். ஜி.ஆர் அவர்களும், தெலுங்கு நாட்டில் என் தந்தையும், தெலுங்கு தேசத்தின் மூத்த தலைவருமான என். டி.ஆர் அவர்களும், ஒரு நடிகர் மனது வைத்தால் வரலாற்றை மீண்டும் எழுத முடியும் என்பதை நிரூபித்துள்ளனர்.

அந்த வெற்றியை மீண்டும் நினைவுகூர்ந்த சகோதரர் விஜய்க்கு எனது வாழ்த்துகள். தமிழ் மக்கள் விஜய் மீது வைத்துள்ள நம்பிக்கையை அவரது அரசியல் வாழ்க்கை நிறைவேற்றும் " என்று நம்பிக்கை தெரிவித்தார்.

மேற்கு வங்கம், அசாம் மற்றும் புதுச்சேரியில் வெற்றி பெற்ற பாஜக மற்றும் என்.டி.ஏ கூட்டணி கட்சிகளுக்கும் பாலகிருஷ்ணா வாழ்த்து தெரிவித்தார்.

பிரதமர் நரேந்திர மோடி மற்றும் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோரின் தலைமையில் மட்டுமே ஒரு புதிய இந்தியாவைக் கட்டியெழுப்ப முடியும் என்றும் அவர் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

Happy Birthday
RASHID KHAN

ADVERTISE WITH US
CONTACT US 9438610756

WANTED: FEMALE ANCHORS
• Age 18 to 35
• Good Looking
• Work from Home (Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp: 7789941009 9337501889

Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

டீலர்கள் தேவை
மைலேஜ் பூஸ்டர்
20% ~ 30%
மிக அதிகமான மைலேஜ் குறைந்த புகை
சுலபமான வாகன ஓட்டம் குறையும் மாசு
நேரடி விற்பனையாளர்களும் டீலராகலாம்
Manufactured By: Dlag Technologies, Chennai 33
போன் 63746 73041

Seek Strive Succeed
Annai Violet Arts & Science College
(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)
Key Features
UG & PG COURSES
ADMISSIONS OPEN
Ph : 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388
info@violetcollege.in | www.violetcollege.in

keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology – Freshers
Internship: Clinical Training, Counseling Practice, Case Work
Jobs: Social Worker, Jr Psychologist, Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com

நிலம் தேவை
தெற்கு சென்னை
திருப்போரூர் to செங்கல்பட்டு ரோடு
1 to 2 ஏக்கர்
தொடர்புக்கு: Ph. 6384617773

துபாயை தலைமையிடமாகக் கொண்டு தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள உட்-பி குளோபல் பிரைவேட் லிமிடெட்
(Would Be Global Pvt Ltd)
ஆன்-லைன் வர்த்தக E-Commerce
நிறுவனத்திற்கு தாலுக்கா வாரியாக பிரான்ச்சீஸ்கள் (Franchise) தேவை.
பொது மேலாளர்: 7092069555 / 7092047555

WANTED FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House Call/Whatsapp 94386 10756

WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
• வானகரம் பைபாஸ் ரோடு • முகப்பேர் • அம்பத்தூர் • பட்டரவாக்கம் • பெரம்பூர் • மாதவரம் • திருமுல்லைவாயல்
Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.

SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ... Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

SUN SHINE PROPERTY (Property & Developers)
லேயவுட், நிலம் & ஷேரிங் டாக்குமெண்ட்ஸ் தேவை
மனை விற்பனை
• பொன்மார் • சித்தாலப்பாக்கம்
600, 850, 900 sqft
முகவரி: K.K. நகர் சென்னை - 78 | தொடர்புக்கு: PH.9840804617

EMI 50% 50% OFFER PLOT FOR SALE
SITE NO: 2
SITE NAME: ஸ்ரீ நகர்
LOCATION: கருங்குழி, மேலவளம்பேட்டை
SRI DEVELOPERS LOCATION: ADAMBAKKAM, GUINDY.
OUR PROJECTS
SITE NAME: BHARATHI NAGAR
LOCATION: MULLI, MADHURANTHAGAM.
CONTACT US NOW FOR BOOKING!
PH. NO: 8220711499, 8870158259

PLOTS FOR SALE SRI DEVELOPERS
மனைகள் விற்பனைக்கு
கிண்டி
மதுராந்தகம், கருங்குழி, ஒரத்தி, படப்பை
CONTACT: 8220711499, 8870158259

PLOT FOR SALE
பொன்னேரி, திருவள்ளூர், கடம்பத்தூர் அருகில் வீட்டு மனைகள் விற்பனைக்கு
BANK LOAN AVAILABLE
Contact: 9841495210

ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com

WANTED
• LAB HELPER • OFFICE BOY • GARDENER
CHEMBARAMBAKKAM
CALL US 7550093245 / 7358696451

WANTED OFFICE BOY
GUINDY
CALL US 7550093245 / 7358696451

WANTED
ELECTRICIAN SUPERVISOR / ELECTRICIAN
EGMORE, MOUNT ROAD
CALL US 7550093245 / 7358696451

WANTED
வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுபவர்/வேலை தேடுபவரும் அனுகவும். 8668107106






ஆலவிருட்சமாய்...
என்இதயமெனும் சுவரில்
ஆலம் விதையாய் நீ
விழுந்தாய்....

உன் துன்பமெனும்
கண்ணீரையும் சிறு
துளிகளாய் விட்டு விட்டாய்...


என்னில் துளிர் விட்டு ஆல
விருட்சமாய் இப்பொழுது
வளர்ந்து வருகிறது...

இனி யார் வந்து என்னில்
இருக்கும் உன்னை வெட்டி
எடுத்தாலும்,
உன்
நினைவுகள்



மதில் சுவரின்
விருட்சமாய்
என்னில்
வளர்ந்து
கொண்டிருக்கும்...

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை.



## சாலை விபத்துகள்

கழுத்தை நெரிக்கின்றன
வாகன சக்கரங்கள்!
உயிர்களைப் பேரம் பேசுகிறது
வாகன வேகம். கடைக்குள்
புகுந்த பேருந்து வாங்கி
வருகிறது உயிரை!

யாரயோ புதைத்து
வைத்திருப்பதுபோல
காட்சியளிக்கின்றன
வேகத்தடைகள்!
கறுப்பாக
துக்கம்
தெரிவிக்கின்றன
சாலைகள்!



அதன்
நடுவிலுள்ள
வெள்ளைக்கோடுகள்
உயிருக்கு நாமமோ!
இப்பொழுதெல்லாம் ஹார்ன்
ஒலி கேட்கிறது சங்கொலி
போல!

**மீனாட்சி பாண்டியன்**
திருவண்ணாமலை

## தேடித்தேடியே..

நாளிதழ்களின்
குறுக்கெழுத்துப்
புதிரா வாழ்க்கை.?...
எதிர்காலத்திற்கு
பயணித்து... வெகுமதி
பெற்றுவந்து..
நிகழ்காலத்தில் நிம்மதியாய்
வாழ நினைப்பது
நியாயமோ.?... விடுபட்டு
போனவற்றை..மறுநாள்
நாளிதழில் விடைகள்
பார்த்து நிரப்பிக்
கொண்டு சிலாகித்து
மகிழ வாழ்க்கை ஒன்றும்
பொழுதுபோக்கில்லை...
ஒன்றை எழுத்தை பற்றி
உச்சிக்கு ஏறவும்..
பக்கவாட்டில் தாவவும்..
பக்குவம் வேண்டும்..!*

**க. குமாரகுரு,**
மயிலாடுதுறை

## தேன் பூசப்பட்ட புண்!

பூதாகர குழந்தைகள்
போக்கிடமற்று
தவிக்கின்றன...
வலசைப்பாதைகள்..
வாழிடங்கள் என
அனைத்தும் நெருக்கடிக்
குள்ளாகிவிட்டன...
'ஆனை'க்கு...தமிழில் நூற்று
பன்னிரண்டு பெயர்கள்
இருப்பதாய் பெருமைப்பேசி
திரிகின்றது தமிழினம்.!*

**க.குமாரகுரு,**
மயிலாடுதுறை

## சந்தோஷம், துக்கம்

ஒரு பாலருக்கு
துக்கத்தையும்,
ஒரு பாலருக்கு



சந்தோசத்தையும்,
தந்து
விடுகின்றது
திருமணம் !

**எம். பி.தினேஷ்.**
கோவை

## வெட்டுப்படும் வார்த்தைகள்...

என் எண்ணங்களை
உன்னிடம் சொல்வதற்கு
நான் வார்த்தைகளைத்
தேடுகிறேன்...

என் மனம் வார்த்தையின்றி
தண்ணீர் வற்றிப்போன
கிணற்றைப்போல வறண்டு
கிடக்கிறது...

ஒன்றிரண்டு வார்த்தைகள்
தோன்றினாலும்,

வளர வளர வெட்டுப்படும்



பூங்காச்
செடிபோல

வெட்டுப்பட்டுப்
போகின்றன...

**தயாளன்**
காட்பாடி



அமைதியான மௌனமும்
ஒரு தவம் தான்
உணர்ந்து கொண்டேன்
நெருப்பின் நிழலில் !!

அவள் மனதினை திறக்க
ஆசைப்பட்டேன் ஏனோ
என்னையுமறியாமல்
பூட்டை உடைக்காமலே–என்
மனதினை திருடி சென்று
விட்டாள். அவள் சின்ன
பார்வைகளால்!

உன்னருகே வாழ்வதும்
பேரானந்தம் தான்!

ஜலதோஷம் மட்டுமல்ல
பல தோஷம் பிடித்தாலும்
உன்னோடு நனைகையில்
அந்த மாமழை பேரழகு
தான்!

என்னுடைய சிறிய
உலகத்தில்
நீ மட்டும் தானடி பெரியவள்!

அக்னி வெயிலில் எல்லாம்



இப்படி பார்த்து
தொலையாதே
பத்திக்கிட்டு
எரியுமடி
பாழாய் போக
போகும் மனசு!

**லி.நௌஷாத் கான்**

## ஹைக்கூ !

சாண் பிள்ளையானாலும்
ஆண் பிள்ளை
ஆணாதிக்கம் விதைப்பு !

சிரித்தால் போச்சு
பெண் பிள்ளை
பெண்ணடிமை பாதிப்பு !

சாண் ஏற முழம் சறுக்கிறது
ஏழைகளின் வாழ்வு !

யாராவது குடித்தனர் அன்று
யாரவது குடிப்பதில்லை
இன்று !

சுற்றியது பம்பரம் கயிறு
இன்றி சுழட்டினான்
கையால் !

அவித்த நெல் முளைக்காது
அடங்காத மாணவன்
சிறக்க முடியாது !

உருவத்தில் சிறியது
உடல்நலத்திற்கு நல்லது
அருகம்புல் !

ஒரு முறை சொன்னாலும்
உயர் மதிப்பைக் குறைக்கும்
பொய் !

உருவம் பெரிதல்ல
சிங்கத்தைப் பார்த்து
பயந்தது யானை !

அறிந்து விடுகிறது
மழை வருவதை தவளை !

சேற்றில் மலர்ந்தும்
ஒட்டவில்லை சேறு தாமரை!

நாய்கள் நுழைந்தன
திறந்த வீட்டில்
பன்னாட்டு நிறுவனங்கள் !

பொதி சுமக்காது
துள்ளும் மாடு அதிகம்
பேசும்
அரசியல்வாதி!



தான் பிடித்த
முயலுக்கு
மூன்றே கால்
அரசியல்வாதிகள் !

**கவிஞர் இரா .இரவி !**

## எதிர்பார்ப்பு !!



தேர்வுபெற்ற புதியஆட்சி மக்களுக்குத்
தேவையான வசதிகளைச் செய்ய வேண்டும்
தேர்மீது வருகின்ற பவனியின்றித்
தேர்வுபெற்ற உறுப்பினர்கள் எளிமையாக
ஊர்தோறும் வீதிசென்று வீடு வீடாய்
உரையாடிக் குறைகளினைக் கேட்க வேண்டும்
யார்எந்தக் கட்சியாக இருந்த போதும்
யாவரையும் சமமாக நடத்த வேண்டும் !

அன்றாடக் காய்ச்சியரை உயர்த்து கின்ற
அரும்திட்டம் ஆட்சியாளர் தீட்ட வேண்டும்
நன்றாக ஊழலின்றி அத்திட் டங்கள்
நடைமுறைக்கு வந்துபலன் நல்க வேண்டும் !
இன்பமுடன் மக்களெல்லாம் வாழ்வ தற்கே
இல்லபொருள் விலைகுறைவாய்க் கிடைக்க வேண்டும்
வன்முறைகள் சாதிமத வேறு பாடு
வாராமல் ஒற்றுமையைப் பேண வேண்டும் !

ஆற்றுமணல் காடுமலை விற்றி டாமல்
அரும்இயற்கை கனிமங்கள் காக்க வேண்டும்
நாற்றுநடும் விவசாயி நலிவு நீக்கி
நல்லவிலை விளைச்சலுக்குக் கொடுக்க வேண்டும் !
ஏற்றத்தைத் தருகின்ற தொழிற்சா லைகள்
நிறுவிபொரு ளாதாரம் பெருக்க வேண்டும்
போற்றிதமிழ் துறைதோறும் வளர வைத்துப்
பொலிவுதனைப் புத்தாட்சி செய்ய வேண்டும் !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**



## குழந்தையின் குரல் !

குழந்தையின் குரல் கேட்டுப் பாருங்கள்
கவலைகள் காணாமல் போகும் பாருங்கள் !

புல்லாங்குழலை விட இனிமையானது என்றும்
பழைய யாழை விட இனிமையானது என்றார் வள்ளுவர் !

இனிமையான குரலால் கேட்பவர்களின்
இதயத்தைக் கொள்ளை அடிப்பார்கள் !

குழந்தையின் குரலை கூர்ந்து கவனியுங்கள்
கற்கண்டு கரும்பின் இனிப்பு இருக்கும் !

கள்ளம் கபடம் இல்லாதது என்றும்
கேட்டிட எவருக்கும் இனிமை மிக்கது !

குழந்தையின் குரலில் நகைச்சுவை இருக்கும்
குழந்தையின் குரலில் நற்கருத்து இருக்கும் !

குழந்தையின் குரலில் காந்த சக்தி இருக்கும்
குழந்தையின் குரலில் குதூகலம் இருக்கும் !

குழந்தையின் குரலில் உண்மை இருக்கும்
குழந்தையின் குரலை அலட்சியம் செய்யாதீர் !

பிழையாக உச்சரித்தாலும் சுவை இருக்கும்
பிறர்மனம் கவரும் வண்ணம் இருக்கும் !

மனதில் பட்டதை அச்சமின்றி உரைக்கும்
மண்ணில் வாழும் தேவதை குழந்தை !

பிறந்தவுடன் குழந்தை குரல் தர வேண்டும்
பிறந்த குழந்தை அழவில்லை எனில் சிரமம் !


பிறந்ததும் குழந்தையின் குரல் வந்தால்தான்
பிரசவம் என்பது நிறைவாக அமையும் !

அழுது பிறக்கும் குழந்தை வாழ்க்கை மற்றவர்
அழுது புலம்பிட இறப்பில் முற்றுப் பெறும் !

அழுகையில் தொடங்கி அழுகையில் முடியும்
அர்த்தமுள்ள வாழ்வு அனைவருக்குமான வாழ்வு !

குடும்பம் மட்டும் அழுதால் தன்னலவாதி
கூடி ஊரே அழுதால் பொதுநலவாதி !

**கவிஞர் இரா .இரவி !**




## தீதும்.. நன்றும்.!

*கிராமத்து
தேநீரகங்களில்...
தேநீருக்கு மட்டும்..
துணைக்கறி..
தொடுகறி இலவசம்
தான்..பெஞ்சுகள்



முழுதும்... விவாதப்
புகைச்சல்களுக்கிடையே...
கசகசத்து
விரவிக்கிடக்கின்றன..
நாளிதழ் பிரதிகள்.!*

**க. குமாரகுரு,**
மயிலாடுதுறை

## தேடல் !

விடைதரும் இணையத்தில்
தேடல் !

சாதனைக்கான சாதனம்
தேடல் !

அறிவியல் வளர்ச்சி
அறிவியலாளர்களின்
தேடல் !

எந்த வயதிலும்
நடக்கட்டும் தேடல் !

நாளைய விளைச்சலுக்கு
இன்றைய விதைப்பு
தேடல் !

தினமும் கடமையாகட்டும்
தேடல் !

தொலைந்தவைகள் கிட்டும்
தொடருங்கள் தேடல் !

கண்டுபிடிப்புகள்
கண்டுபிடிக்கக் காரணம்
தேடல் !

பெற்றுத்தரும் வெற்றி
தேடல் !

வழி கிடைக்கும்
ஒளி பிறக்கும் தேடல் !

**கவிஞர் இரா .இரவி !**

## இருந்தாலும்....

நீ திமிரழகி
அலப்பறை சுந்தரி
அலட்டல் நாயகி
தோட்டாப் புயல்
காலையில் கண் விழித்து
நள்ளிரவு நாம் உறங்கும் வரை
உன் ஆட்டம் துக்ளக் தர்பார்
தான்! ஊழல் ஆட்சியையே
வாக்கால் மாற்றி
விடுகிறார்கள்!
உன் அசுரத்தனத்தை
என்னால் அடக்கி விட
இயலாதா என்ன?!
உன் அழகும் அன்பும்
என்னை ஆட வைக்கலாம்
ஆனாலும் என்னை
அடிமைப்படுத்தி விட
இயலாது!
கணக்காக இருந்தாலும்
கவிதையாக இருந்தாலும்
காதலாக இருந்தாலும்
அது எதுவானாலும்
நாம் இருவரும் பகிர்ந்து
கொள்ளும் போது
உன் துக்ளக் தனத்தைத்



துரத்தி
அடிப்பது
எப்பொழுதுமே
நம் காதலுக்கு
மரியாதை!

**முத்து ஆனந்த்**
வேலூர்

## நாட்குறிப்பு எழுதிய நாட்கள்!

நாட்குறிப்பு எழுதிய நாட்கள்
மிகவும் குறைவு
நாட்களில் மகிழ்வானவற்றை
குறித்து வைத்தேன் !

தினமும் எழுத வேண்டும்
என்ற ஆவலில்
தன்னம்பிக்கையுடன்
தொடங்கினேன் !

சோம்பேறித்தனத்தில்
எழுதவில்லை தினமும்
சோம்பலே காரணமானது
எழுதாதற்கு !

அடுத்த வருடம் முதல்
தினமும் எழுதுவேன்
அடுத்த அடுத்த சபதம்
கடைபிடிக்கவில்லை !

ஒவ்வொரு வருடமும்
எழுதாமல் கழிந்தது
ஒரு வருடமாவது தினமும்
எழுதிட வேண்டும் !

நாட்குறிப்பு தினமும்
எழுதுவது நல்லது
நாடறிந்த அறிஞர்கள் பலர்
தினமும் எழுதுவர் !

நினைவாற்றல்
இல்லாதவர்களுக்கு என்றும்
நினைவூட்ட துணை நிற்கும்
நாட்குறிப்பு !

மறக்க கூடாதவற்றை



நினைவூட்டும்
மறதி நோய்
தீர்க்கும்
மருந்தாகும் !

**கவிஞர் இரா .இரவி!**



## ஹைக்கூ !

விழிகள் இரண்டு
போதவில்லை
சிறகுகள் ரசிக்க
வண்ணத்துப்பூச்சி !

அமர்ந்தாலும் அழகு
பறந்தாலோ அழகோ அழகு
பட்டாம்பூச்சி !

புகை வரும் நெருப்பின்றி
பனி மூட்டம் !

புல்லின் மீது பனித்துளி
முகம் பார்த்தது முழு நிலவு !

அம்மாவின் கைமணம்
கமழும் அப்பத்தை
நினைவூட்டியது நிலவு !

கிளைகள் எனும் கைகள்
விரித்து வரவேற்கும்
மரங்கள் !

நிறமோ கருமை குரலோ
இனிமை குயில் !

கண்டனக் குரல் கொடுத்தன
கூடு கட்டிய பறவைகள்
வெட்டப்படும் மரத்திற்காக !

உடல் நலத்திற்கு நல்லது
அதியமான் அவ்வைக்கு
தந்தது நெல்லிக்கனி !

ஏழைகளின் ஆப்பிள்
ஏழைகளின் வாழ்வாதாரம்
நெல்லிக்காய் !

சிறு துரும்பும் கூடு கட்ட
உதவும் குருவிக்கு !

கண்களைப் போலவே
மீசையும் அழகு பூனை !

கழிவு நீர் உறிஞ்சி
இளநீர் தரும் தென்னை !

கோடையில் வாடி நின்று
கோடைக்கு இதமான நுங்கு
தந்தது பனைமரம் !

இனிமையாக்கியது
பேருந்துப் பயணத்தை
வெள்ளரிக்காய் !

வருடங்கள் உருண்டதை
உணர்த்தின நரைகள் !

**கவிஞர் இரா .இரவி !**


## நீளும் இரவு

நாளும் தவிப்பு
இன்று விடியல் நீளும் இரவு

நகத்தின் கடிப்பு
மனத்தின் தவிப்பு
கணிப்பின் பதகளிப்பு

மாலைகள் சூட
காத்திருக்கும் கழுத்துகள்
எதிர்பார்ப்பின் உச்சம்

**சசிகலா விஸ்வநாதன்**



## மருத்துவச்சிப் பணியே மாண்பு!

நேரிசை வெண்பா!

மகப்பேற்றுக்காலத்தில்
மாண்பாகத் தொண்டு
தகவாகச் செய்வரே!
தண்மை..வகையாக
எக்காலும் தன்னலம்
இல்லாமல் நாட்டிலே
தக்கவாறு செய்வார் தக!

தாய்சேய் நலங்காப்பர்
தக்க மருத்துவச்சி!
நேய உணர்வோடு
நெஞ்சார்ந்தே..ஆய
கலையாக எண்ணிக்
கடமை புரிவர் மலையன்ன
தொண்டன்றோ மாண்பு!

**முனைவர் இராம.வேதநாயகம்!**

# நூல் விமர்சனம்

"நா.கதிரைவேற்பிள்ளையின்
தமிழ்மொழி அகராதி."
சாரதா பதிப்பகம்,
சென்னை – 600 014.
"அவனாலே முத்தமி ழென்றும்
துலங்கும் அவனாகும் இந்நூற்
கரண்."

அ - தமிழ் மொழியின் நெடுங் கணக்கில் வரும் முதல் எழுத்து. உயிர் முயற்சியாற் பிறக்கும் எழுத்துகளுள் வாயைத் திறந்த அளவிலே ஒலிக்கும் ஒரு குற்றுயிர், அஃறிணைப் பன்மையீறு, அஃறிணைப் பன்மைவினை முற்று, ஆறாவதன் பண்மையுருபு, இன்மை, எதிர்மறை, குறைவு, சம்மதி, சாரியை, அந்த, சுட்டு, தடை, பிறிது, வியப்பு இவற்றைக் காட்டும் ஒருபசருக்கம், எட்டென்னும் எண்ணின்குறி, ஓரெழுத்து, சுக்கு, திப்பிலி, பெயரெச்ச வினையெச்ச விகுதிகள், சிவன், விஷ்ணு, பிரமன். அ ஆ - அதிசய விரக்கக் குறிப்பிலே வரும் ஒரு கூட்டிடைச்சொல், விட்டிசை. அஃக - குறைய, சுருங்க, நுண்மையாக. அஃகம் - விலைப்பொருள், தானியம், ஊற்றுநீர், முறைமை. அஃகரம்- வெள்ளெருக்கு, கிரியை.அஃகல் - குறைதல், சுருங்கல்.

அஃகாமை - குறையாமை, சுருங்காமை. அஃகான் - அஎன்னும் முதலெழுத்து. அஃகியஇ - குற்றியலிகரம். இஃகியஉ - குற்றியலுகரம். அஃகியஐ - ஐகாரக் குறுக்கம். அஃகியஔ - ஔகாரக் குறுக்கம். அஃகியதனிநிலை- ஆய்தக்குறுக்கம். அஃகியமஃகான்- மகரக் குறுக்கம். அஃகியவறிவு- கூர்மை, நுண்ணறிவு, விவேகம், சூக்கும புத்தி. அஃகு - அஃகென்னு முன்னிலை யேவல் தெரிநிலை வினைப்பகுதி, பெயரெச்சத் தொகை.அஃகுதல் - சுருங்குதல், அளவிற்குறைதல், கழிந்துபோதல், குவிதல், நுண்மையாதல், நீர்வற்றுதல்.

தொகுத்தனுப்பியவர்:–
கவிச்சாரல் கொள்ளிடம்
காமராஜ்,
திருச்சிராப்பள்ளி – 621'216.




டம்ளரின் அடியில்
எஞ்சியிருந்த காபியை
நீ பகிர்ந்தபோது
தித்தித்தது.



காபி.. கவிதை
கேட்கிறாய்..
கா தலும்..
பிரியமுமாய்.

மழை காபி நீ
வருமுன்
வாசனைக்கென்றேஎப்போதும்.

**ரிஷபன்**

## துளிப்பாக்கள்

சிறகுகள் இருந்தும்
பறக்க முடியவில்லை
ஓவியத்தில் கிளிகள்!

தலைக்கனம் இருந்ததால்
எரிந்து விடுகிறது
உரசும் தீக்குச்சி!

கிணற்று நீரில்
மிதந்த நிலா இறைக்கும்
வாளியில் சிக்கவில்லை!

புள்ளி மான் நகராமல்
துள்ளிக்கொண்டு ஓடியது
சிறுமி வரைந்த
ஓவியத்தில்!



அப்பாவின்
ஓடாத
சைக்கிள்
அழகாக
ஓடிக்கொண்டிருந்தது
அவன் மனதில்!

**கவிஞர் பூ.சுப்ரமணியன்**
பள்ளிக்கரணை

## வயது !

முப்பது வயதிற்கு மேல்
திருமணம் ஆகி இருந்தாலும்
சரி, ஆகாமல் இருந்தாலும்
சரியே... 'பேச்சிலர் '
வாழ்க்கையே சிறந்தது
என்ற முடிவுக்கு தானாக
தள்ளப்படுவீர் !

நாற்பது வயதுக்கு மேல்
'ஃபிகரை ' பற்றி சிந்திக்க
நேரம் இருக்காது...
ஏனென்றால் நேரத்திற்கு'
சுகர் ' மாத்திரை சாப்பிடும்
நிலைக்கு தள்ளப்படுவீர்....

ஐம்பது வயதிற்கு மேல்
என்னதான் வெள்ளை
முடிக்கு கருப்பு 'டை
' அடித்து வயதை
மறைத்தாலும் கண்களுக்கு
கீழ் விழும் சதைப்பற்றை
மறைக்க இயலாது...

அறுபது வயதுக்கு மேல்...
"உங்க கூட வாழ்ந்து என்ன
சுகத்தை கண்டேன் !'
என்ற வார்த்தையை கேட்டு
கேட்டு பழகியிருப்பீர்கள் !

எழுபது வயதுக்கு மேல்...
"உங்களைப் பார்த்தால்
இன்னும் அறுபது வயசு
தான் தோணும் !" என்று
சொல்லிவிட்டு நண்பர்களை
பார்த்து கண்ணடிப்பவர்கள்
அதிகம் இருப்பார்கள் !


என்பது வயதிற்கு மேல்
நீங்கள் இருப்பின்...
"கிழம் மண்டைய போடாம
எங்க உயிரை வாங்குது !"
என்ற வார்த்தை காது குளிர
கேட்க நேரிடும் !

தொண்ணூறு வயதிற்கு
மேல்... "மேல இருக்கிறவன்
எப்ப தான் கூப்பிடுவானோ !"
என்று நொந்து போய் கூற
நேரிடும் !



நூறாவது
வயதில்
நீங்கள்
இருப்பின்...
படுக்கையில்
விழாமல்
இருந்தால்
மட்டுமே
மனிதனாக
மதிக்கபடுவீர் !

**எம்.பி.தினேஷ்.** கோவை



## "கையூட்டு காலமிது"

கையூட்டு காலமிது!
நியாயம் நிழலாய்
நழுவும் நேரமிது!
உழைப்பின் விலை
மண்ணில் புதைகிறது!
உண்மையின் குரல்
காற்றில் கரைகிறது!

வாசல் தட்டும் நேர்மை
வெளியே நிற்க...
குறுக்கு வழியில் கரன்ஸி
உள்ளே சென்று...
அர்த்தமில்லா விதிகளை
அச்சமின்றி எழுதுகிறது!

நீதியை அளவிடும்
தராசு சாய்ந்தது!
வெள்ளிக்காசு பேசுமிடத்தில்,
வெள்ளை மனசு வீழ்ந்தது!

இதுவே ஃபார்மாலிட்டி
என்றுரைக்கும் சமூகம்
எப்போது மாறும்?

மாறும் நாளில்
உண்மை எழுந்து நிற்கும்?
உரிமையின் குரல்
ஓங்கி ஒலிக்கும்!

அந்நாளில் கையூட்டுக் கறை
மொத்தமாய் அழியும்!



நேர்மறை
எண்ணங்கள்
மண்ணில்
நிலைக்கும்!

**முகில்**
**தினகரன்**
கோயமுத்தூர்

"நாளைக்கு நமக்கும் இதே
கதிதானா?"

கடற்கரையில் காத்திருந்த
காதலன்
தன் பிரியமானவள் வரும்
வரை அங்கே நிகழும் சில
காட்சிகளைக் கவனித்தான்.

கட்டுமரத்தைக்
கடலில் செலுத்துவதற்கு
முன் ஒரு மீனவன் அந்தக்
கடல் தாயிடம் இப்படிப்
பிரார்த்தித்தான்..!

ஏ கடல் தாயே! ஒரு
நாளாவது என் மனைவி
மக்களுடன் சந்தோஷமாக
ஆசைதீரப் பேசி மகிழ ஒரு
நல்வாய்ப்பை நீ எனக்கு
வழங்க மாட்டாயா?

"நாள் முழுவதும் கட்டுமரஞ்
செலுத்தி கடலில்
மீன்பிடிக்கப் போராடுகிறேன்;
கால் வயித்துக் கஞ்சிக்குக்
கூட என்னால் சம்பாதிக்க
இயலவில்லை; சே..! சே..!
இது என்ன? மோசமான
வாழ்க்கையடா சாமி? என
முணுமுணுத்தான்..!


இந்த மீனவனைப் பார்த்ததும்
அக் கடற்கரையில் தன்
காதலிக்காகக் காத்திருந்த
அக் காதலன் உடனே இப்படி
யோசித்தான்..!

நாளைக்கு நம்மைக்
காதலிக்கும் ஆசைக்
காதலியை மணந்து
கொண்டால் இந்தக்
கட்டுமரக்காரனின்
கதிதான் நமக்கும் பரிசாகக்
கிட்டுமோ? என்று நீண்ட
நேர யோசனையில்
இருந்தான் அவன்..!

**கவிச்சாரல் கொள்ளிடம்**
**காமராஜ்,**
திருச்சி

## ஆக்கம் கூட்டலாம்...

ஆண்டு தோறும் வரும்
அக்னி நட்சத்திரம்...
அனலாய் வெயில் சுட்டாலும்
அதற்குள் ஒளிந்திருக்கும்
பிரபஞ்ச ஆரோக்கியம்
ஆகாய ரகசியம்...
கத்திரி வெயில் காலத்தில்
கல்யாணம் காது குத்து
சடங்கு என்று சுப
காரியங்கள் எதுவும்
கூடாதென்று காரணக்
குறிப்போடு
வழி காட்டிச் சென்றனர்
வாழும் கலை வகுத்த
வளமார்ந்த நம் முன்னோர்...
கத்திரி வெயிலை
சித்திரை மாதத்தின்
சிறப்பென்று சொல்லி
கொண்டாடி மகிழும்
இயற்கை ஆர்வலரும்
இங்கே உண்டு காண்
குதர்க்கம் ஏதுமின்றி
கோடை விடுமுறையை
ஆண்டு தோறும் அள்ளி
ஆனந்தம் கொள்ளும்
ஆசிரியர் அவர்தம் மாணவர்
ஆளுமைமிக்க அரும் பேராளர்
பெருமைமிகு நீதித்துறை
கனவான்கள்...
இன்னோரென்ன
இன்னோரென்ன
இனியோர்க்கும்
நீண்ட நெடுங்காலமாய்
ஆதார சக்திக்களம்
அக்னி நட்சத்திரம்....
வெகுஜனக் கூட்டம்
வெயிலுக்குப் பயந்து
வெளியே தலைகாட்டத்
தயங்குவதால்
சில்லறை வியாபாரி முதல்
செல்வம் கொழிக்கும்
கார்ப்பரேட் முதலாளி வரை
கத்திரி காலத்தில்
கடும் பாதிப்பில் கஷ்ட
உஷ்ணத்தில் கண்ணீர்
வடிப்பது தவிர்க்க
முடியாத
தவிப்பு அன்றோ?
அனைத்திலும்
ஆதாயம் காணும் உள்ளூர்
அரைகுறை
அரசியல் தலைகளோ
நீர்ப்பந்தல் மோர்ப்பந்தல் என்று
வாரி வழங்கும் வள்ளலாய்
வரிந்து கட்டி வந்து நின்று
வசூல் வேட்டை
நடத்திடுவார்...
அக்னி நட்சத்திரத்தையும்
அந்நியமாய் பாராமல்
அரவணைக்கும் விதமாய்
இணங்கி விளம்பர
வெளிச்சத்தோடு
வளம் பெருக்கும் வல்லமை
மார்க்கமாய் மாற்றிடுவார்...
மகிழ்ச்சிக் கடலில்
திளைத்திடுவார்...
அக்னி நட்சத்திரத்தின்
ஆயுட்காலம் ஆண்டில்
இருபத்து ஐந்து நாட்கள்
ஆனாலும் இதயத்தில்
தெம்பும் திடமும்
நேர்திறனில் இருந்தால்
போதும் எரிச்சல் சலிப்பு என்று
எதிர்மறை எதுவும்
கொள்ளாமல் இனிமை
உணர்வில் எதிர் கொண்டு
எளிதாய் கடந்தும்
போகலாம்...ஏற்றம் பலவும்
காணலாம் இறுதியாய்
இன்னுமொரு இதம் தரும்
வேண்டுகோள்:
பாலைவனப் பகலவனாய்
அக்னி பாலை அளவில்லாமல்
பொழிந்து தள்ளும்
அமுத சுரபியாய்
அற்புதப் பரிசாய்
எண்ணிப் பழகுவோம்
அக்னி நட்சத்திரத்தின்
ஆற்றல் வெள்ளத்தை
அதிநவீன நுட்பத்தால்
ஆற்றுப் படுத்தினால்
அளப்பரிய நன்மைகளை



நாளும் அறுவடை
செய்யலாம்
ஆக்கம் கூட்டலாம்
ஆனந்தம் பெருக்கலாம்
அகிலம் வெல்லலாம்.

**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்

## "எனக்கு நற்கதி இனி ஏது?"

பூப்பறிப்பவர் கையில் கிடைத்திருந்தால் இந்நேரம் நானொரு
பூமாலை ஆகி இருப்பேன்.

பூச்செடியில் பறிக்கப்படாமல் இருந்திருந்தால் வண்டினத்தின்
பசிதீர்க்கும் தேன்துளிகளை வாரி வழங்கியிருப்பேன்..!

யாரும் பறிக்கவும் இல்லை; அச் செடியில் நிரந்தரமாகத் தங்கும்
தகுதியும் எனக்கு ஏனோ கிட்டவில்லை;

இப்பொழுது மண்மடியில் உதிர்ந்த மலராகக் கிடக்கின்றேன்;
இனி எனக்கு நற்கதி ஏது? சந்தேகம்தான்..!

@@@@@@@@@

"காலதேவனின் வாகனச் சக்கரம்."

நெடுஞ்சாலையில் வழுக்கியோடும் வாகனச் சக்கரங்கள்;

இரும்புத் தண்டவாளங்களை முத்தமிடும்
தொடருந்துச்சக்கரங்கள்;

தொழிற்சாலையில் இயந்திரங்களை இயக்கும் பற்சக்கரங்கள்;

அலுமினியப் பறவைகள் ஓடுபாதையைக் கடக்க உதவும்
உருளிப்பட்டைச் சக்கரங்கள்;



மேற்கூறிய இவையனைத்தும் மனித ஆயுளைத்
தீர்மானிக்க காலதேவனின் கட்டளைக்குக்
கீழ்படியும் அவனின் வாகன விதிச்சக்கரங்கள்
எனச் சொன்னால் அது மிகையாகாது..!

**கவிச்சாரல் கொள்ளிடம் காமராஜ்,**
திருச்சி



## எங்கள் ஊர் திருவிழா:

ஆக்ரோஷமான காவல்
தெய்வங்களுக்கு மத்தியில்
அன்பு பொங்கும் அழகன்
எங்கள் காவல் தெய்வம்
கருப்பையா!

காவடிகளும்
கரும்புத்தொட்டில்களும்
கடலென அவன் காலடியில்
குவியும் பால்குடங்கள் ததும்பி
வரும்பொழுது பக்கத்தில்
நடந்து வருபவர்களுக்கும்
அருள் வரும்
பறவை காவடிகள் பறந்து
வரும்பொழுது பார்ப்பவர்கள்
உடல் சிலிர்க்கும்

கருப்பன் திருவிழா
பதினைந்து நாளும்
கறம்பக்குடியில் கச்சேரி
களைகட்டும்

பசியோடு வருபவர்களுக்கு
ஐந்தடிக்கு ஒரு
அன்னதானப்பந்தல்
வெயிலில் வாடி
வருபவர்களுக்கு
இரண்டடிக்கு ஒரு தாகம்
தீர்க்கும் தண்ணீர் பந்தல் என
தன்னை நாடி வருபவர்களை
வயிறார வரவேற்பான் எங்கள்
காவல் தெய்வம் கருப்பையா

கருப்பனுக்கு காப்பு கட்டியதும்
ஊர் தாண்ட எங்கள் கால்கள்
நடுங்கும் கருப்பனின்
காவலில் கறம்பக்குடியே
நிம்மதியாக உறங்கும்

கறம்பக்குடி என்றதும் நீயா
நானா கோபி உடனடியாக
கேட்ட கேள்வி
கருப்பையா கோவில் உள்ள
கறம்பக்குடியா என்று
அவ்வளவு சிறப்பு
கறம்பக்குடி கருப்பு

**கவி சிற்பி.தங்க**
**பிரியதர்ஷினி** . கறம்பக்குடி

## பாசத்தில் பாவம் தவிர்த்திடு.!

பாசத்தினாலே வளர்கிற
பிள்ளைக்கு செல்லம்
கொடுக்காதே!
ஆசையினாலே வளர்க்கிற
பிள்ளைக்கு மோசத்தைச்
செய்யாதே! பாசத்தில்
வீழாதே.!

களவு செய்தாலும்..
பொய்யைச் சொன்னாலும்
கைத் தட்டி மகிழாதே!
கருணை மறந்தாலும்
பிடி வாதம் பிடித்தாலும்
கண்டிக்கத் தவறாதே..!
கண்டிக்கத் தவறாதே..!

ஐந்து வளைக்காமல்
அதிக பாசத்திலே
பிள்ளையை வளர்க்காதே..
நய்ந்து போகாமல்.. நல்ல
குணத்தோடு வளர்த்திட
மறக்காதே!
வளர்த்திட மறக்காதே.!

கேட்டது எல்லாம் வாங்கிக்
கொடுத்து பிள்ளையைக்
கெடுக்காதே.. அவன்
கெட்டவழியினில் செல்கின்ற
போதிலே.. தண்டிக்கத்
தவறாதே!
தண்டிக்கத் தவறாதே!

பாசத்தினாலே மோசம்
போனவர்கள் பலபேர்
இங்குவுண்டு! காசைக்
கரியாக்கும் புகை மது
சூதெனும் குழியில்
வீழ்ந்ததுண்டு! அதனைத்
தவிர்த்தல் நன்று.!

\-------------------

ஆம்புலன்ஸ் நம்பர் இங்கு
நூற்றி எட்டு!
ஆண்டவணின் மந்திரமும்
நூற்றி எட்டு!
அன்றாடம் கவலைகளோ..
நூற்றி எட்டு.! ஆனாலும்
மதிப்பு மிக்கது நூற்றி எட்டு!

நூற்றி எட்டு.. ஐயா நூற்றி
எட்டு.. நூறோட எட்டு
சேர்த்தா நூற்றி எட்டு!

திருமாலின் திவ்விய தேசம்
நூற்றி எட்டு.!
சிவனாரின் ருத்ராட்சம்
நூற்றி எட்டு.!
அம்பிகையின் சக்தி பீடம்
நூற்றி எட்டு..! ஆன்மிக
அதிஷ்ட எண்ணும்
நூற்றி எட்டு!

பிள்ளையார் முன்
தோப்புக்கரணம் நூற்றி
எட்டு.. அந்த முருகர் மலை
கோவில் படிகள் நூற்றி எட்டு!
கல்லாவில் வைக்கும் பணம்
நூற்றி எட்டு..! எல்லோர்க்கும்
பிடித்த எண்ணு நூற்றி எட்டு.!

வானவியல்.. கணிதவியல்..
உபநிடமும் நூற்றி எட்டு!
ஞானம் பெற புத்தன் நடந்த



பாதையிலும்
நூற்று எட்டு.!
அவசர ஊர்தி
எண்ணும்
நூற்றி எட்டு.!
அருமையான
எண்ணுதானே
நூற்றி எட்டு.!

**வே.கல்யாண்குமார்.**



## மரச் சிற்பங்கள்

கழிதலில் கிடைக்கும்
அற்புதம்

கற்பனையில் உதித்து
கண்களுக்கு
விருந்தாகும்

வாழ்நாளில் வரமாகி
வளம் பல தந்து
வீழ்ந்தும் விருந்தாகும்
மரத்தின் கொடை

சிந்தனையில் தோன்றி
கலையாக அவதரித்து
காட்சிக்கு வரும்

பணக்காரர்களின்
வரவேற்பறையில்
காணும் பொருளாகி
ஏழைகளின் சமையலறையில்
உணவாகி உருவமெடுக்கும்

அசைவின்றி நம்மை
அசைக்கும் அரிதாரம் பூசி
அழகாகும்

பிள்ளைகள் கரங்களில்
பொம்மையாகி
பெரியவர் கருத்தினில்
பொருளாகி
எல்லோர் மனதிலும்
இடம் பிடிக்கும்



சிதைந்து சிற்பமாகும்
வேண்டாதன
உதிர்த்தால் வேண்டியது
அழகாகும் ஊருக்கு
உணர்த்தும் உன்னதக்
கலைப் படைப்பு.

**தமிழ்நிலா**

## வெளிச்சம் தேடும் வேளாண்மை !

இருளில் மூழ்கி வருகிறது வேளாண்மை
இருளை நீக்கி வெளிச்சம் பாய்ச்ச வேண்டும் !

அயல்நாட்டு குளிர்பானங்கள் குடிப்பதை
அறவே நிறுத்திட அனைவரும் முன்வர வேண்டும் !

அயல்நாட்டு உரங்களையும் பூச்சி மருந்துகளையும்
அறவே ஒழித்து இயற்கை உரம் மருந்து தெளிப்போம்

வேளாண்மையால் விளைந்து வரும் சத்து மிக்க
வெப்பம் தணிக்கும் இளநீர் அருந்திட வேண்டும் !

வேளாண் பொருள் விலையில் பேரம் பேசாதீர்கள்
வேளாண் செழிக்க அனைவரும் துணை நில்லுங்கள் !

உழவன் படும் துன்பத்தை நினைத்துப் பாருங்கள்
ஒன்றை விளைவிக்க படும் பாட்டை உணருங்கள் !

இயற்கை மழையோ பொய்த்து வாட்டுகின்றது
இரக்கமில்லா மனிதர்களும் தர மறுக்கின்றனர் !

கடன் வாங்கி நட்டதில் நட்டம் அடைகிறான்
கரும்பு நெல் எது நட்டாலும் நட்டம் அடைகிறான் !

ஒரு நாடு செழிக்க வேண்டுமானால் வேளாண்மை
ஓங்கினால்தான் நாடு செழிக்கும் உணர்வோம் !

மனிதஇனம் உயிர் வாழ உணவு அவசியம்
மற்ற அனைத்திலும் உயர்வானது வேளாண்மை !

ஊருக்கே சோறுப் போட்டவன் வாடலாமா ?
ஊர் கூடி உதவிடுவோம் உழவர்களுக்கு !

மனம் வெறுத்து தற்கொலை செய்ய விடலாமா ?
மாந்தநேயம் காக்க உழவர்களைக் காப்போம் !

இதுவரை தற்கொலை செய்த எண்ணிக்கை போதும்
இனி ஒருவரையும் தற்கொலை செய்ய விடாது காப்போம் !

வெளிச்சம் தேடும் வேளாண்மைக்கு எல்லோரும்
வெளிச்சம் பாய்ச்சிட உதவிக்கரம் நீட்டுவோம் !

**கவிஞர் இரா .இரவி !**

## தெள்ளிதின் பேசல் தெளிவு!

நேரிசை வெண்பா!

சொற்களைக்காத்தோம்பிச்
சோர்வின்றிப்பேசவேண்டும்

அற்புதமாய்ச்சொற்களை
ஆய்ந்தேதான்..பொற்போடே

உள்ளத்தால் மெய்ம்மறந்தே
உன்னதம் கொண்டேதான்

தெள்ளிதின்பேசல் தெளிவு!

கேட்டார்ப்பிணிக்கும்
கெடுதலே இல்லாத

ஏட்டினில் பாராட்டும்
ஏற்றநல்.. ஈட்டிடும்

எள்முனை தீங்குமே
இல்லா வகையிலே

தெள்ளிதின்
பேசல் தெளிவு!



## நுரையீரலைக் காப்போம்!

நேரிசை வெண்பா!

நாள்பட்ட தொற்றாநோய்
நாளும் சுவாசநோய்


ஆள்வினை யாகும்
அழகான.. ஆளும்

நுரையீரல் பாதிக்கும்
நொந்துபோகும்..உள்ளம்

மருத்துவத்தால்
நன்றாகும் மாண்பு!

மூச்சுத் திணறலை
மேமையின்றி உண்டாக்கும்

போச்சே உயிரே
பொலிவின்றிக்..கூச்சமாய்
ஆக்குமே ஒவ்வாமை



ஆனதால்
ஓர்நாளில்
போக்கலாம்
அன்றே புரி!

**முனைவர்**
**இராம.**
**வேதநாயகம்.**

## தனித்துவம்

பத்துப்பேர்
பட்டுவேஷ்டி, சட்டை
போட்டு நின்றாலும்~நீ
பழைய ஆடைகளை
உடுத்திநில்,

கோடிப்பேர் கோஷம்
போட்டுச்சென்றாலும்
உன் குரல்
ஓங்கி ஒலிக்கட்டும்,

பல பேர் பரிட்சை
எழுதினாலும் நீதான் முதல்
மதிப்பெண் எடுப்பவன்
என்பதை முடிவு செய்துவிடு,

பத்தோடு பதினொன்னு
அத்தோடு நீயும் ஒன்னு
என்பதில் உடன்படாதே
எப்பொழுதும் நீதான் ஒன்னு
என்பதை தீர்மானித்துவிடு,

யானைக்கு வாலாய்
இருப்பதைவிட பூனைக்கு
தலையாய் இருப்பதுதான்
முக்கியம் என்பதை
தெரிந்துக்கொள்,

எங்கும்,எப்போதும்
உன் தனித்தன்மையை
நிலைநாட்டு கெட்டாலும்
மேன்மக்கள்
மேன்மக்களே~என்ற
கவிஞன் வரிகளை
உனதாக்கு,

தனித்தன்மை~நம்மை
தனிமை படுத்திவிடாது
பலபேர் நம்மை



தேடி
வரச்செய்யும்
தனித்துவம்
உனது
அடையாள
மாகட்டும்,

**நாகை**
**ஆசைத்தம்பி**

GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும் சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE ரூபாய் ₹ 1.80 லட்சம்
800 SQFT
1. முன்பணம் ₹ 1,00,000/-
2. 50% பணம் செலுத்தினால் பத்திரப்பதிவு செய்யப்படும்.
3. மாதம் குறைந்தபட்சம் ₹ 2500/- முதல் செலுத்தலாம்
4. முழு தொகையும் செலுத்தியபின்பு உரியநபரிடம் பத்திரம் ஒப்படைக்கப்படும்.
5. பத்திரப்பதிவு
6. பட்டா COPY
FREE FREE!!! 10 கிராம் GOLD COIN சேமியுங்கள்
அரக்கோணம் பாராஞ்சி
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118

WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
HOUSEKEEPING STAFF (Male & Female)
MARKETING EXECUTIVE – ELECTRICAL FIELD (Male & Female)
ELECTRICIAN & HELPERS (Weekly / Monthly Wages)
ELECTRICAL SUB-CONTRACTOR
DRIVER
GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!

குன்றத்தூர்
உடனடி வேலைவாய்ப்பு
WANTED
டெல்டா டைமண்ட் டூல்ஸ்
சென்னை - குன்றத்தூர்
உதவியாளர் (HELPER)
அடிப்படை அறிவு, உடல் தகுதி, அனுபவம் தேவையில்லை
டர்னர் (TURNER)
டர்னர் தொழில்முறை அனுபவம் தேவை, வரைபடங்கள் படித்தல்
தகுதி: 10வது / ITI (FITTER/TURNER)
வயது வரம்பு: 18-35
சம்பளம்: நல்ல ஊதியம் + கூடுதல் நன்மைகள்
தெனிமக்கு வரனன்
தொடர்புக்கு / For Details:
pH: 9841738379

ADVERTISE WITH US
7789941009

ULTRA SEC FACILITY FORCE
YOUR SAFETY, OUR COMMITMENT
OUR SERVICES
Security Services (Trained Security Guards, Supervisors, 24x7 Coverage)
Facility Management Services (Housekeeping, Maintenance, Cleaning)
Manpower Supply (Skilled & Unskilled Stafffor Industries, Apartments, Offices)
WHY CHOOSE US?
- Experienced & Professional Team
- 24/7 Reliable Support
- Affordable & Transparent Pricing
- Customized Service Plans
ULTRA SEC FACILITY FORCE
Flat No : 13A, Door No: 1,
Moovarasampet Main Road,
Madipakkam, Chennai-600091.
+91 93632 98980 ultrasecfacility@gmail.com
www.ultrasecfacility.com

WANTED
ஆட்கள் தேவை
சமையல் | வீட்டுவேலை
குழந்தை | நோயாளி
தங்கி | தங்காமல்
சென்னையில் தங்கி / தங்காமல் வேலை செய்யலாம்
தொடர்புக்கு 8148215778 8248610592
A trustworthy help service for Chennai families

உ முருகன் துணை
A.S.R ரியல் எஸ்டேட்
காஞ்சிபுரம்
சுலப தவணை உள்ள வீட்டு மனைகள் வாங்க, விற்க மற்றும் பட்டா மாறுதல் பெயர் மாற்றம் செய்து தரப்படும்.
காஞ்சிபுரம், செய்யாறு உள்ள வீட்டு மனைகள் மற்றும் உள்ள அனைத்து மாவட்டகளிலும்
அணுகவும்
7305025591, 9578622711

ATTENTION
ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு
10th., ITI Electrical B- Licence, Dip EEE தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.


SHRI RAGHAVENDRA SCAN CENTRE
We Are HIRING
PRO
PUBLIC RELATION OFFICER
DIAGNOSTIC ULTRASOUND & COLOUR DOPPLER STUDIES
TIMING : 9AM-8PM
Attractive salary package
@TONDIARPET
+91 8189997221
+91 9094337745
ADDRESS:THAI APARTMENTS 618 T.H.ROAD (NEAR) TONDIARPET METRO STATION CHENNAI-81

Sanjay Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple) Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai | Real Choice Chennai | Real Choice Chennai

THANIGAI
WANTED ISO
REAL ESTATE MARKETING
PART TIME & FULL TIME
☑ Flexible work ☑ No Age Limit / No Investment
☑ No Experience/No Qualification ☑ No Risk / No Target
Simple work - just refer customers only
Office Location : Near Perambur Railway Station
K. Ramakrishnareddy 90879 55111

திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு
PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
- Location: (Nr Mylapore Jn)
- Direction: N/ Face
- Total Area: 2400 sft
- Price: RS.650/sft
LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner
www.vgpdevelopers.com

எலாவூர் மிக அருகில்
சுண்ணாம்பு குளம்
Sqft ₹120/_
(மினிமம் 10000sqft)
Ph.9600660997


























**ATTENTION**

**ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு**

10th., ITI Electrical B- Licence, Dip EEE தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.



திருமுடிவாக்கம்
அருகாமையில் அமைந்துள்ள
சாரதா கம்பெனிக்கு

**ஆட்கள் தேவை**

ஆண்கள் மட்டும்

வயது: 18 முதல் 35 வரை

கல்வி தகுதி
10 முதல் any Degree

தங்கும் இடம் உணவு வசதி உண்டு
ESI , PF , Attendance Allowance போன்ற
அனைத்து வசதிகளும் உண்டு

சம்பளம் :
**18,000 முதல் 22,000 /-**

தொடர்புக்கு :
9962400330 , 9962400319 , 9962400336

மெயில் : hrsarathagroup@gmail.com






































## Special Invitation

to retired seniors **housewwives businessmen bankers**
CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate

To restart your **second Innings with a career business opportunity**

- Flexible timing unlimited incentive
- No target work from home training provided


For successful business.

**Contact Mr. Irudaya Raj**
**Ph.9486634780**





# பல்சுவை களஞ்சியம்



## பெரியவர்களிடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான விஷயங்கள்



1. அனுபவ அறிவு
வாழ்க்கையின் பல தருணங்களில் சந்திக்கும் சவால்களை எவ்வாறு சமாளிக்க வேண்டும் என்பதற்கான பாடங்களை அவர்களிடம் இருந்து கற்றுக்கொள்ளலாம்.

2. ஒப்புகொள்வது மற்றும் பொறுமை
சூழ்நிலைகளுக்கு ஏற்ப அடங்கி ஒழுகுவது, பொறுமையுடன் செயல்படுவது வாழ்க்கையில் வெற்றியை தரும்.

3. மக்கள் தொடர்பு கலை
உறவுகளை பராமரிக்கவும், சமூகத்தில் அனைவருடனும் நல்லுறவை கொண்டிருக்கவும் அவர்களின் அணுகுமுறைகள் உதவும்.

4. உழைப்பின் மதிப்பு
கடின உழைப்பின் மூலம் சாதனை செய்வதை அவர்கள் வாழ்க்கையில் காட்டியிருப்பார்கள்.

5. நேர்மையும் ஒழுக்கமும்
எந்த சூழ்நிலையிலும் நேர்மையாக வாழ வேண்டும் என்பதற்கான பாடங்களை அவர்களிடமிருந்து கற்கலாம்.

6. முடிவெடுக்கும் திறன்
சிறந்த முடிவுகளை எடுத்து, வாழ்க்கையில் முன்னேறுவது எப்படி என்பதை அவர்களின் அனுபவம் மூலம் அறியலாம்.

7. பொருளாதார மேலாண்மை
பணத்தை எப்படி மேலாண்மை செய்வது, தேவைக்கேற்ப செலவழிப்பது போன்ற விஷயங்களை அவர்கள் கற்பிக்கலாம்.

8. அன்பும் பரிவும்
மற்றவர்களை நேசிப்பதும், தயை செலுத்துவதும் மனித உறவுகளை வளர்க்க உதவும்.

9. தன்னம்பிக்கை
எதிலும் வெற்றிபெற, மனஉறுதி மற்றும் தன்னம்பிக்கை தேவை என்பதை அவர்கள் வாழ்க்கை எடுத்துக்காட்டாக இருக்கும்.

10. பாரம்பரியமும் பண்பாடும்
நமது கலாச்சாரம், மரபுகள், மற்றும் பண்பாட்டின் சிறப்பை அவர்கள் வழியாக தெரிந்து கொள்ளலாம்.

பெரியவர்களிடம் இருந்து கற்றுக்கொள்வது நமது வாழ்க்கையில் சிறந்த வழிகாட்டியாக இருக்கும்!

**எம்.அசோக்ராஜா**
அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி _620015

# மீம்ஸ்









## யூடியூப் தினம்




ஏப்ரல் 23 யூடியூப் தினம் எனலாம். முதன் முதலில் 2005 ல் இதன் இணை நிறுவனர் ஜாவேத் க்ரீம் அவர்களை சான் டியாகோ மிருகக்காட்சி சாலையில் காட்டுகிறது. அதுவும் 'நான் மிருகக்காட்சி சாலையில்' என்ற தலைப்பில் 18 விநாடிகள் காட்டப்படுகின்றது.

இந்த வீடியோ 2014 வரை 13 மில்லியனுக்கும் மேலாக பார்க்கப்பட்டதாக கருத்து கணிப்புகள் கூறுகின்றது.

விஞ்ஞான மாயக்கண்ணாடி என்றழைக்கப்படும் யூடியூபை ஊழியர்கள் 'சட் ஹர்லி' 'ஸ்டீவ் சென்' மற்றும் ஜவேத் கரீம் என்பவர்களால் தொடங்கப்பட்டது.

2005ஆம் ஆண்டு பிப்ரவரி 15ம் தேதி தொழில்நுட்ப யுகத்தில் கால்பதித்தது எனலாம்.

பிறகு கூகுள் நிறுவனம் அதை வாங்கியது. அப்போதிருந்ததைவிட தற்போது பல மில்லியன்கள் டாலர்கள் மதிப்பு உயர்ந்துள்ளது.

2005 அமெரிக்காவில் பயன்பாட்டுக்கு வந்த இந்த தளம் இன்னும் சில நாடுகளுக்கு 2007ல் வெளிவந்தது.


இந்தியாவில் இந்த யூடியூப் 2008ல் மே ஏழாம் தேதி அறிமுகம் செய்யப்பட்டது.
ஒரு திரைப்படம் வெளிவருவதற்கு முன் பார்வையாளர்களை கவர இதன் மூலம் டீசர்கள், சில முக்கிய காட்சிகள் இடம்பெற செய்து பார்வையாளர்களை கவர பெரும் ஆயுதமாக பயன்படுகிறது.
தற்போதைய காலகட்டத்தில் தொழில் நுட்பம் அதிக அளவில், அதிவிரைவில் வளர்ந்து கொண்டிருக்கின்றது.
வாட்சாப், யூடியூப், கூகுள், இன்ஸ்ட்டா என்று எத்தனையோ வகையில் பயன்படுத்தி வருகிறோம்.
இந்த செயலிகளால் நன்மையா தீமையா என்று எத்தனை பட்டிமன்றங்கள் வைத்தாலும் நடுவர் தீர்ப்பு வழங்க சற்று தடுமாறுவதை காணலாம்.
யூடியூப் என்பது நாளுக்கு நாள், நிமிடத்திற்கு நிமிடம், நொடிக்கு நொடி முன்னேறி வருகிறது.
அரசியல், சினிமா, ஆன்மீகம், கலைத்துறை, சமையல் கலை, கைவினை, வேலை வாய்ப்பு, கதை கவிதை வாசிப்பு என எண்ணிலடங்கா வகைகளில் நமக்கு வீடியோக்கள் மூலமாக செய்திகளை தருகிறது.
இதனை தவறாக பயன்படுத்தி கம்பி எண்ணுபவர்களும் உண்டு. ஒரே செய்தியை பலரும் பல கோணத்தில் அளிப்பது வியப்பை தரும்.
எதை எடுத்தாலும் யூடியூப் இருக்கிறது, அதில் பார்த்துக் கொள்ளலாம் என்ற வசதியும் தெம்பும் தருகிறது.
எத்தனையோ வகைகளில் பல்லாயிரக்கணக்கானோர் பயன் பெறுகின்றனர் என்பதை மறுக்க முடியாது.
சிலர் இதனை வேறுவிதமாக பயன்படுத்துவதும் மனதிற்கு சங்கடம் தருவதுண்டு. இருப்பினும் இது இன்றியமையாத ஒன்றாகிவிட்டது என்பது உண்மைதான்.
வருமானம் அதிகம் ஈட்டப்படும் ஒரு தகவல் தொடர்பு சார்ந்த தொழில் நுட்பம் இது. பலருக்கும் பலமடங்கு வாழ்க்கை தரத்தை உயர்த்துவதாக அறிய முடிகிறது.
இருப்பினும் சிலருக்கு இந்த அதிர்ஷ்டம் இருப்பதில்லை.
யூடியூப் 'ரீல்ஸ்' பன்மடங்கு அதிகரித்து வருகிறது எனலாம்.
ஒன்றுமில்லாவிட்டாலும் லைக்ஸ் மற்றும் வியூஸ் உச்சம் தொட்டிருக்கும். பொழுது போக்காக செய்து சம்பாதிக்க சிறந்த சாதனமாக உள்ளது என்றால் மிகையாகாது.

**-வி.பிரபாவதி**
மடிப்பாக்கம்.



## விடுகதை

| | |
|---|---|
| பொட்டுப்போல் இலை இருக்கும், பொரிபோல் பூப் பூக்கும், தின்னக்காய் காய்க்கும், தின்னாப் பழம் பழுக்கும் அது என்ன? | முருங்கைமரம் |
| என்னைப் பார்க்க முடியும், ஆனால் எனக்கு எடை கிடையாது. என்னை ஒரு பாத்திரத்தில் போட்டால் அதன் அளவை குறைத்திடுவேன். நான் யார்? | துவாரம் |
| தொட்டு விட்டால் மூடிக் கொள்ளும் பச்சை மாளிகை ஜன்னல்கள் அது என்ன? | தொட்டா சுருங்கிச் செடி |
| அந்திவரும் நேரம், அவளும் வரும் நேரும் அது என்ன? | நிலா |
| பூமியிலே பிறக்கும், புகையாய்ப் போகும். அது என்ன? | பெட்ரோல் |



# ஜோக்ஸ்

தத்துவம்
ஏழு பரம்பரைக்கு உட்கார்ந்து சாப்பிடுற அளவுக்கு சொத்து இருந்தாலும் பாஸ்ட் புட்க்கு போனா நின்று தான் சாப்பிடணும்.
---------------------------------------------------------------------

தோழிகள் இருவர் பேசிக் கொள்கிறார்கள்
ராதா: நேத்து உன் லவ்வரை பார்க்க க்ஷநநஉh-க்கு போறதா சொன்னியே! என்ன ஆச்சு?

கீதா: அட! அத ஏண்டி கேக்குறா? வாத்தியாரை லவ் பண்ணது தப்பா போச்சு!

ராதா: ஏன்! என்ன ஆச்சு?

கீதா: கொஞ்ச நேரம் லேட்டா போனேன். அதுக்காக படகு மேல ஏறி நிற்க சொல்லிட்டாருடி!

ராதா: ஹா! ஹா! ஹா!
---------------------------------------------------

முத்தம்
கணவன்: டார்லிங்! நான் இந்த மாச சம்பளத்துக்கு பதிலா 500 முத்தம் தரலாம்-னு நினைக்கிறேன். என்ன டிம தானே?

மனைவி: எனக்கொன்னும் பிரச்சினை இல்லை. நானும் அப்படியே கேபிள் காரனுக்கு 30 முத்தம், பால்காரனுக்கு 50 முத்தம், பேப்பர் காரனுக்கு 20 முத்தம், மளிகை கடைகாரனுக்கு 150 முத்தம். அவுஸ் ஓனருக்கு 250 முத்தம் கொடுத்துடுறேன் என்ன? ஓ.கே. தானே?

கணவன்: ???
---------------------------------------------------



தொலைக்காட்சி விளம்பரம்
வரும் சனிக்கிழமை இரவு பத்து மணிக்கு... உங்கள் அபிமான தொலைக்காட்சியில்... அற்புதமான ஹாலிவுட் திரைப்படம்... தமிழில்

சிலந்தி அண்ணாச்சி (Spiderman)

உங்களின் விடுமுறை நாளை குதூகலமாக கொண்டாட ஞாயிற்றுகிழமை மதியம் 2 மணிக்கு

சூப்பர்ஹிட் ஹாலிவுட் திரைப்படம்

"அம்மாச்சி திரும்ப வந்தாச்சு" (Mummy Returns)

முற்றிலும் தமிழில்... காணத்தவறாதீர்கள்!!!




# பொது அறிவுப் பூங்கா....



1)"வீரமாமுனி வர்" என்னும் கிறிஸ்துவப் பாதிரியார் 1680.11.8. ஆம் நாள் வெனிஸ் மாகாணத்தில் பிறந்தார்.

2). "சுப்ரதீபக் கவிராயர்" என்னும் தமிழ்ப் புலவர் வீரமா முனிவருக்குத் தமிழ் கற்பித்தார்.

3). இருண்ட கண்டம் என்று அழைக்கப்படும் ஆப்பிரிக்கா வில்தான், ஆதி மனிதன் தோன்றியிருக்கிறான்.

4). இரானின் தலை நகரம் டெக்ரான்.

5). "லத்தீன் அமெரிக்கா" என அழைக்கப் பட்ட நாடு தென் அமெரிக்கா.

6). மனிதன் வாசம் செய்யாத ஒரே கண்டம் அண்டார்டிக்கா

7). லண்டன் தேம்ஸ் நதிக் கரையில் அமைந்துள்ள நகரம் ஆக்ஸ்போர்டு.




8). கேரளம் ராமன் மகன், கே.ஆர் நாராயணன், என்று, அழைக்கப், பட்டார்.

9). "மொரார்ஜி தேசாய்"இந்தியாவின் மிக வயதான பிரதமர். வயது 81. ஆண்டு. 1977.

10).பெரியாழ்வார், 8 ஆம் நூற்றாண்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் தோன்றினார்.

**குடந்தை பரிபூரணன்.**

# ஓவியம்



**சே.கவின்**
மூன்றாம் வகுப்பு, எஸ்பிஐஓஎ பள்ளி
கே கே நகர் திருச்சி

# சிங்கத்தை வெற்றி கொண்ட கொசு

காட்டில் படுத்திருந்த சிங்கத்திடம் போய் ஒரு கொசு பேசத் தொடங்கியது.

"என்னைவிட நீ பலசாலி என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய் அல்லவா? அது மிகவும் தவறு.

"உன் வலிமை எப்படிப்பட்டது? பற்களை நறநற என்று கடித்து, நகங்களால் பிறாண்டுகிறாய், இது எப்படி இருக்கிறது என்றால், ஏழைப் பெண் தன் கணவனுடன் சண்டையிடுவதைப் போலத்தான் இருக்கிறது. சரி, வா, நாம் இருவரும் சண்டை போட்டுப் பார்ப்போம்" என்றது உடனே இது 'ங்ஙொய்' என்று ரீங்காரம் செய்து கொண்டு சிங்கத்தின் மீது பறந்து, அதன் நாசியிலும்,



தாடையிலும் கடிக்கத் தொடங்கியது.

சிங்கம் கொசுவை விரட்ட, தன் நகங்களால் முகத்தைப் பிறாண்டியும், தட்டியும் தோலைக் கிழித்துக் கொண்டதில், இரத்தம் வழிந்ததோடு, களைத்தும் போய் விட்டது.

வெற்றி முழக்கத்தோடு கொசு பறந்து சென்றது. சிறிது நேரத்தில் அந்த கொசு ஒரு சிலந்தி வலையில் சிக்கிக் கொண்டது. சிலந்தி கொசுவின் இரத்தத்தை உறிஞ்சியது.

“வலிமை மிகுந்த சிங்கத்தையே வெற்றி கொண்டு, இப்போது ஓர் சிறிய சிலந்தி என்னை வதைத்துக் கொண்டிருக்கிறதே” என்று கொசு வருந்தியது.


# மாற்றியோசி

முதலையும் குரங்கும்
ஓர் அழகிய கிராமத்தில் ஆறு ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. அந்த, ஆற்றங்கரையைச் சுற்றி பல நாவல் மரங்கள் இருந்தன. மரங்களில் குரங்குகள் பல தன் குட்டிகளுடன் வாழ்ந்து வந்தன. ஆற்றில் முதலைகள் வாழ்ந்து வந்தன .ஆற்றங்கரையைச் சுற்றி இருக்கும் நாவல் மரங்களில் பழங்கள் மிகவும் சுவையாக இருந்தன. இந்த ஆற்றங்கரையைச் சுற்றி இருந்த நாவல் மரங்களில் நாவல் பழங்கள் காய்த்து உதிர்ந்தன. இதை உண்டு முதலைகள் வாழ்ந்து வந்தன.

முதலைகளுக்குப் பசிக்கும் பொழுது குரங்குகளிடம் கேட்கும்.
குரங்கே!குரங்கே! கொஞ்சம் நாவல் பழங்களைப் பறித்து போட்டேன்.

குரங்குகளும் மரத்தில் ஏறி கிளைகளை உலுக்கும். முதலைகளுக்கும் தேவையான பழங்கள் கிடைக்கும் . அப்படியே, முதலைகளும் குரங்குகளும் நண்பர்களாக வாழ்ந்து வந்தனர்.

அந்த ஆற்றில் இருந்த இளைய முதலை ,வயதான முதலையிடம் கேட்டது, எத்தனை நாட்கள் தான் நாம் இப்படி நாவல் பழங்களை உண்டு வாழ்வது .
நாவல் பழங்களை உண்ணும்



குரங்குகளை உண்டால் என்ன ? என்று கேட்டது .
இதனைக் கேட்ட வயதான முதலை, நமக்கு உதவியவர்களையே உண்ண நினைப்பது எவ்வளவு பெரிய தவறு .
நமக்கு, உதவியவர்களுக்கு ஒரு போதும் நாம் தீங்கு நினைக்க கூடாது என்று அறிவுரை கூறியது.
இதனைக் கேட்ட இளைய முதலைக்கு கோபம் வந்து நீருக்குள் சென்று விட்டது.

ஒரு நாள் ,திடீரென்று குரங்கு குட்டி ஒன்று, மரத்திலிருந்து ஆற்றில் விழுந்தது. வேகமாக வேகமாக வந்த முதலை, தன் தலையால் அந்த குட்டியைக் காப்பாற்றி ஆற்றங்கரையில் இருந்த தாய் குரங்கிடம் விட்டது.

சிறிது நேரத்தில் பதறிப் போன தாய் குரங்கு, தன் குட்டியைக் கண்டதும் குட்டியை அணைத்துக் கொண்டு முதலைக்கு நன்றி கூறியது.
அப்போதுதான் இளைய முதலை தன் தவறை உணர்ந்தது . உதவுவதில் உள்ள மகிழ்ச்சியும் அறிந்து கொண்டது .

அறநெறி : 1.பெரியோரின் அறிவுரை நன்மை பயக்கும் .
2.நமக்கு உதவியவர்களுக்கு ஒருபோதும் துரோகம் நினைக்கக் கூடாது .

# யானை.!



ஓடிவந்து பாருங்கோ
யானை வருகுது!
ஒய்யாரமாய் வீதியிலே
யானை வருகுது.!
கூடிநின்று பாருங்கோ
யானை வருகுது!
ஆடிஅசைந்து குளித்துவிட்டு
யானை வருகுது.!

யானைமேலே முத்து அமர்ந்து
சுத்திப் பாக்குறான்!
யானைக்கொரு வாழைப்பழம்
பூமா கொடுக்கிறாள்.!
ஆசிவாங்க ரெண்டுரூபா
கிட்டு கொடுக்கிறான்!
ஆனையம்மா ஆனையென்று
பாட்டுப் படிக்குறான்!

பாரம் சுமக்க வித்தைக்காட்ட
யானையைப் பிடிச்சு
சங்கிலியால் காலில்கட்டி
பாடுபடுத்துவார்!
கோவில் வாசல் வீதியிலே பிச்சை
எடுக்க வைக்கிறார்
குட்டியானை தாய் யானை
பிரித்து வைக்கிறார்!

காட்டில் யானை வாழும் இடத்தில்
வீடுகட்டுவார்!
நாட்டுக்குள்ளே யானைவந்தா
வெடி வெடித்து ஓட்டுவார்!
யானையதனின் மனக்குறையை
யார்தான் அறிவார்?
யானைகளை வாழவிட்டால்
மனிதர் வாழுவார்!


# நான் ஒரு தேனீ

பாடத்தை நடத்த குரு நாதர் சீடர்களின் முன் நின்றார். கடவுளை அடைய குரங்கு நியாயம் பூனை நியாயம் என்னும் வழிகள் இருப்பது குறித்த உப நிஷதம் பற்றியதாக அன்றைய பாடம் இருந்தது. சீடர்களிடம் குரு நாதர் நீ குரங்கா? பூனையா? என கேட்டார்.

சரிதான் ரொம்ப படித்ததில் குருவுக்கு பித்து பிடித்துவிட்டது போல இருக்கு என மனதிற்குள் எண்ணிய சீடன் சிரிப்பை அடக்கியபடி குருவே நான் மனிதன் என்றான்.
அவனிடம் குரு நீ மனிதன் தான். இறைவன் மீது பக்தி செலுத்துவதில் குரங்கு நியாயம் பூனை நியாயம் என்று இருவிதம் இருக்கு தெரியுமா? குட்டிக்குரங்கு கைகளால் இறுக்கமாக தாயைக் கட்டிக் கொள்வது போல பக்தன் கடவுளை கெட்டியாகப் பிடித்துக்கொள்வது ஒரு வகை. தாய்ப்பூனை குட்டியை வாயால் கவ்விக்கொண்டு திரிவது போல



பக்தன் கடவுளை சரணடைவது இன்னொரு வகை. இதில் நீ எந்த வகை பக்தியை விரும்புகிறாய் என்பதையே அப்படி கேட்டேன் என்றார்.
சீடன் குருவிடம் நான் தேனி என்றான். மேலும் குருவே பூக்களால் காற்றில் வாசனை பரவுகிறது. அதை நாடி தேனீ சுதந்திரமாகப் பறக்கிறது. நான் தேனீயாக இருக்க கடவுளும் பூ போல் அருளை வாரி வழங்க காத்திருக்கிறார். நானும் தேனீயும் இன்பத்தேன் பருகுவது உறுதி என்றான். சீடனின் விளக்கம் கேட்ட குரு வியப்பில் ஆழ்ந்தார்.



மயிலைப் பாரு
மயிலைப் பாரு
மயக்கும் அழகில்
ஆடுது பாரு..

குயிலைப் பாரு
குயிலைப் பாரு
கொஞ்சும் குரலில்
பாடுது பாரு..

காக்கை பாரு
காக்கை பாரு
கரையும் குரலில்
பசியைப் பாரு..

மந்தி பாரு
மந்தி பாரு
பாயும் செயலில்
பயிற்சி பாரு..

அணிலைப் பாரு
அணிலைப் பாரு
அசையும் வாலில்
அழகைப் பாரு..

ஒவ்வொரு செயலும்
ஒவ்வொரு அழகு
உழைக்கும் செயலே
உண்மை அழகு..


**ஹரணி**
தஞ்சாவூர்

## ஆண்டாள் திருக்கோலம்



ஸ்ரீனிவாச பெருமாள் திருக்கோவில், தில்லைஸ்தானம் 5 ம் திருநாள் காலை ஆண்டாள் திருக்கோலம்.

## நாச்சியார் திருக்கோலம்



நேற்று காலை சென்னை திருவல்லிக்கேணி பாரத்தசாரதி பெமாள் கோயிலில் நாச்சியார் திருக்கோலம்

# பழநி அருகே கோயில் திருவிழாவில் பக்தர்களுக்கு 'கறி விருந்து'

**பழநி, மே 06:**

திண்டுக்கல் மாவட்டம் பழநி அருகே கோம்பைபட்டியில் பெரியதுரை மற்றும் கருப்பணசுவாமி கோயில் திருவிழாவில் பக்தர்கள் காணிக்கையாக வழங்கிய 300 ஆடுகளை சமைத்து இன்று (செவ்வாய்கிழமை) 10,000 பேருக்கு 'கறி விருந்து' நடைபெற்று வருகிறது.



பழநி அருகேயுள்ள கோம்பைபட்டியில் பெரியதுரை, கருப்பணசுவாமி, செல்வ விநாயகர், தன்னாசியப்பன், பொலக்கருப்பு கோயில் திருவிழா ஆண்டுதோறும் விமரிசையாக கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு திருவிழா நேற்று (மே 4) தொடங்கியது.

நேற்று மாலை 6 மணிக்கு தீர்த்தக் கலசம், குதிரை மற்றும் கருப்பணசுவாமி சிலை ஊர்வலமாக கோயிலுக்கு கொண்டு வரப்பட்டது. தொடர்ந்து, இரவு 7 மணிக்கு தீர்த்தம் செலுத்துதல் மற்றும் அன்னதானம் நடைபெற்றது. விழாவின் முக்கிய நிகழ்வாக இன்று (மே 5) கருப்பணசுவாமிக்கு கிடா வெட்டுதல் நிகழ்வு நடைபெற்றது.

இதையொட்டி, அதிகாலை 3 மணி முதல் பக்தர்கள் ஆடு, அரிசி, பால் உள்ளிட்டவற்றை காணிக்கையாக செலுத்தினர். மொத்தம் 300 ஆடுகள் பக்தர்களிடம் இருந்து காணிக்கையாகபெறப்பெற்றன. பின்னர் இவற்றைக் கொண்டு உணவு சமைக்கும் பணி கோயில் வளாகத்திலேயே நடைபெற்று வருகிறது.

சமையலுக்கு தேவையான பொருட்களை வழங்கியதோடு, சமையல் செய்யும் பணியில் பக்தர்கள் ஈடுபட்டு வருகின்றனர். காலை 11 மணிக்கு முதல் மெகா 'கறி விருந்து' தொடங்கி நடைபெற்று வருகிறது. இதையொட்டி, சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் இதில் பங்கேற்றனர். மொத்தம் 10,000 பக்தர்களுக்கு விருந்து தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்கான, ஏற்பாடுகளை கிராமத்தினர் செய்திருந்தனர்.

# திருவெறும்பூர் தொகுதியில் அமைச்சர் அன்பில் மகேஸை வீழ்த்தி பகை தீர்த்த தவெக நவல்பட்டு விஜி

**திருச்சி, மே.06:**

திருவெறும்பூர் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட்ட அமைச்சர் அன்பில் மகேஸை எதிர்த்து போட்டியிட்ட தவெக வேட்பாளர் நவல்பட்டு விஜி வெற்றி பெற்றார்.

திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் தொகுதியில் திமுக சார்பில் அமைச்சர் அன்பில் மகேஸ், அதிமுக சார்பில் தெற்கு மாவட்டச் செயலாளர் ப.குமார், தவெக சார்பில் நவல்பட்டு விஜி, நாதக சார்பில் டி.ராஜேஷ் உட்பட மொத்தம் 26 பேர் போட்டியிட்டனர்.



இந்நிலையில், வாக்கு எண்ணிக்கை நேற்று நடைபெற்றதில், முதல் 2 சுற்றுகள் தவெகவின் நவல்பட்டு விஜி முன்னிலையில் இருந்தார். அமைச்சர் மகேஸ் 3, 6-வது சுற்றுகளில் மட்டுமே முன்னிலை வகித்தார். மற்ற அனைத்து சுற்றுகளிலும் நவல்பட்டு விஜி முன்னிலை வகித்தார்.

மொத்தம் 24 சுற்று வாக்கு எண்ணிக்கையின்படி, தவெகவின் நவல்பட்டு விஜி 89,837 வாக்குகள் பெற்று தனக்கு அடுத்தபடியாக வந்த அமைச்சர் அன்பில் மகேஸை 8,705 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

அமைச்சர் அன்பில் மகேஸ் 81,132 வாக்குகளும், அதிமுக ப.குமார் 29,473 வாக்குகளும், நாதக டி.ராஜேஷ் 9,311 வாக்குகளும் பெற்றனர்.

2021-ல் அன்பில் மகேஸ் 1,05,424 வாக்குகள் பெற்று தன்னை எதிர்த்து போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் ப.குமாரை (55,727) விட 49,697 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.


அமைச்சர் கே.என். நேருவின் தீவிர விசுவாசியாக இருந்த நவல்பட்டு விஜி, திமுக மாநில பொதுக்குழு உறுப்பினர், ஒன்றியச் செயலாளர் பொறுப்புகளை வகித்தவர். 10 ஆண்டுகளுக்கு முன்பு திருவெறும்பூர் தொகுதிக்கு அன்பில் மகேஸின் வருகையால் இவருக்கு முக்கியத்துவம் குறையத்தொடங்கியது.

மேலும் அன்பில் மகேஸ் ஆதரவாளர்களால் விஜி ஓரங்கட்டப்பட்டார். இந்நிலையில் தவெகவில் கடந்த சில மாதங்களுக்கு முன் இணைந்து, திருவெறும்பூர் தொகுதியில் போட்டியிட்டு வென்று அன்பில் மகேஸை தோற்கடித்து தனது அரசியல் பகையை தீர்த்துக் கொண்டார்.

# விஜய் எங்கள் வீட்டுப்பிள்ளை- த.வெ.க.விற்கு ஆதரவளிப்பது குறித்து பிரேமலதா பதில்

**சென்னை, மே 06:**

விருத்தாசலம் தொகுதியில் வெற்றி பெற்ற தே.மு.தி.க. வேட்பாளர் பிரேமலதா வெற்றி சான்றிதழை பெற்றார். அதனை தொடர்ந்து அவரிடம் த.வெ.க.விற்கு ஆதரவு தருவீர்களா என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பிரேமலதா, நாங்கள் மதசார்பற்ற வெற்றி கூட்டணியில் உள்ளோம் என்றார்.



தொடர்ந்து செய்தியாளர்கள் சந்திப்பில் பிரேமலதா கூறியதாவது:-புதிதாக ஆட்சி அமைக்கப் போகிறவர்களுக்கு எங்க ளது மனப்பூர்வமான வாழ்த்துகள். முதல்முறையாக சட்டசபைக்கு எம்.எல்.ஏ.வாக செல்லவிருக்கிறேன், அங்கு விருத்தாசலம் மக்களுக்காக பேசுவேன்.

விஜய் எங்கள் வீட்டுப்பிள்ளை அவரது வெற்றிக்கு வாழ்த்துகள். விஜய் எங்களுக்கு புதியவர் கிடையாது, பக்கத்து வீட்டில் இருந்தவர், கேப்டனுடன் ஆரம்பம் முதலே பழகியவர். விஜய் நல்லபடியாக ஆட்சி அமைக்கட்டும், மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்றார்.

# "பாஜகவுக்கு பணிந்துவிடாமல் சமாதான தமிழகச் சூழலை விஜய் பேணிக்காக்க வேண்டும்" - ஜவாஹிருல்லா

**சென்னை, மே 06:**

"பாஜகவுக்கு அணுவளவும் பணிந்து விடாமல், உருட்டல் மிரட்டல்களுக்கெல்லாம் அஞ்சி விடாமல் மதச்சார்பற்ற சகோதரத்துவ சமாதான தமிழகச் சூழலை விஜய் பேணிக்காக்க வேண்டும்" என மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அதிக இடங்களை வென்றுள்ள தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்க்கு மனமார்ந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.



திராவிட மாடல் திமுக அரசு 2021 முதல் 2026 வரை மிகச் சிறப்பான நல்லாட்சியை மக்களுக்கு தந்தது என்பது மறக்க முடியாத உண்மை. திமுக அரசின் திட்டங்கள் ஒவ்வொரு குடும்பத்தையும் தனி மனிதரையும் பல வழிகளில் சென்றடைந்து பயன் நல்கியுள்ளன. உயர்கல்வியில் இந்தியாவின் முதல் இடத்தை தமிழ்நாடு அடைவதற்கும் தரமான பள்ளிக்கல்வியை ஏழை, எளிய மக்களின் பிள்ளைகள் பெறுவதற்கும் திமுக அரசு செயல்படுத்திய திட்டங்கள் காரணமாக இருந்தன.

தமிழ்நாட்டை இந்திய மாநிலங்களில் இரட்டை இலக்கப் பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றியது திமுக ஆட்சி. ஒன்றிய அரசின் ஆவணங்களே அதற்கு சாட்சி . தமிழ்நாட்டின் மாநில உரிமைகளை பறிப்பதற்கும்பொருளாதாரத்தை நசுக்குவதற்கும் இந்தியை நம் மீது திணிப்பதற்கும் மத வெறி பாசிசக் கூடாரமாக தமிழ்நாட்டை மாற்றுவதற்கும் ஒன்றிய பாஜக அரசு செய்த சூழ்ச்சிகளை ஸ்டாலின் எதிர்த்து நின்றார்.

ஒன்றிய பாஜக அரசின் ஓயாத இடையூறுகளை மீறியே தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையிலும் நாகரிக அரசியலிலும் அவர் வழி நடத்தி வந்தார் என்பது ஆணித்தனமான உண்மை. இப்போது தமிழ்நாட்டு மக்கள் தமிழக வெற்றிக் கழகத்திற்கு அதிக இடங்களில் வெற்றியை தந்துள்ளனர். பாசிச கோட்பாடு கொண்ட பாஜகவை விஜய் தனது கொள்கைஎதிரி என்று பிரகடனம் செய்துள்ளார். ஆயினும் தேர்தல் பரப்புரைகளிலோ மற்ற கூட்டங்களிலோ பாசிச பாஜகவின் மதவெறி போக்கு குறித்து மௌனம் சாதித்து வந்த விஜய் இனியாவது மனந்திறக்க வேண்டும்.

மக்கள் நலன் பேணுவதிலும் மாநில உரிமைகளை காப்பதிலும் மதவெறி பாசிச பாஜகவுக்கு அணுவளவும் பணிந்து விடாமல் உருட்டல் மிரட்டல்களுக்கெல்லாம் அஞ்சி விடாமல் மதச்சார்பற்ற சகோதரத்துவ சமாதான தமிழகச் சூழலை பேணிக்காக்க விஜய் முன்னிருக்க வேண்டுமென இந்நேரத்தில் வலியுறுத்துகிறேன். தமிழக வெற்றிக் கழகம் தமிழக நலம் காக்கும் வகையில் பாசிச பாஜகவை முறியடிக்கும் வகையில் தொடர்ந்து செயல்பட வாழ்த்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

# 'விஜய்யை குறைத்து மதிப்பிட வேண்டாம் என முன்பே கூறியிருந்தேன்' – கிரிஷ் சோடங்கர்

**சென்னை, மே 06:**

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலுக்கு முன்னதாகவே விஜய் மற்றும் தவெகவை குறைத்து மதிப்பிட வேண்டாம் என, காங்கிரஸ் கட்சியிடம் கூறியதாக அக்கட்சியின் தமிழ்நாடு தேர்தல் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் தெரிவித்துள்ளார்.



மேலும் மாற்றத்தை விரும்பியதால் தமிழ்நாடு மக்கள் விஜய்யைதேர்ந்தெடுத்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். பெண்கள் மற்றும் இளைஞர்களின் அதிகபட்ச ஆதரவே தவெக வேட்பாளர்களின் வெற்றிக்கு முக்கிய காரணம் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் தமிழ்நாடு மக்களின் ஒருமித்த கருத்தை, தாங்கள் மதிப்பதாகவும், கூட்டணி தொடர்பாக தவெக தரப்பில் இருந்து தனக்கு எந்தவொரு அழைப்பும் வரவில்லை என தெளிவுப்படுத்தியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியில் உள்ள வேறு யாரையாவது, த.வெ.க கட்சியினர் தொடர்பு கொண்டார்களா என்பதும் தனக்கு தெரியாது என்றும் கிரிஷ் சோடங்கர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் 234 தொகுதிகளுக்கான தேர்தல் கடந்த மாதம் 23ஆம் தேதி நடைபெற்ற நிலையில், நேற்று வாக்குகள் எண்ணப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில் யாரும் எதிர்பாராத வகையில் நடிகர் விஜய்யின் தவெக 108 தொகுதிகளை கைப்பற்றி அபார வெற்றியைப் பெற்றது.

திமுக 53 தொகுதிகளை கைப்பற்றி எதிர்க்கட்சியாக பொறுப்பேற்க உள்ளது.

இதனிடையே பெரும்பான்மை பெற காங்கிரஸுடன் தவெக பேச்சுவார்த்தை நடத்துவதாக தகவல் வெளியாகி வரும்நிலையில், கிரிஷ் சோடங்கரின் இந்த விளக்கம் வந்துள்ளது.

# அமைச்சர்களின் அறைகள் காலி செய்யப்படுகிறது: கருணாநிதி- மு.க.ஸ்டாலின்- உதயநிதி புகைப்படங்கள் அகற்றம்




**சென்னை, மே 06:**

சட்டசபைத் தேர்தலில் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் அமோகமாக வெற்றி பெற்றுள்ளார். அவரது கட்சி 108 இடங்களை கைப்பற்றி உள்ளது. இதைத் தொடர்ந்து விரைவில் விஜய் தலைமையில் புதிய அரசு அமைய உள்ளது. இதைத் தொடர்ந்து சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள அமைச்சர்களின் அறைகள் அனைத்தும் காலி செய்யப்படுகின்றன.

தி.மு.க. அமைச்சர்கள் அனைவரும் தங்களது அறைகளை வேகமாக காலி செய்து வருகின்றனர். அங்கிருக்கும் கருணாநிதி, மு.க.ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின் ஆகியோரது புகைப்படங்களையும் எடுத்து வருகின்றனர்.

இதேபோல் அடையாறில் உள்ள அமைச்சர்களின் இல்லங்களையும் காலி செய்யும் பணி துவங்கி உள்ளது. அமைச்சர்கள் தங்களது பொருட்கள், உடமைகளை எடுத்துச் செல்லும் ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

புதிதாக பொறுப்பேற்கும் விஜய் தலைமையிலான அரசில் அங்கம் வகிக்க உள்ள அமைச்சர்கள் விரைவில் தலைமைச் செயலகத்தில் உள்ள அமைச்சர்களின் அறைகளை பயன்படுத்த உள்ளனர்.

# அதிமுக எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் இன்று நடைபெறும் என அறிவிப்பு

**சென்னை, மே 06:**

நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டசபை தேர்தலில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால் தொங்கு சட்டசபை ஏற்படும் நிலை உருவாகி உள்ளது. 108 இடங்களில் வெற்றி பெற்றுள்ள த.வெ.க. கூட்டணி ஆட்சியை அமைக்கும் சூழல் உருவாகி உள்ளதால் அடுத்த கட்ட நடவடிக்கையில் தீவிரமாக இறங்கி உள்ளது.



இந்த நிலையில், தேர்தலில் வெற்றி பெற்ற அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் சென்னை வருமாறு பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அழைப்பு விடுத்துள்ளார்.

அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நாளை காலை அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் தேர்தல் முடிவுகள் குறித்து ஆலோசிக்கவும் மற்றும் குதிரை பேரத்தை தடுக்கும் வகையில் எம்.எல்.ஏ.க்களை ஓரிடத்தில் திரட்ட திட்டம் என கூறப்படுகிறது.

அ.தி.மு.க. தனித்து 47 இடங்களில் வெற்றி பெற்று 3-ம் இடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# த.வெ.க.விற்கு எதிராக நாங்கள் பிரசாரம் மேற்கொள்ளவில்லை- திருமாவளவன்

**சென்னை, மே 06:**

தமிழ்நாடு சட்டசபை தேர்தல் முடிவுகள் வெளியான நிலையில் அண்ணா அறிவாலயத்திற்கு தி.மு.க. கூட்டணி கட்சி தலைவர்கள் வருகை தருகின்றனர்.




அந்த வகையில், திருமாவளவன், வீரபாண்டியன், சண்முகம், சுதீஷ், வைகோ உள்ளிட்ட தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினை சந்தித்து பேசினர். ஆனால் காங்கிரஸ் தலைவர்கள் யாரும் மு.க.ஸ்டாலினை சந்திக்கவில்லை.

இதன்பின் தி.மு.க. கூட்டணி கட்சி தலைவர்கள் கூட்டாக செய்தியாளர்கள் சந்தித்தனர். அப்போது, த.வெ.க. முதலில் தனது நிலைப்பாட்டை வெளிப்படையாக சொல்லட்டும். தமிழ்நாடு சட்டசபை தேர்தலில் பா.ஜ.க.வை தமிழ்நாட்டு மக்கள் முற்றிலும் நிராகரித்து விட்டனர். தேர்தலில் பா.ஜ.க.- அ.தி.மு.க. கூட்டணியை தோற்கடிக்க வேண்டும் என்ற எங்களது நோக்கம் நிறைவேறியுள்ளதாக சிபிஎம் மாநில செயலாளர் சண்முகம் கூறினார்.

தமிழ்நாட்டில் அதிமுக- பாஜக வீழ்த்துவது எங்கள் இலக்கு. அதில் நாங்கள் வெற்றி பெற்றுள்ளோம். த.வெ.க.விற்கு எதிராக நாங்கள் பிரசாரம் மேற்கொள்ளவில்லை, எங்கள் இலக்கு அதிமுக- பாஜகவை வீழ்த்துவது தான் என்றார்.

# கிங் மேக்கருக்கு கிங் மேக்கர் யார்?

**சென்னை, மே 06:**

2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில், திரு விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் பெருவாரியான வாக்குகள் பெற்று 108 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. இருந்தபோதிலும்பெரும்பான்மை கிடைக்காத நிலை உள்ளது.

இதனைத்தொடர்ந்து கூட்டணி ஆட்சி அமையுமா என்பது மக்கள் மத்தியில் பெரும் கேள்விக்குறியாகியுள்ளது. இதுகுறித்து இடதுசாரி கூட்டணி கட்சிகளான இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் மற்றும் விசிக கட்சியினர் தாங்கள் மதசார்பற்ற முற்போக்கு சிந்தனை உடையவர்கள் என்றும் இனிவரும் காலங்களில் மூவரும் சேர்ந்தே செயல்படுவோம் என்றும் கூறியுள்ளனர்.

மேலும் தவெக பெரும் கட்சியாக உருவெடுத்துள்ள நிலையில் அக்கட்சியினர் வாய்திறக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இவர்களுடன் தேமுதிக தலைவர் பிரேமலதாவும் திமுக கூட்டணியிலேயே தொடர்வோம் என்று கூறியுள்ளார்.

மேலும் மதசார்பற்ற தவெக-வுக்கு ஆதரவு தெரிவிக்க காங்கிரஸ் கட்சியினர் முன்வந்துள்ளதாக கிரிஷ் சோடங்கர் கூறியுள்ளார். அதன் முடிவுகளை ராகுல் காந்தி எடுப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விரைவில் காங்கிரஸ் தலைமைக்கு கருத்து கேட்பு அனுப்பி வைக்கப்படும் என்றும் சோடங்கர் கூறியுள்ளார். இதனிடையே காங்கிரஸை தமிழகத்தில் நுழைய விடக்கூடாது என்று டெல்லியில் பாஜகவும் அவரச முடிவுகளை எடுக்க தயாராகி உள்ளது.

அதிமுக தலைவர் எடப்பாடி அவர்களும் சென்னையில் வெற்றி பெற்ற எம்எல்ஏக்களை வரவழைத்து ஆலோசனை நடத்துவது தெரியவந்துள்ளது.


இதற்கிடையே கூட்டணி அமைக்க தாமதமாகும் என்று தவெக எம்எல்ஏக்களை சென்னையிலேயே தங்ககவைக்க விஜய் திட்டமிட்டுள்ளார். பனையூரில் உள்ள தவெக அலுவலகத்தில் எம்எல்ஏக்களை சந்தித்து ஆலோசனை நடத்திய அவர், மாமல்லபுரத்தில் உள்ள நட்சத்திர ஓட்டலில் வெற்றி பெற்றோரை தங்கவைக்க முடிவெடுத்துள்ளார்.

மேலும் தமிழக ஆளுநர் அர்லேகருக்கு கடிதம் எழுதியுள்ள விஜய், விரைவில் பதவியேற்க தயாராகியும் வருகிறார்.

இந்நிலையில் தவெக யாரை கூட்டணியாக தேர்வு செய்ய போகிறது என்பது இன்னும் கேள்விக்குறியாகவே உள்ளது.



# சுற்றுலா: கொடைக்கானலை விட குளிர்ச்சி... இதுதான் கோத்தகிரி!



கோத்தகிரி, நீலகிரி மலையின் அமைதியான மற்றும் அழகான சூழலுக்கு பெயர் பெற்ற இடமாகும். தென்னிந்தியாவில் ஊட்டி மற்றும் கொடைக்கானலுக்கு அடுத்தபடியாக மூன்றாவது குளிரான காலநிலையைக் கொண்டுள்ள இடம் இது. 'கோட்டா' பழங்குடியின மக்களின் பெயரால் அழைக்கப்படும் இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 1,793-1,950 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள பெரிய ஹில் ஸ்டேஷன் ஆகும். (KOTAGIRI TOURIST PLACES) கோத்தகிரி தேயிலை தோட்டங்கள், மலையேற்றம் (TREKKING) மற்றும் பாறை ஏறுதலுக்கு(ROCK CLIMBING) பெயர் பெற்றது. இங்கு கோடநாடு காட்சிமுனை, கேத்தரின் நீர்வீழ்ச்சி, லாங்வுட் சோலை காடுகள் ஆகியவை முக்கியமான சுற்றுலா இடங்கள் ஆகும்.

1. உயிலட்டி நீர்வீழ்ச்சி

கோத்தகிரியில் இருந்து கூக்கல்துறை செல்லும் சாலையில் கூக்கல் கிராமத்திற்கு அருகில் பசுமையான தாவரங்களுக்கு மத்தியில் அமைந்துள்ளது இந்த உயிலட்டி நீர்வீழ்ச்சி. கோத்தகிரியில் இருந்து சுமார் 9 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள இந்த அழகான ஆர்ப்பரிக்கும் நீர்வீழ்ச்சி இயற்கையை ரசித்து புகைப்படங்கள் எடுப்பதற்கு சிறந்த இடமாகும். இது வனப்பகுதியை ஒட்டி இருப்பதால் வனத்துறை கட்டுப்பாடுகளை பின்பற்ற வேண்டும். மலைக்காற்றின் இதமான தட்பவெப்பநிலை மற்றும் பாறைகளுக்கு இடையே விழும் நீர் என கண்களுக்கு விருந்தளிக்கும் இடம் இது. கூட்ட நெரிசல் குறைவு என்பதால் நிம்மதியாக பொழுதைக் கழிக்கலாம்.

2. குயின் நீர்வீழ்ச்சி

இது புதுமந்து கிராமத்தில் உள்ள தேயிலை தோட்டத்திற்குள் அமைந்துள்ள அருமையான அருவி. ஒரு நாள் பிக்னிக் செல்வதற்கு ஏற்ற இடமாகும். இந்த மயக்கும் நீர்வீழ்ச்சியில் பாறைகளின் பிளவுகள் வழியாக நீர் கீழே விழுவதை அழகாகக் காணலாம். இது கோத்தகிரியில் இருந்து சுமார் 7 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. நாம் செல்லும் வாகனங்களை நிறுத்திவிட்டு சுமார் 1-2 கிலோ மீட்டர் தூரம் பசுமையான தேயிலை தோட்டங்கள் வழியாக நடந்து செல்லவேண்டும்.

3. சிம்ஸ் பூங்கா

கோத்தகிரிக்கு அருகில் குன்னூரில் அமைந்துள்ள சிம்ஸ் பூங்கா 1874ல் நிறுவப்பட்ட 12 ஹெக்டேர் பரப்பளவுள்ள புகழ்பெற்ற தாவரவியல் பூங்காவாகும். இது இயற்கையான பள்ளத்தாக்கில், அரிய வகை மரங்கள், வண்ணமயமான மலர் படுக்கைகள், கண்ணாடி மாளிகை, படகு சவாரி மற்றும் மே மாதங்களில் நடைபெறும் பழக் கண்காட்சி ஆகியவற்றைக் கொண்ட மிக அழகான அதே சமயம் அமைதியான சுற்றுலாத்தலமாகும்.

இங்கு 100 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான மரங்கள் மற்றும் வெளிநாட்டுத் தாவரங்கள் உள்ளன. இங்கு ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் நடைபெறும் காய்கறி மற்றும் பழக் கண்காட்சி மிகவும் பிரபலமானது.

4. லாம்ப்ஸ் ராக்

கோத்தகிரி மற்றும் குன்னூர் அருகில் உள்ள லாம்ப்ஸ் ராக் பள்ளத்தாக்குகள், தேயிலைத் தோட்டங்கள் மற்றும் மேட்டுப்பாளையம் சமவெளிப் பகுதிகளை காட்டும் ஒரு அற்புதமான இயற்கை காட்சிமுனை (VIEWPOINT) ஆகும். வானம் தெளிவாக இருந்தால் கேத்தரின் நீர்வீழ்ச்சியையும் இங்கிருந்து காண முடியும். இது குன்னூரில் இருந்து 8 கிலோமீட்டர் தொலைவில், டால்ஃபின் நோஸ் செல்லும் வழியில் பர்லியார் கிராமத்தில் அமைந்துள்ளது. காலை நேர மூடுபனியைத் தவிர்த்து மதியத்திற்குப் பிறகு செல்வது சிறந்தது.

5. கேத்தரின் நீர்வீழ்ச்சி

இது கோத்தகிரியின் ஒரு முக்கியமான அடையாளமாகும். சுமார் 250 அடி உயரத்திலிருந்து இரண்டு அடுக்குகளாக விழும் இந்த அழகான நீர்வீழ்ச்சி, பசுமையான காடுகள் மற்றும் தேயிலை தோட்டங்களுக்கு நடுவே அமைந்துள்ளது. கேத்தரின் நீர்வீழ்ச்சி கோத்தகிரியில் காபி தோட்டங்களை அறிமுகப்படுத்திய மைசூர் மாவட்ட ஆட்சியர் ஜி. டி. காக்பர்னின் மனைவி கேத்தரின் நினைவாக இந்த பெயரிடப்பட்டது. டால்பின் நோஸ் பகுதியில் இருந்து இந்த அருவியின் முழு அழகையும் தெளிவாகக் காணலாம்.

6. கோடநாடு காட்சி முனை

கடல் மட்டத்திலிருந்து சுமார் 6000 அடி உயரத்தில் அமைந்துள்ள இந்த இடம் கோத்தகிரியில் இருந்து 15 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இந்த இடத்திலிருந்து ரங்கசாமி சிகரம், மாயார் ஆறு, பவானிசாகர் அணை, தேயிலை தோட்டங்கள் மற்றும் சுற்றியுள்ள மலைகளின் அற்புதமான காட்சிகளை வழங்குகிறது.

## வேலைவாய்ப்பு கார்னர்

### வங்கியில் வேலை வேண்டுமா? அழைக்கிறது கரூர் வைஸ்யா வங்கி!




தனியார் துறையைச் சார்ந்த பிரபல வங்கியான கரூர் வைஸ்யா வங்கியில் காலியாக உள்ள 1,284 சிறப்பு அலுவலர்கள் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு தகுதியும் ஆர்வமும் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மொத்த காலியிடங்கள்: 1,284

தகுதி : ஏதாவதொரு இளநிலைப் பட்டப்படிப்பை முடித்து வங்கி, விற்பனை, சந்தையியல், டிஜிட்டல் மார்க்கெட்டிங் போன்ற வங்கிகள் சார்ந்த துறையில் குறைந்தபட்சம் ஒரு ஆண்டு பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். நிதியியல், சந்தையியல் பிரிவில் எம்பிஏ, சிஏ, ஐசிடபுள்யுஏ முடித்திருந்தால் விரும்பத்தக்கது.

சம்பளம்: பணிக்கு தேர்வு செய்யப்படுபவர்களுக்கு வங்கி விதிமுறைப்படி வழங்கப்படும்.

வயது வரம்பு : 21 முதல் 32-க்குள் இருக்க வேண்டும்.

தேர்வு செய்யப்படும் முறை: ஆன்லைன் எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு, பணி அனுபவம் அடிப்படையில் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர். தேர்வு தொடர்பான அனைத்து விபரங்களும் மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கப்படும்.

விண்ணப்பிக்கும் முறை: www.kvb.bank.in இணையதளம் மூலமாக ஆன்லைன் மூலம் விண்ணப்ப வேண்டும்.

விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி குறிப்பிடப்படவில்லை.

## மதுரை மாநகர் 4 தொகுதிகளில் தவெக வெற்றி பெற்றது

**மதுரை, மே 6:**

2026ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்ட மன்றத் தேர்தலில், மதுரை மாவட்டத்தின் 10 தொகுதிகளிலும் திமுக தலைமை யிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட் டணி, அதிமுக பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி, தமிழக வெற் றிக் கழகம், நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட கட்சிகள் இடையே கடும் போட்டி நிலவி யது. மதுரை மாநகர் பகுதிக்கு உட்பட்ட வடக்கு, மத்தி, மேற்கு, தெற்கு ஆகிய 4 தொகுதிகளில் வாக்கு எண்ணிக்கை திங்கள்கிழமை காலை தொடங்கியது. வடக்கு மற்றும் தெற்கு தொகுதிகளுக்கான வாக்குகள் தியாகராஜர் பொறியியல் கல் லூரி வளாகத்திலும், மத்தி மற்றும் மேற்கு தொகுதிகளுக்கான வாக்குகள் மதுரா கல்லூரி வளாகத்திலும் எண்ணப்பட்டன. காலை 8 மணிக்கு தபால் வாக்குகள் எண்ணப்பட்டு, 8.30 மணிக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திர வாக்குகள் எண் ணிக்கை தொடங்கியது. ஆரம்ப சுற்றுகளில் திமுக முன்னிலை வகித்தாலும், தொடர்ந்து நடந்த சுற்றுகளில் தவெக முன்னிலை பிடித்து இறுதியில் நான்கு தொகுதிகளி லும் வெற்றி பெற்றது. தொகுதி வாரியான முடிவுகள்: மதுரை வடக்கு (191) திமுக:கோ.தளபதி 54,088 அதிமுக:ப.சரவணன் 24,557 தவெக: அ.கல்லணை 72,121 (வெற்றி) வித்தியாசம்: 31,967 மதுரை மத்தி (193) திமுக: பழனிவேல் தியாகராஜன் 44,256 அதிமுக கூட்டணி: சுந்தர் சி 33,538 தவெக: மதர் பதுருதீன் முஸ்தபா 63,414 (வெற்றி) வித்தியாசம்: 19,158 மதுரை மேற்கு (194) திமுக: ஆர்.பாலாஜி 74,784 அதிமுக: செல்லூர் ராஜூ 38,273 தவெக: எஸ்.ஆர்.தங்கப்பாண்டி 86,075 (வெற்றி) நாதக: விக்னேஷ்குமார் 10,385 வித்தியாசம்: 11,291 மதுரை தெற்கு (192) மதிமுக: மு.பூமிநாதன் 40,600 பாஜக: இராம.ஸ்ரீனிவாசன் 30,900 தவெக: கோபிசன் 62,162 (வெற்றி) வித்தியாசம்: 21,562 மதுரை மாநகர் பகுதிகளில் ஆரம்ப கட்டத்தில் திமுக முன்னிலை வகித்தா லும், பின்னர் வாக்கு எண்ணிக்கை முன்னே றியபோது தமிழக வெற்றிக் கழகம் வேட்பா ளர்கள் நான்கு தொகுதிகளிலும் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

## நீட் நுழைவுத் தேர்வு புதுக்கோட்டை மாவட்டத்தில் 3,067 பேர் எழுதினர்

**புதுக்கோட்டை, மே 6:**

புதுக்கோட்டை ராணியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி தேர்வு மையத்தைப் பார்வையிட்ட மாவட்ட ஆட்சியர் மு.அருணா தெரிவிக்கையில், "புதுக்கோட்டை பிரகதாம்பாள் அரசு மேல்நிலைப்பள்ளி, இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, மச்சுவாடி அரசு முன்மாதிரி மேல்நிலைப்பள்ளி, அறந்தாங்கி அரசு பாலிடெக்னிக் கல்லூரி, அறந்தாங்கி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, கந்தர்வக்கோட்டை அரசு பாலிடெக்னிக் கல்லூரி, இலுப்பூர் அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய 7 தேர்வு மையங்களில் இளநிலை மருத்துவப் படிப்பிற்கான நுழைவுத் தேர்வு (நீட்) நடைபெற்றது. இளநிலை மருத்துவப் படிப்பிற்கான நுழைவுத் தேர்வினை எழுதுவதற்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் 3,166 மாணவ, மாணவியர் விண்ணப்பித்திருந்தனர். இதில் 3,067 பேர் தேர்வு எழுதினர். 99 பேர் தேர்வு எழுதவில்லை. கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, தேர்வு பாதுகாப்பான முறையில் நடைபெற்றது" என்றார்.

## திருச்சி விமான நிலையத்தில் அதிரடி: ஒரே விமானத்தில் வந்த 25 பயணிகளிடம் 6 கிலோ தங்கம் பறிமுதல்

**திருச்சி, மே 6:**

திருச்சி சர்வதேச விமான நிலையத்தில், ஒரே நாளில் 25 பயணிகளிடம் இருந்து சுமார் 6 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று அதிகாலை 4.30 மணி அளவில் சிங்கப்பூரில் இருந்து திருச்சிக்கு இண்டிகோ விமானம் வந்தது. இந்த விமானத்தில் வந்த பயணிகளை மத்திய வான் நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள் மற்றும் சுங்கத்துறை அதிகாரிகள் தீவிர சோதனைக்கு உட்படுத்தினர்.

சோதனையின் போது, 25 பயணிகளின் நடவடிக்கைகளில் அதிகாரிகளுக்குப் பலத்த சந்தேகம் ஏற்பட்டது. அவர்களைத் தனி அறைக்கு அழைத்துச் சென்று சோதனை செய்தபோது, அவர்கள் தங்கம் கடத்தி வந்தது உறுதி செய்யப்பட்டது.

பயணிகள் தங்கத்தை ஆபரணங்களாகவும் மற்றும் நவீன முறையில் 'பேஸ்ட்' வடிவில் உடலில் மறைத்தும் கடத்தி வந்துள்ளனர்.

பிடிபட்ட 25 பயணிகளிடம் இருந்து மொத்தம் 6 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதன் மதிப்பு பல கோடி ரூபாய் இருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

தங்கம் கடத்தி வந்த 25 பேரையும் வான் நுண்ணறிவுப் பிரிவினர் சுங்கத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

அவர்கள் அனைவரும் ஒரே கடத்தல் கும்பலைச் சேர்ந்தவர்களா அல்லது குருவிகளாகச் செயல்பட்டார்களா? என்பது குறித்து அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஒரே விமானத்தில் வந்த 25 பயணிகள் தங்கம் கடத்தலில் ஈடுபட்டு பிடிபட்ட சம்பவம், விமான நிலைய பாதுகாப்பு வட்டாரத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## எலுமிச்சையின் விலை கடும் உயர்வு

**மதுரை, மே 6:**

மதுரை மாட்டுத்தாவணி காய்கறி மார்க்கெட்டில், கடுமையான வெயில் மற்றும் வரத்து குறைவு காரணமாக எலுமிச்சையின் விலை கடந்த இரண்டு வாரமாக குறையாமல் உச்சத்திலேயே நீடிக்கிறது.

கடந்த இரண்டு மாதங்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால், குளிர்பான ங்களுக்காக எலுமிச்சையின் தேவை அதிகரித்துள்ளது. அதே சமயம், வெப்பம் காரணமாக மகசூல் பாதிக்க ப்பட்டு மார்க்கெட்டிற்கு வரும் எலுமிச்சையின் அளவு பாதியாகக் குறைந்துள்ளது.

மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்தும், வெளி மாவட்டங்களில் இருந்தும் வரும் காய்கறிகளின் வரத்து வெயிலின் காரணமாகக் குறைந்து ள்ளதால், பெரும் பாலான காய்கறிகளின் விலை ஏறுமுகமாகவே உள்ளது. இதனால் இல்லத்த ரசிகளும், சிறு வியாபாரிகளும் கவலையடை ந்துள்ளனர். தேங்காய் ஒன்று ரூ. 45 முதல் ரூ. 50 வரை விற்பனை செய்யப் படுகிறது. மாங்காய் வரத்து அதிகமாக உள்ளதால் கிலோ ரூ. 10 முதல் ரூ. 20 என்ற குறைவான விலையிலேயே கிடைக்கிறது.

மதுரை மாட்டுத்தாவணி மார்க்கெட்டில் நிலவும்



காய்கறிகளின் விலை நிலவரம் குறித்த விரிவான தொகுப்பு பின்வருமாறு:

மதுரை மார்க்கெட்டில் கடந்த இரண்டு வாரங்களாக எலுமிச்சை விலை குறையாமல் கிலோ 280 ரூபாய்க்கு விற்பனை யாகிறது. வெயிலின் தாக்கத்தால் வரத்து குறைந்துள்ள நிலையில், பச்சை பட்டாணி விலையும் உயர்ந்து கிலோ 200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. தக்காளி ஒரு பெட்டி (15 கிலோ) 400 முதல் 500 ரூபாய் வரையிலும், சில்லறை விலையில் கிலோ 40 முதல் 50 ரூபாய் வரையிலும் விற்கப்படுகிறது. அடிப்படைத் தேவையான சின்ன வெங்காயம் தரத்தைப் பொறுத்து 30 முதல் 60 ரூபாய் வரையிலும், பெரிய வெங்காயம் 20 முதல் 30 ரூபாய் வரையிலும் விற்பனையாகிறது. கிழங்கு வகைகளில் உருளைக்கிழங்கு 25 முதல் 40 ரூபாய் வரையிலும், கேரட் 30 முதல் 50 ரூபாய் வரையிலும், பீட்ரூட் 40 முதல் 60 ரூபாய் வரையிலும், கருணைக் கிழங்கு 50 முதல் 60 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. இஞ்சி பழையது கிலோ 140 ரூபாய்க்கும், புதியது 50 முதல் 80 ரூபாய் வரையிலும் கிடைக்கிறது.

காய்கறி வகைகளில் கத்தரிக்காய் 30 முதல் 50 ரூபாய் வரையிலும், வெண்டைக்காய் 20 முதல் 30 ரூபாய் வரையிலும், முட்டைக்கோஸ் 25 முதல் 30 ரூபாய் வரையிலும் விற்பனை யாகிறது. அவரை க்காயைப் பொறுத்தவரை நைஸ் அவரை 60 ரூபாய்க்கும், பட்டை அவரை 70 முதல் 80 ரூபாய் வரையிலும் விற்கப் படுகிறது. முருங்கைக்காய் 50 முதல் 60 ரூபாய் வரையிலும், முருங்கை பீன்ஸ் 70 முதல் 100 ரூபாய் வரையிலும் விலை போகிறது.

காரசாரமான காய்கறிகளில் குடை மிளகாய் 50 முதல் 80 ரூபாய் வரையிலும், சம்பா மிளகாய் 50 முதல் 60 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. கசப்புச் சுவை கொண்ட சின்ன பாகற்காய் 120 முதல் 140 ரூபாய் வரையிலும், பெரிய பாகற்காய் 60 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. சீசன் காரணமாக மாங்காய் (கல்லாமை மற்றும் நாட்டு வகை) 10 முதல் 20 ரூபாய் என்ற குறைந்த விலையில் கிடைக்கிறது. தேங்காய் ஒன்று 45 முதல் 50 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி முப்பெரும் விழா

**அரியலூர், மே 6:**

அரியலூரில், தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில், பணி நிறைவு பெறும் ஆசிரியர்களுக்கு பாராட்டு, மாநில அளவில் விருது பெற்ற ஆசிரியர்களுக்கு பாராட்டு, சிறந்த பள்ளி பாட்டுச் சான்றிதழ் பெற்ற இயக்க ஆசிரியர்களுக்கு பாராட்டு என முப்பெரும் விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு, தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் அரியலூர் வட்டாரத் தலைவர் அருள்ஜோதி தலைமை வகித்தார். முன்னாள் வட்டாரச் செயலர் ராமராஜு முன்னிலை வகித்தார். அகில இந்திய ஆசிரியர் கூட்டணியின் இணைப் பொதுச் செயலாளரும், உலகத் தமிழாசிரியர் பேரவையின் பொதுச் செயலாளருமான ரெங்கராஜன், பணி ஒய்வு பெறும் ஆசிரியர்களுக்கும், மாநில, மாவட்ட அளவில் பாராட்டுச் சான்றிதழ் பெற்ற ஆசிரியர்களுக்கும் பொன்னாடை அணிவித்து, நினைவு பரிசு மற்றும் பதக்கங்களை வழங்கி கௌரவித்தார்.

முன்னதாக அரியலூர் மாவட்டத்தலைவர் சண்முகம் வரவேற்றார். வட்டாரப் பொருளாளர் சேகர் நன்றி கூறினார்.

## திருவாரூர் தியாகராஜ சுவாமி கோவில் தெப்பத்திருவிழா மே 8 தொடக்கம்


**திருவாரூர், மே 6:**

திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் தெப்பத்திரு விழா-2026 முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் வ. மோகனச்சந்திரன் தலைமையில் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது.

உலகப்புகழ் பெற்ற கமலாலயத் திருக்குளத்தில் தெப்பத்திருவிழா வரும் மே 8, 9 மற்றும் 10 (08.05.2026 - 10.05.2026) ஆகிய மூன்று தினங்களில் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

விழாவினைச் சிறப்பாக நடத்த ஆட்சியர் ஆலோசனைகளை வழங்கினார். விழா நாட்களில் போதுமான பாதுகாப்பு வழங்க வேண்டும். போக்குவரத்தைச் சீரமைப்பதோடு, தெப்பம் புறப்படுவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பாக மட்டுமே பக்தர்களை ஏற்ற அனுமதிக்க வேண்டும். சுவாமி ஏறுவதற்கு முன்பாக பக்தர்கள் யாரையும் அனுமதிக்கக் கூடாது.

பக்தர்களின் வசதிக்காகக் கூடுதல் குடிநீர் வழங்க வேண்டும். திருக்குளம் மற்றும் கோவில் பகுதிகளில் சுகாதாரப்



பணிகளைத் தீவிரப்படுத்த வேண்டும். கமலாலயக் குளத்தில் நீச்சல் வீரர்களுடன் கூடிய மோட்டார் படகுகள் மற்றும் மிதி படகுகளைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். மூன்று நாட்களும் தடையற்ற மின்சாரம் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பொதுமக்கள் வந்து செல்ல ஏதுவாகச் சிறப்புப் பேருந்து வசதிகளைச் செய்து தர வேண்டும். கோவில் வளாகத்தில் தற்காலிக மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட வேண்டும். அன்னதானம் மற்றும் பிரசாதங்களின் தரத்தைப் பரிசோதிக்க வேண்டும் என ஆலோசனைகள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கலைவாணி, டி.எஸ்.பி மணிகண்டன், ஆர்.டி.ஓ சத்யா உள்ளிட்ட அனைத்துத் துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு அருகே வீட்டு வாசலில் நிறுத்தப்பட்டிருந்த மின்சார ஸ்கூட்டர் பேட்டரி வெடித்து தீ விபத்து

ஈரோடு, மே 6:

ஈரோடு அருகே வீட்டு வாசலில் நிறுத்தி இருந்த மின்சார ஸ்கூட்டரின் பேட்டரி வெடித்து ஏற்பட்ட தீ விபத்தில் கார் உள்பட 4 வாகனங்கள் எரிந்து நாசமாகின.



ஈரோடு மாவட்டம் டி.என்.பாளையம் அருகே உள்ள கள்ளிப்பட்டி கொண்டையம்பாளையம் காட்டு வளவை சேர்ந்தவர் சுந்தரம். இவருடைய மகன் அகில்வாசகம் (வயது 27). ஐ.டி. நிறுவனத்தில் ஊழியராக வேலை செய்து வருகிறார். இவரது வீட்டில் ஒரு கார், மோட்டார் சைக்கிள் மற்றும் 2 ஸ்கூட்டர்கள் உள்ளன. இதில் ஒன்று மின்சார ஸ்கூட்டர் ஆகும். இந்த வாகனங்கள் அனைத்தும் வீட்டின் வாசல் முன்பு உள்ள வராண்டாவில் நிறுத்தப்படுவது வழக்கம். அதன்படி நேற்று முன்தினம் இரவு வாகனங்கள் அனைத்தும் வீட்டின் வாசலில் நிறுத்தப்பட்டு இருந்தன. அனைவரும் வீட்டின் உள்ளே தூங்கிகொண்டிருந்தனர்.

நேற்று அதிகாலை 5 மணி அளவில் வீட்டுக்கு வெளியே ஏதோ வெடிக்கும் சத்தம் கேட்டு உள்ளது. இதைத்தொடர்ந்து பொருட்கள் கருகும் வாசனையும் வந்துள்ளது. இதில் சந்தேகம் அடைந்த அகில்வாசகம் குடும்பத்தினர் தூக்கத்தில் இருந்து திடுக்கிட்டு எழுந்து வெளியே வந்து பார்த்தனர். அப்போது அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் உள்பட 4 வாகனங்களும் தீப்பிடித்து கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். ஆனால் அவர்களால் வீட்டில் இருந்து வெளியே வர முடியவில்லை. இதனால் அவர்கள் வீட்டின் மாடிக்கு சென்றனர்.

இதனிடையே அக்கம் பக்கத்தினர் ஓடிச்சென்று தண்ணீர் ஊற்றி தீயை அணைக்க முயன்றனர். ஆனால் முடியவில்லை. இதுகுறித்த தகவல் கிடைத்ததும் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தண்ணீரை பீய்ச்சி அடித்து தீயை அணைத்தனர். எனினும் இந்த தீ விபத்தில் அனைத்து வாகனங்களும் எரிந்து நாசமாகின. இதுகுறித்து தீயணைப்பு வீரர்கள் கூறுகையில், 'மின்சார ஸ்கூட்டரின் பேட்டரி பழுதாகி தீப்பிடித்ததில் இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம்' என தெரிவித்தனர்.

இதுதொடர்பாக பங்களாப்புதூர் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## க்ரைம் கார்னர்

### திருச்சியில் ஒரு கிலோ தங்கம் கொள்ளையடித்த வழக்கில் நகை பட்டறை ஊழியர் உட்பட 4 பேர் கைது

திருச்சி, மே 6:



திருச்சி பெரியசெட்டி தெருவில் பழைய தங்க நகைகளை உருக்கி அதை கட்டியாக்கி விற்பனை செய்யும் நகை பட்டறை தொழில் நடத்தி வருபவர் உதய். இவரது வீட்டின் முதல் தளத்தில் கடை ஊழியர் நித்தின் என்பவர் தங்கி உள்ளார்.

இருவரும் மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். இந்நிலையில், நகை பட்டறைக்கு ஏப்.25-ம் தேதி வந்த 4 பேர், தங்கக்கட்டி வாங்குவதுபோல பேசி நித்தின், உதய் ஆகியோரை தாக்கி ரூ.1.49 கோடி மதிப்பிலான ஒரு கிலோ தங்கக்கட்டியை கொள்ளையடித்துச் சென்றனர்.

இதுதொடர்பாக, கோட்டை போலீஸார் 2 தனிப்படை அமைத்து குற்றவாளிகளை தேடினர். உதய், நித்தின் ஆகியோரது செல்போன்களை கைப்பற்றிய போலீஸார், இருவரும் யாரிடம் பேசினார்கள் என ஆய்வு செய்தனர்.

இதில், கடை ஊழியர் நித்தினிடம் விசாரணை நடத்திய போது, அவர் தனக்கு தெரிந்த மகாராஷ்டிராவைச் சேர்ந்த 3 பேரை வைத்து கொள்ளை சம்பவத்தை அரங்கேற்றியது தெரியவந்தது. மேலும், சம்பவம் நடைபெற்ற அன்றே போலீஸார் மாநிலம் முழுவதும் சோதனைச் சாவடிகளை எச்சரித்தனர். ஒகுர் அருகே கொள்ளையர்கள் சென்ற காரை போலீஸார் மடக்கி பிடிக்க முயன்றபோது, காரில் இருந்த 3 பேர் தப்பியோடினர். கார் ஓட்டுநர் அமல்ஜாதவ் மட்டும் போலீஸாரிடம் சிக்கிக் கொண்டார். நித்தின், அமல்ஜாதவ் ஆகியோர் அளித்த தகவலின்பேரில், திருட்டு நகைகளை வாங்கி விற்கும் பியூஸ் ஆனந்த், பிரவீன் ஆகியோரையும் போலீஸார் பிடித்தனர். தொடர்ந்து, நித்தின், அமல்ஜாதவ், பியூஸ் ஆனந்த், பிரவீன் ஆகிய 4 பேரையும் போலீஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர். பின்னர், அவர்களை திருச்சி 3-வது குற்றவியல் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்து சிறையில் அடைத்தனர். இந்த கொள்ளை சம்பவத்தில் நேரடியாக ஈடுபட்டு தலைமறைவாக உள்ள 3 பேரை போலீஸார் தேடி வருகின்றனர்.

### வியாசர்பாடியில் வீட்டின் பூட்டை உடைத்து 89 கிராம் நகை திருட்டு

சென்னை, மே 6:

சென்னை, வியாசர்பாடி, சுந்தரம் 3-வது தெருவைச் சேர்ந்தவர் கனிமொழி (29). இவர் தனது கணவர் மற்றும் குழந்தைகளுடன் ஒரு அடுக்குமாடி குடியிருப்பின் முதல் தளத்தில் வசித்து வருகிறார். அதே கட்டிடத்தின் தரை தளத்தில், அவரது பெற்றோர்கள் வசித்து வருகின்றனர்.

கடந்த ஏப்.4ம் தேதி கனிமொழி தனது கணவருடன் வெளியூர் சென்றிருந்தார். அன்று இரவு அவரது பெற்றோர் வீட்டைப் பூட்டி உறங்கச் சென்றனர். மறுநாள் காலை வந்து பார்த்தபோது, வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு பீரோவில் இருந்த 89 கிராம் தங்க நகைகள், 500 கிராம் வெள்ளிப் பொருட்கள், ரூ.2 ஆயிரம் ரொக்கம் மற்றும் ஒரு லேப் டாப் ஆகியவை திருடப்பட்டிருப்பது தெரியவந்தது.

இது குறித்து, கனிமொழி அளித்த புகாரின் பேரில் வியாசர்பாடி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி, வியாசர்பாடியைச் சேர்ந்த அஜித் (25) மற்றும் 16 வயது சிறுவன் என்பது தெரியவந்தது. தலைமறைவாக இருந்த அஜித்தை கைது செய்த போலீஸார். அவருடன் இருந்த சிறுவனையும் பிடித்தனர். கைதான அஜித்திடம் இருந்து 77 கிராம் தங்க நகைகள், 500 கிராம் வெள்ளிப் பொருட்கள் மற்றும் ஒரு லேப் டாப் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட அஜித் ஒரு 'சரித்திர பதிவேடு' குற்றவாளி ஆவார். இவர் மீது 2 கொலை முயற்சி வழக்குகள், கஞ்சா கடத்தல், வழிப்பறி மற்றும் திருட்டு என மொத்தம் 21 குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பது விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து, கைது செய்யப்பட்ட அஜித் நேற்று முன் தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அவருடன் பிடிபட்ட 16 வயது சிறுவன் அரசு கூர்நோக்கு இல்லத்தில் சேர்க்கப்பட்டார்.

## விளையாட்டு செய்திகள்

### செஸ் - மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் உலகின் 7-ம் நிலை வீரரை வீழ்த்திய 8 வயது தமிழக சிறுவன்

சிவகாசி, மே 6:

கள்ளக்குறிச்சியைச் சேர்ந்த 8 வயது சிறுவன் தமிழமுதன். 9 வயதுக்குட்பட்டோருக்கான உலக செஸ் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் இவர், 2000+ எலோ (ELO) ரேட்டிங்கை எட்டிய மிக இளம் வயது வீரர் என்ற பெருமைக்குரியவர்.

கடந்த ஒரு ஆண்டாக சிவகாசி அருகே உள்ள திருத்தங்கலில் வசித்து வரும் தமிழமுதன் வீட்டில் வெள்ளிக்கிழமை இரவு பலத்த மழை காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டது. சுமார் 48 சதவிகிதம் பேட்டரி மட்டுமே இருந்த லேப்டாப் மற்றும் செல்போன் ஹாட்ஸ்பாட் உதவியுடன் 'ப்ரீஸ்டைல் ப்ரைடே' (FREESTYLE FRIDAY) ஆன்லைன் போட்டியில் பங்கேற்றார்.

மெழுகுவர்த்தி மற்றும் செல்போன் டார்ச் வெளிச்சத்தில் விளையாடிய தமிழமுதன், உலகின் 7-ம் நிலை வீரரான ஜெர்மனியின் வின்செண்ட் கெய்மரை (VINCENT KEYMER) முதல் சுற்றிலேயே வீழ்த்தி அதிரடி காட்டினார். லேப்டாப் பேட்டரி தீரும் வரை விளையாடிய அவர், 5 சுற்றுகளில் 3-ல் வெற்றி பெற்றார்.

### தாமஸ் கோப்பை பேட்மிண்டன்: இந்தியா வெண்கலம் வென்றது



சென்னை, மே 6:

டென்மார்க்கின் ஹார்சென்ஸ் நகரில் தாமஸ் கோப்பை பாட்மிண்டன் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் அரை இறுதி சுற்றில் இந்திய ஆடவர் அணி நேற்று முன்தினம் இரவு பிரான்ஸ் அணியுடன் மோதியது. இதில் இந்திய அணி 0-3 என்ற கணக்கில் தோல்வி அடைந்து வெண்கலப் பதக்கம் பெற்று தொடரை நிறைவு செய்தது. இந்திய அணியில் காயம் காரணமாக லக் ஷயா சென் களமிறங்கவில்லை. அவருக்கு பதிலாக ஹெச்.எஸ்.பிரனாய் விளையாடினார். முதலில் நடைபெற்ற ஒற்றையர் ஆட்டத்தில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி 11-21, 9-21 என்ற செட் கணக்கில் உலகத் தரவரிசையில் 4-வது இடத்தில் உள்ள கிறிஸ்டோ போபோவிடம் தோல்வி அடைந்தார். 4-வது முறையாக இதைத் தொடர்ந்து நடைபெற்ற அடுத்த ஆட்டத்தில் கிடாம்பி ஸ்ரீகாந்த் 16- 21, 18- 21 என்ற செட் கணக்கில் 10-ம் நிலை வீரரான அலெக்ஸ் லானியரிடம் வீழ்ந்தார். இதன் பின்னர் 3-வது ஆட்டத்தில் இந்தியாவின் ஹெச்.எஸ்.பிரனாய், தோமா ஜூனியர் போபோவுடன் மோதினார். இதில் ஹெச்.எஸ்.பிரனாய் 19- 21, 16-21 என்ற செட் கணக்கில் தோல்வி அடைந்தார். 2022-ம் ஆண்டு சாம்பியனான இந்திய அணி தாமஸ் கோப்பை தொடரில் வெண்கலப் பதக்கம் வெல்வது இது 4-வது முறையாகும். கடந்த 1952, 1955 மற்றும் 1979ம் ஆண்டுகளிலும் இந்தியா வெண்கலப் பதக்கம் கைப்பற்றியிருந்தது.

# 50 ஆண்டுகால தேர்தல் வரலாற்றில் மூன்றாம் முறையாக 20 சதவீதமாக குறைந்த அதிமுக வாக்கு வங்கி!

சென்னை, மே 6:

அதிமுகவின் 50 ஆண்டுகால வரலாற்றில் மூன்றாம் முறையாக 20 சதவீதமாக அதிமுகவின் வாக்கு குறைந்துள்ளது. இந்த தேர்தலில் 169 தொகுதிகளில் போட்டியிட்ட அதிமுக 20.66 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

எம்ஜிஆர் தொடங்கிய அதிமுக முதன்முதலாக 1977-இல் நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் களம் கண்டது. அந்த தேர்தலில் 130 தொகுதிகளில் போட்டியிட்ட அதிமுக 30.4 சதவீத வாக்குகளைப் பெற்று தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்தது. தொடர்ந்து, 1980-இல் நடைபெற்ற தேர்தலில் 38.8 சதவீத வாக்குகளுடன் 129 தொகுதிகளிலும், 1985-இல் தேர்தலில் 37 சதவீத வாக்குகளுடன் 132 தொகுதிகளிலும் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது.

எம்ஜிஆர் மறைவுக்குப் பிறகு 1989-இல் நடைபெற்ற தேர்தலில் இரண்டாக உடைந்ததுடன், இரட்டை இலை சின்னம் முடக்கப்பட்டதால், ஜெயலலிதா சேவல் சின்னத்திலும், ஜானகி புறா சின்னத்திலும் போட்டியிட்டனர். சின்னம் முடக்கப்பட்ட நேரத்திலும் ஜெயலலிதா அணி 27 இடங்களைப் பெற்று எதிர்க்கட்சியானது. ஜானகி அணி 2 இடங்களில் வெற்றி பெற்றது. அந்த தேர்தலில் முதல் முறையாக அதிமுக வாக்கு சதவீதம் 21.8 -ஆக சரிந்தது. அதன் பின், 1991-இல் நடைபெற்ற தேர்தலில் ஜெயலலிதா தலைமையில் களம் கண்ட அதிமுக 44.4 சதவீத வாக்குகளைப் பெற்று, 164 தொகுதிகளில் மகத்தான வெற்றியைப் பெற்று ஜெயலலிதா முதல்வரானார். 1991 அதிமுக ஆட்சி காலத்தில் சசிகலாவின் உறவினரான சுதாகரனின் ஆடம்பரத் திருமணம், ஆட்சி மீதான ஊழல் புகார்கள், ஜெயலலிதா எதிர்ப்பு அலை மற்றும் நடிகர் ரஜினியின் திமுக ஆதரவு நிலைப்பாடு ஆகியவற்றின் காரணமாக 1996-இல் நடைபெற்ற தேர்தலில் 4 இடங்களில் மட்டுமே அதிமுக வெற்றி பெற்றது. அந்த தேர்தலில் 21.5-ஆக அதிமுகவின் வாக்கு சதவீதம் குறைந்தது.

மூன்றாம் முறையாக 20 சதவீதம்...: இதைத் தொடர்ந்து, 2001 தேர்தலில் 31.4 சதவீதம், 2006 தேர்தலில் 32.7 சதவீதம், 2011 தேர்தலில் 38.4 சதவீதமும் என சராசரியாக 30 சதவீதத்துக்கும் குறையாமல் வாக்கு வங்கியை தக்க வைத்திருந்தது அதிமுக. 2016 தேர்தலில் மீண்டும் உட்சபட்சமாக 41.1 சதவீதம் பெற்றது.

அதிமுகவின் 10 ஆண்டுகால தொடர்ச்சியான ஆட்சி மற்றும் ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு 2021-இல் நடைபெற்ற தேர்தலில் கூட 33 சதவீத வாக்குகளுடன் 66 இடங்களில் அதிமுக பெற்று எதிர்க்கட்சி ஆனது. இந்நிலையில், இந்த தேர்தலில் 169 தொகுதிகளில் போட்டியிட்ட அதிமுக 46 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளதுடன், ஒட்டுமொத்தமாக சுமார் 1.31 கோடி வாக்குகளைப் பெற்றுள்ளது. இதன் மூலம் அதிமுக 20.66 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளது. அதிமுக 50 ஆண்டுகால தேர்தல் வரலாற்றில் கடந்த 1989, 1991 தேர்தல்களைத் தொடர்ந்து, இந்த தேர்தலில் மிக குறைந்த அளவாக 20.66 சதவீத வாக்குகளை அதிமுக பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# குறைந்த தொகுதிகள்... கூடுதல் வெற்றி: விசிக, தேமுதிகவை முந்திய கம்யூனிஸ்ட்கள்

சென்னை, மே 6:



குறைந்த தொகுதிகளை பெற்றிருந்தாலும், விசிக, தேமுதிகவை காட்டிலும் கூடுதலான தொகுதிகளில் வெற்றி பெற்று கம்யூனிஸ்ட் கட்சிகள் தங்களது செல்வாக்கை நிரூபித்துள்ளன.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட குறைந்த தொகுதிகளிலும் அதிக வெற்றியைப் பதிவு செய்து இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் அரசியல் அரங்கில் கவனம் ஈர்த்துள்ளன.

திமுக கூட்டணியில் தொகுதிப் பங்கீட்டின்போது, இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் இரட்டை இலக்க தொகுதிகளைப் பெற தீவிர முயற்சி மேற்கொண்டன. எனினும், இழுபறிக்குப் பின்னர் இரு கட்சிகளுக்கும் தலா 5 தொகுதிகள் மட்டுமே ஒதுக்கப்பட்டன. இதற்கு அப்போதே அவர்கள் அதிருப்தி தெரிவித்தனர்.

இந்நிலையில், தேர்தல் முடிவுகள் கம்யூனிஸ்ட்களின் செல்வாக்கை உறுதிப்படுத்தியுள்ளன. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிட்ட 5 இடங்களில், தளி தொகுதியில் ராமச்சந்திரனும், திருத்துறைப்பூண்டியில் மாரி முத்துவும் வெற்றி பெற்றனர்.

அதேபோல், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் பத்மநாபபுரம் தொகுதியில் ஆர்.செல்லசாமியும், கீழ்வேளூரில் லதாவும் வெற்றி வாகை சூடியுள்ளனர். இதன் மூலம் இரு கட்சிகளும் தலா 2 இடங்களில் வெற்றியை பதிவு செய்துள்ளன.

அதே நேரம் திமுக கூட்டணியில் 8 தொகுதிகளை பெற்ற விசிக, காட்டுமன்னார் கோயில் (ஜோதி மணி) மற்றும் திண்டிவனம் (வன்னியரசு) ஆகிய 2 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது.

10 தொகுதிகளில் போட்டியிட்ட தேமுதிகவோ, பிரேமலதா விஜயகாந்த் (விருத்தாசலம்) பெற்ற வெற்றியின் மூலம் ஒரே ஒரு இடத்துடன் திருப்தி அடைய வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

அந்த வகையில், குறைந்த தொகுதிகளில் போட்டியிட்டாலும், கம்யூனிஸ்ட் கட்சிகள் கூடுதல் தொகுதிகளில் வெற்றியை பதிவு செய்து, தங்களது செல்வாக்கை நிரூபித்துள்ளன.

# புதுச்சேரியில் மீண்டும் என்டிஏ கூட்டணி ஆட்சி: 5-வது முறையாக முதல்வராகிறார் ரங்கசாமி

புதுச்சேரி, மே 6:

புதுச்சேரி: புதுச்சேரியில் மீண்டும் தேசிய ஜனநாயகக் கூட்டணி (என்டிஏ) ஆட்சி அமைகிறது. ஐந்தாவது முறையாக ரங்கசாமி முதல்வராகிறார்.

புதுச்சேரியில் புதுச்சேரி, காரைக்கால், மாஹே, ஏனாம் என 4 பிராந்தியங்கள் உள்ளன. இதற்கான சட்டப்பேரவைத் தேர்தல் கடந்த ஏப்.9-ம் தேதி நடைபெற்றது. இங்கு ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும் இண்டியா கூட்டணிக்கும் இடையே கடும் போட்டி நிலவியது. என்டிஏ கூட்டணியில் என்.ஆர்.காங்கிரஸ், பாஜக, அதிமுக, புதிதாக உருவான லட்சிய ஜனநாயகக் கட்சி உள்ளிட்டவை இடம்பெற்றன.

இண்டியா கூட்டணியில் காங்கிரஸ் - திமுக இடையே ஏற்பட்ட மோதலால் தொடக்கம் முதலே பெரும் குழப்பம் நிலவியது. திமுக போட்டியிட்ட 5 தொகுதிகளில் காங்கிரஸ் வேட்பாளர்களும் நிறுத்தப்பட்டனர். அத்துடன் இடதுசாரிகள் தனித்துப் போட்டியிட்டன. விசிகவுக்கு ஒதுக்கிய தொகுதியில் காங்கிரஸ், இடதுசாரிகள் போட்டியிட்டன.

இந்நிலையில், தமிழகம், புதுச்சேரி உட்பட 5 மாநிலங்களில் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டன. புதுச்சேரியில் தொடக்கம் முதலே என்டிஏ கூட்டணி முன்னிலை வகித்தது. முதல் சுற்றில் 17 தொகுதிகளில் வாக்குகள் எண்ணப்பட்டன. இதில்தட்டாஞ்சாவடியில் என்.ஆர்.காங்கிரஸ் நிறுவனர் ரங்கசாமி, முத்தியால்பேட்டையில் வையாபுரி மணிகண்டன், ஏனாமில் மல்லாடி கிருஷ்ணாராவ், அரியாங்குப்பத்தில் அய்யப்பன், நெட்டப்பாக்கத்தில் பேரவைத் துணைத் தலைவர் ராஜவேலு, வில்லியனூரில் ரவிக்குமார், ஏம்பலத்தில் மோகன்தாஸ், காரைக்கால் வடக்கில் அமைச்சர் திருமுருகன் , லாஸ்பேட்டையில் சிவக்கொழுந்து ஆகியோர் வென்றனர்.

மண்ணாடிப்பட்டில் பாஜக வேட்பாளர் அமைச்சர் நமச்சிவாயம், நிரவி டி.ஆர்.பட்டிணத்தில் மீனாட்சி சுந்தரம் ஆகியோர் வென்றனர். உப்பளம் தொகுதியில் அதிமுக மாநில செயலாளர் அன்பழகன் வென்றார். காங்கிரஸ் கட்சியில் ஊசுடு தொகுதியில் கார்த்திகேயன் வென்றார்.

நெல்லித்தோப்பில் திமுக வேட்பாளர் கார்த்திகேயன் வென்றார்.

என்.ஆர்.காங்கிரஸ் 12, பாஜக 4, அதிமுக 1, லஜக 1 என 18 தொகுதிகளில் வெற்றி பெற்றதன் மூலம் மீண்டும் என்டிஏ கூட்டணி ஆட்சியமைக்கிறது. கூட்டணி தலைவர் ரங்கசாமி 5-வது முறையாக முதல்வராகிறார்.

## வணிகச் செய்திகள்

### ராஜஸ்தான் ராயல்ஸ் அணியில் லஷ்மி மிட்டல், ஆதர் பூனாவாலா முதலீடு: ரூ.15,660 கோடி ஒப்பந்தம்

நியூயார்க், மே 6:

இங்கிலாந்தைத் தலைமையிடமாகக் கொண்ட இந்திய வம்சாவளி தொழிலதிபர் லஷ்மி மிட்டல் மற்றும் ஆதர் பூனாவாலா இணைந்து ஐபிஎல் அணியான ராஜஸ்தான் ராயல்ஸ் பங்குகளை வாங்கியுள்ளனர். இந்த ஒப்பந்தத்தின் மதிப்பு சுமார் 1.65 பில்லியன் டாலர்கள் (இந்திய மதிப்பில் ரூ.15,660 கோடி) என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த புதிய கூட்டணியில், தற்போதைய பிரதான உரிமையாளரான மனோஜ் பதாலேயுடன் சேர்ந்து மிட்டல் குடும்பமும், பூனாவாலாவும் இணைந்து செயல்பட உள்ளனர். மேலும், இந்த கூட்டணி பார்ல் ராயல்ஸ் மற்றும் பார்படோஸ் ராயல்ஸ் ஆகிய அணிகளிலும் உரிமையைப் பெறுகிறது.

2008 முதல் ஐபிஎல் தொடரில் இடம்பெற்று வரும் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியை மனோஜ் பதாலே வெறும் 67 மில்லியன் டாலர்களுக்கு வாங்கியிருந்தார். தற்போது இந்த அணியின் மதிப்பு பல மடங்கு உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த ஒப்பந்தம் கடந்த சில மாதங்களாக நிலவி வந்த உரிமை தொடர்பான குழப்பங்களுக்கு முடிவு கட்டுகிறது. முன்னதாக, அமெரிக்காவைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியை வாங்குகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகின. ஆனால் அது நடைமுறைக்கு வரவில்லை. ஒப்பந்தத்தின்படி, மிட்டல் குடும்பம் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியில் சுமார் 75% பங்குகளைப் பெறும். ஆதர் பூனாவாலா சுமார் 18% பங்குகளை வைத்திருப்பார்.

# அசாமில் ‘ஹாட்ரிக்’ வெற்றியை பதிவு செய்த பா.ஜ.க.

**கவுகாத்தி, மே 6:**

கடந்த மாதம் 9-ந் தேதி ஒரே கட்டமாக சட்டசபை தேர்தல் நடந்தது. 2 கோடியே 50லட்சம்வாக்காளர்களில்,85.96 சதவீதம்பேர்வாக்களித்தனர்.722 வேட்பாளர்கள்போட்டியிட்டனர். பா.ஜ.க. காங்கிரஸ் இடையே கடும் போட்டி நிலவியது.



இந்நிலையில்,நேற்றுவாக்கு எண்ணிக்கை நடந்தது. 35 மாவட்டங்களில் அமைந்துள்ள 40 வாக்கு எண்ணும் மையங்களில்காலை8மணிக்கு பலத்த பாதுகாப்புடன் வாக்கு எண்ணிக்கை தொடங்கியது.

ஆரம்பத்தில் இருந்தே பா.ஜ.க. முன்னிலையில் இருந்தது. ஜாலுக்பாரி தொகுதியில் போட்டியிட்ட முதல்-மந்திரி ஹிமந்த பிஸ்வா சர்மா 89 ஆயிரத்து 434 வாக்கு வித்தியாசத்தில் காங்கிரஸ் வேட்பாளர் பிடிஷா நியோக்கை தோற்கடித்து, அமோக வெற்றி பெற்றார்.

காங்கிரசின் முதல்-மந்திரி வேட்பாளராக அறியப்பட்ட கவுரவ் கோகாய் ஜோர்ஹட் தொகுதியில் 23 ஆயிரத்து 182 வாக்கு வித்தியாசத்தில் தோல்வி அடைந்தார். சட்டசபை எதிர்க்கட்சிதலைவர் தேவபிரதா சைக்கியாவும் தோல்வியை தழுவினார். சபாநாயகர் பிஸ்வஜித் தைமரி, தமுல்பூர் தொகுதியில் வெற்றி பெற்றார். பா.ஜ.க.வின் கூட்டணிகட்சியான அசாம்கணபரிஷத்தின்தலைவர் அதுல் போரா வெற்றி பெற்றார். பியுஷ் ஹசாரிகா, ரனோஜ் பேகு, அஜந்தா நியோக், அதுல் போரா உள்ளிட்ட மாநில மந்திரிகள் பலர் வெற்றி பெற்றனர். ரைஜோர் தளத்தின் தலைவர் அகில் கோகாய், சிப்சாகர் தொகுதியில் வெற்றி பெற்றார்.

பா.ஜ.க. கூட்டணி தொடர்ந்து வெற்றி முகமாக காணப்பட்டது. வாக்கு எண்ணிக்கையின் இறுதியில், பா.ஜ.க. கூட்டணி 101 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இதன்மூலம் 3-வது தடவையாக ஆட்சியை கைப்பற்றி ‘ஹாட்ரிக்’ சாதனை படைத்தது. மொத்தம் உள்ள 126 தொகுதிகளில், குறைந்தபட்ச பெரும்பான்மைக்கு 64 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும். ஆனால், மூன்றில் இருபங்குக்கு மேலான பெரும்பான்மையை பா.ஜ.க. கூட்டணி பெற்றுள்ளது.

## பெண்ணுக்கு தொல்லை: ஜோதிடருக்கு வலைவீச்சு

**பெங்களூரு, மே 6:**

கர்நாடக மாநிலம் பெங்களூரு தெற்கு (ராமநகர்) மாவட்டத்தில் ஒரு பெண் வசித்து வருகிறார். இவரது செல்போனுக்கு ஒருவர் கடந்த ஒரு வாரத்துக்கு முன்பாக தொடர்பு கொண்டு பேசினார். அப்போது அவர் தன்னை ராமநகர் அருகே தொட்டமன்னுகுட்டே கிராமத்தை சேர்ந்த கிரண் என கூறி அந்த பெண்ணிடம் அறிமுகம் செய்து கொண்டார். அத்துடன் தான் ஒரு ஜோதிடர் என்றும் கிரண் தெரிவித்தார்.

பின்னர் தான் பெங்களூருவில் ஒரு சிறப்பு பூஜை செய்ய இருப்பதாகவும், அந்த பூஜைக்கு ஒரு பெண்ணின் நிர்வாண புகைப்படம் தேவைப்படுவதாகவும், அந்த பெண்ணின் உடலில் எங்கும் மச்சம் இருக்க கூடாது என்றும், மச்சம் இருந்தால் பூஜை வெற்றி அடையாது என்றும், அதனால் மச்சம் இல்லாத பெண்ணின் நிர்வாண புகைப்படத்தை வைத்து தான் பூஜை செய்ய வேண்டும் என்றும் கூறினார். இந்த பூஜைக்காக உங்களை தேர்வு செய்ய உள்ளேன் எனவும் கிரண் தெரிவித்தார்.

இதைக்கேட்டு அந்த பெண் அதிர்ச்சியும், ஆத்திரமும் அடைந்தார். அதன்பிறகும், அந்த பெண்ணிடம் நிர்வாண புகைப்படத்தை அனுப்பும்படி கிரண் செல்போனில் தகவல்களை அனுப்பிவைத்தபடி இருந்தார். இவ்வாறு நிர்வாண புகைப்படத்தை அனுப்பினால், ரூ.30 லட்சம் கொடுப்பதாகவும் அப்பெண்ணுக்கு கிரண் தகவல்களை அனுப்பினார். கடந்த ஒரு வாரமாக நிர்வாண புகைப்படத்தை கேட்டு கிரண் தொல்லை கொடுத்ததால், அந்த பெண் மன உளைச்சலுக்கு ஆளானார்.

மேலும் நடந்த சம்பவங்கள் பற்றி ராமநகர் மகளிர் போலீஸ் நிலையத்தில் அப்பெண் புகார் அளித்தார்.

போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் தலைமறைவாகிவிட்ட கிரணை போலீசார் வலைவீசி தேடிவருகிறார்கள். நிர்வாண புகைப்படத்துக்கு ரூ.30 லட்சம் தருவதாக ஆசைகாட்டி பெண்ணுக்கு தொல்லை கொடுக்கப்பட்ட சம்பவம் ராமநகரில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## எல்பிஜி நுகர்வு: ஏப்ரலில் 22 லட்சம் டன்னாக 16% சரிவு!

**புதுடெல்லி, மே 6:**

மத்திய கிழக்கு போர்ச் சூழல் மற்றும் விநியோகத் தட்டுப்பாடு காரணமாக, இந்தியாவில் கடந்த ஏப்ரலில் சமையல் எரிவாயு (எல்பிஜி) நுகர்வு 22 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. கடந்தாண்டு இதே காலகட்டத்தில் 26.2 லட்சம் டன்னாக இருந்த நுகர்வு, தற்போது 16 சதவீதம் சரிந்துள்ளது.

இந்தியா தனது எல்பிஜி தேவையில் சுமார் 60 சதவீதத்தை இறக்குமதி மூலம் பூர்த்தி செய்கிறது. ஹோர்முஸ் நீரிணை முடக்கம் காரணமாக சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து சரக்குகள் வராததால், உள்நாட்டில் எரிவாயு கிடைப்பதில் கடும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

வீட்டு உபயோக எல்பிஜி விநியோகத்தை உறுதி செய்யும் நோக்கில், வணிக எல்பிஜி விநியோகத்தை அரசு குறைத்துவிட்டது. மேலும், வீடுகளுக்கு வழங்கப்படும் சிலிண்டர்களுக்கான கால இடைவெளியையும் அதிகாரிகள் முறைப்படுத்தினர். இதன் காரணமாகவே, ஏப்ரலில் ஒட்டுமொத்த நுகர்வு கணிசமாகக் குறைந்துள்ளதாகத் தெரிகிறது.

போர் பதற்றம் காரணமாக வளைகுடா நாடுகளில் வான்வெளி மூடப்பட்டதும், விமானப் போக்குவரத்து ரத்து செய்யப்பட்டதும் விமான எரிபொருள் விற்பனையிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஏப்ரலில் இதன் நுகர்வு 1.37 சதவீதம் குறைந்து, 7.61 லட்சம் டன்னாக பதிவாகியுள்ளது. டீசல் விற்பனை கடந்த மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் மந்தமான வளர்ச்சியை (0.25 சதவீதம்) கண்டுள்ளது. எனினும், பெட்ரோல் விற்பனை 6.36 சதவீதம் உயர்ந்து, 36.7 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.

## அனைத்து குழந்தைகளுக்கும் நீரிழிவு நோய் பரிசோதனை: வாழ்நாள் சிகிச்சை அளிக்க மத்திய அரசு திட்டம்

**புதுடெல்லி, மே 6:**



இளம் வயதினர் இடையே நீரிழிவு நோய் அதிகரித்து வருகிறது. இதைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு தனது முதன்மை திட்டமான ராஷ்ட்ரிய பால் ஸ்வஸ்தய காரியக்ரம் (ஆர்பிஎஸ்கே) திட்டத்தை விரிவுபடுத்துகிறது.

இதன்மூலம் பிறப்பு முதல் 18 வயது வரையிலான அனைத்து குழந்தைகளுக்கும் நீரிழிவு நோய் பரிசோதனை செய்து, வாழ்நாள் முழுவதும் இலவச சிகிச்சை வழங்க உள்ளது. தேசிய பொது சுகாதார மாநாட்டில் மத்திய சுகாதார அமைச்சகத்தால் ஒரு வழிகாட்டு ஆவணம் வெளியிடப்பட்டது. இதில் குழந்தைப் பருவ நீரிழிவு நோய்க்கான பரிசோதனை, நோயறிதல், சிகிச்சை மற்றும் நீண்டகால மேலாண்மை ஆகியவற்றுக்காக ஒரு தேசிய கட்டமைப்பு வகுக்கப்பட்டுள்ளது. இது, சமூகம் மற்றும் பள்ளி அளவிலான பரிசோதனைகளை மாவட்ட அளவிலான பராமரிப்புடன் ஒருங்கிணைத்து, நோயை முன்கூட்டியே கண்டறிவதையும் தொடர் சிகிச்சையை உறுதி செய்வதையும் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த திட்டம், மத்திய அரசின் மறுசீரமைக்கப்பட்ட ஆர்பிஎஸ்கே 2.0 திட்டத்தின் ஒரு பகுதியாகும். இந்த வழிகாட்டுதல்கள், மோசமான உணவுப் பழக்கம், குறைந்து வரும் உடல் சார்ந்த செயல்பாடுகள், அதிக திரைப் பயன்பாடு உள்ளிட்ட அதிகரித்து வரும் வாழ்க்கை முறை அபாயங்களையும் சுட்டிக் காட்டுகின்றன. மேலும், தொடர் சிகிச்சையை வலுப்படுத்த, டிஜிட்டல் முறையிலான கண்காணிப்பு கட்டமைக்கப்பட்ட பின்தொடர்தல் முறைகளையும் அறிமுகப்படுத்துகின்றன. இந்த திட்டத்தின் கீழ் நடமாடும் சுகாதாரக் குழுக்கள், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் உள்ள குழந்தைகளை பரிசோதனை செய்யும்.

## வேலைக்கு சென்றபோது மாயமான நர்சு பம்பை ஆற்றில் பிணமாக மீட்பு

**திருவனந்தபுரம், மே 6:**



ஆலப்புழா அருகே வேலைக்கு சென்றபோது மாயமான நர்சு 6 நாட்களுக்கு பிறகு பம்பை ஆற்றில் பிணமாக மீட்கப்பட்டார். அவர் சாவில் மர்மம் இருக்கிறதா? என்று போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கேரள மாநிலம் ஆலப்புழா அருகே மாவேலிக்கரையை சேர்ந்தவர் ரஞ்சு. இவருடைய மனைவி தன்யா (வயது 29). இந்த தம்பதிக்கு 10 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் ஆனது. 6 வயதில் ஒரு மகள் இருக்கிறாள். தன்யா திருவல்லாவில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் நர்சாக வேலை பார்த்து வந்தார். இந்த நிலையில் கடந்த 26-ம் தேதி மாலையில் வழக்கம் போல் வேலைக்கு புறப்பட்ட தன்யாவை அவரது கணவர் மோட்டார் சைக்கிளில் அழைத்துச் சென்று பஸ் நிலையத்தில் விட்டு வந்தார். ஆனால் அவர் பணிக்கு வரவில்லை என இரவு 11.30 மணிக்கு மருத்துவமனையில் இருந்து ரஞ்சுக்கு போன் வந்தது.


உடனே அவர் மனைவியின் செல்போனை தொடர்பு கொள்ள முயன்றபோது சுவிட்ச் ஆப் செய்யப்பட்டிருந்தது. இதையடுத்து ரஞ்சு, மாவேலிக்கரை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் பேரில் வழக்குப்பதிவு செய்த போலீசார், மாயமான தன்யாவை தேடும் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

இதற்கிடையே புளிக் கீழ் பகுதியில் பம்பை ஆற்றில் இளம்பெண் உடல் அழுகிய நிலையில் கரை ஒதுங்கி கிடப்பதாக கிடைத்த தகவலை தொடர்ந்து போலீசார் அங்கு சென்று அந்த பெண்ணின் உடலை கைப்பற்றினர். பின்னர் நடத்திய விசாரணையில், அழுகிய நிலையில் பிணமாக மீட்கப்பட்ட பெண் தன்யா என்பது உறுதியானது. தன்யாவை தாக்கி யாரேனும் ஆற்றில் தூக்கி வீசினார்களா? அல்லது தற்கொலை செய்தாரா? என்ற கோணத்தில் போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கேரளாவைக் கைப்பற்றியது காங்கிரஸ்

**திருவனந்தபுரம், மே 6:**





*கேரள சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி அபார வெற்றி பெற்று ஆட்சி அமைக்கவுள்ளது.*

*கேரள சட்டப்பேரவையில் 140 தொகுதிகள் உள்ளன. இந்தத் தேர்தலில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணிக்கும் (எல்டிஎஃப்), காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணிக்கும் (யுடிஎஃப்) கடும் போட்டி இருந்தது.*

*மொத்தமுள்ள 140 சட்டப்பேரவைத் தொகுதிகளில், ஐக்கிய ஜனநாயக முன்னணியில் காங்கிரஸ் 95 தொகுதிகளில் போட்டியிட்டது. இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 27 தொகுதிகளில் போட்டியிட்டது. இதர தொகுதிகள் கூட்டணி கட்சிகளுக்கு வழங்கப்பட்டன.*

*இதேபோல் இடது ஜனநாயக முன்னணி சார்பில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 86 தொகுதிகளில் போட்டியிட்டது. இதர தொகுதிகளில் கூட்டணி கட்சிகள் போட்டியிட்டன. தேசிய ஜனநாயக கூட்டணியில் பாஜக 115 தொகுதிகளில் போட்டியிட்டது. இதர தொகுதிகள் அதன் கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டன.*

*கேரளாவில் 140 தொகுதிகளுக்கும் கடந்த ஏப்ரல் 9-ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. இந்நிலையில் நேற்று காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. வாக்கு எண்ணிக்கையின் முடிவில் யுடிஎஃப் கூட்டணி 97 இடங்களைக் கைப்பற்றியுள்ளது.*

*காங்கிரஸ் 63, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 22, கேஇசி 7, ஆர்எஸ்பி 3, ஆர்ஜேடி 1, கேஇசி(ஜே) 1 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. அறுதிப் பெரும்பான்மைக்கு 71 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் எனும் நிலையில், காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி 97 இடங்களைக் கைப்பற்றியுள்ளதால் மீண்டும் ஆட்சியை கைப்பற்ற இருக்கிறது. கடைசியாக காங்கிரஸ் தலைமையிலான யுடிஎஃப் கூட்டணி ஆட்சி 2011 முதல் 2016 வரை ஆட்சியில் இருந்தது. அப்போது உம்மன் சாண்டி முதல்வராக இருந்தார். 10 ஆண்டுகளுக்குப் பிறகு அக்கட்சி மீண்டும் ஆட்சியில் அமரவுள்ளது.*

*சதீஷன், சென்னிதலா வெற்றி: கேரள காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரான ரமேஷ் சென்னிதலா ஹரிபாட் தொகுதியில் போட்டியிட்டார். அவர் இம்முறை 68,184 வாக்குகள் பெற்று மீண்டும் அதே தொகுதியில் வெற்றி பெற்றார். கட்சியின் மற்றொரு மூத்த தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான வி.டி.சதீஷன் இம்முறை பரவூர் தொகுதியில் போட்டியிட்டார். வாக்கு எண்ணிக்கையின் முடிவில், அவர் மொத்தம் 78,658 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.*

## தவெகவுக்கு பிரதமர் மோடி வாழ்த்து

**புது டெல்லி, மே 6:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்திய தவெகவுக்கு வாழ்த்து தெரிவிப்பதாக பிரதமர் மோடி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘தமிழகச் சட்டமன்றத் தேர்தல்களில் தேசிய ஜனநாயக கூட்டணியை ஆதரித்த தமிழக வாக்காளர்களுக்கு எங்களது நன்றிகள். மக்களின் பிரச்சினைகளைக் களைவதிலும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும் நாங்கள் எப்போதும் முன்னணியில் இருப்போம். சிறப்பான தேர்தல் செயல்பாட்டை வெளிப்படுத்திய தவெகவுக்கு எங்களது வாழ்த்துகள். தமிழகத்தின் முன்னேற்றத்தையும், மக்களின் நலனையும் முன்னெடுத்துச் செல்வதில் மத்திய அரசு தனது அனைத்து முயற்சிகளையும் முழுமையாக மேற்கொள்ளும்’ எனத் தெரிவித்துள்ளார்.

## த.வெ.க. தலைவர் விஜய்க்கு ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு வாழ்த்து

**திருப்பதி, மே 6:**

த.வெ.க. தலைவர் விஜய்க்கு ஆந்திர முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ‘எக்ஸ்’ தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், “தமிழக சட்டமன்ற தேர்தலில் விஜய் அவர்கள் பெற்ற மகத்தான வெற்றிக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக மக்களுக்கு சேவை செய்வதற்கும், அவர்களின் முன்னேற்றத்திற்கும், நல்வாழ்விற்கும் அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்குவதற்கும் அவர் மேற்கொள்ளும் முயற்சிகளில் எல்லா வெற்றிகளும் கிடைக்க வாழ்த்துகிறேன்” என்று பதிவிட்டுள்ளார்.

## வாழ்த்து தெரிவித்த ராகுல் காந்தி



**புதுடெல்லி, மே 6:**

தமிழக சட்டமன்ற தேர்தலில் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் அமோக வெற்றி பெற்றது. இந்த தேர்தலில் பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய இரண்டு தொகுதிகளில் போட்டியிட்ட த.வெ.க. தலைவர் விஜய், 2 தொகுதிகளிலும் அபார வெற்றி பெற்றுள்ளார். இந்நிலையில், காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி த.வெ.க. தலைவர் விஜய்யை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்துள்ளார். இது குறித்து ‘எக்ஸ்’ தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது;-

“நான் விஜய் அவர்களிடம் பேசி, த.வெ.க.வின் இந்த அற்புதமான வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்தேன். மக்கள் வழங்கிய இந்த தீர்ப்பு, புறக்கணிக்க முடியாத, புறக்கணிக்கப்படக் கூடாத இளைஞர்களின் எழுச்சிமிக்க குரலை பிரதிபலிக்கிறது. தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த காங்கிரஸ் தொண்டர்களின் கடின உழைப்புக்கும் ஆதரவிற்கும் எனது மனமார்ந்த நன்றிகள். காங்கிரஸ் கட்சி, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மக்களின் பாதுகாப்பிற்காகவும் சேவைக்காகவும் தொடர்ந்து பாடுபடும் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன்.”

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## 69-வது பிறந்தநாள்: சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு பிரதமர் மோடி வாழ்த்து

**புதுடெல்லி, மே 6:**

துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் தனது 69-வது பிறந் நாளை கொண்டாடினார். இதையொட்டி நாட்டின் பல்வேறு தலைவர்கள் அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர். அந்தவகையில் பிரதமர் மோடி அவருக்கு வாழ்த்து தெரிவித்து இருந்தார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில், ‘துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் ஜிக்கு பிறந்த நாள் வாழ்த்துகள். அவருடைய பொது வாழ்க்கை, அர்ப்பணிப்பு. ஒழுக்கம் மற்றும் தெளிவான குறிக்கோளால் தொடர்ந்து வழிநடத்தப்படு கிறது. அவர் நல்ல ஆரோக்கியத்துடனும், மகிழ்ச்சியுடனும், தேச சேவையில் நீண்ட ஆயுளுடனும் வாழ நான் பிரார்த்திக்கிறேன்’ என குறிப்பிட்டு இருந்தார்.

## சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி வெற்றி: கேரள வாக்காளர்களுக்கு பிரியங்கா நன்றி

**புதுடெல்லி, மே 6:**

கேரள சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி, தற்போது ஆட்சியை பிடித்துள்ளது. இதற்காக அந்த மாநில வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து காங்கிரஸ் கட்சி பொதுச்செயலாளர் பிரியங்கா வெளியிட்டுள்ள ‘எக்ஸ்’ பதிவில் கூறியிருப்பதாவது:

கேரளத்தில் உள்ள சகோதர, சகோதரிகள் எங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கும், அபரிமிதமான ஆதரவுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் எங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கை, ஐக்கிய ஜனநாயக முன்னணிக்கு வழிகாட்டும் படையாக இருக்கும். உங்கள் ஒவ்வொருவருக்கும் சிறப்பான எதிர்காலம் அமைய கடினமாக உழைப்போம். அடுத்த 5 ஆண்டுகளில் ஒவ்வொரு நாளும் எங்கள் நன்றிக் கடன் நன்றாக தெரியும். வயநாட்டில் உள்ள 7 தொகுதிகளிலும் காங்கிரஸ் அணிக்கு வெற்றியை அளித்து இருக்கிறீர்கள். என்னுடன் சேர்த்து 8 பிரதிநிதிகளும் வயநாட்டின் வளர்ச்சிக்காக உழைப்போம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஆப்பிரிக்கா: சொகுசு கப்பலில் ஹன்டா வைரஸ் பாதிப்பால் 3 பேர் பலி

**வாஷிங்டன், மே 6:**

நெதர்லாந்தைச் சேர்ந்த சொகுசு சுற்றுலா கப்பலில் பரவிய 'ஹன்டா' தீநுண்மி (வைரஸ்) பாதிப்பால் 3 பயணிகள் உயிரிழந்தனர்; மேலும் மூவர் ஆபத்தான நிலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

ஆர்ஜென்டினாவிலிருந்து அன்டார்டிகா வழியாக ஆப்பிரிக்காவின் கேப் வெர்டே தீவு நாட்டை நோக்கி 150 பயணிகளுடன் வந்த 'எம்.வி.ஹோண்டியஸ்' கப்பலில் இந்த வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில் இருவர் நெதர்லாந்தைச்சேர்ந்த தம்பதியர்



என்றும், மற்றொருவர் குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்டவர்களில் ஒருவருக்கு நடத்தப்பட்ட ஆய்வகச் சோதனையில் ஹண்டா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. எலிகளின் எச்சம், சிறுநீர், உமிழ்நீர் ஆகியவற்றின் மூலம் காற்றில் பரவும் இந்த ஹண்டா வைரஸ், மனிதர்களுக்குக் கடுமையான சுவாசக் கோளாறுகளை ஏற்படுத்தும் தன்மை கொண்டது.

காய்ச்சல், தசை வலி போன்ற சாதாரண அறிகுறிகளுடன் தொடங்கி, இதயம் மற்றும் நுரையீரலைச் செயலிழக்கச் செய்யும் இந்நோயால் பாதிக்கப்படுபவர்களில் 40 சதவீதம் பேர் உயிரிழக்க வாய்ப்புள்ளதாக மருத்துவ வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர்.

தற்போது கேப் வெர்டே கடற்பகுதியில் நங்கூரமிட்டுள்ள சொகுசு கப்பலில் உள்ள பயணிகளைத் தரையிறங்க அந்நாட்டு அரசு அனுமதி மறுத்துள்ளது. அதேநேரம், கப்பலில் உள்ள மற்ற பயணிகளின் ஆரோக்கிய நிலை குறித்து உலக சுகாதார அமைப்பு தீவிரமாக ஆய்வு செய்து வருகிறது.

உயிரிழந்தவர்களின் உடல்களையும், அறிகுறி உள்ள மற்ற பயணிகளையும் விமானம் மூலம் நெதர்லாந்துக்கு அழைத்துச் செல்ல அந்நாட்டு வெளியுறவு அமைச்சகம் கேப் வெர்டே அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

## உளவுப் புகார்: 3 ரஷிய தூதரக அதிகாரிகளை வெளியேற்றிய ஆஸ்திரியா!



**வியன்னா, மே 6:**

ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் உள்ள ரஷிய தூதரகக் கட்டட மேற்கூரைகளில் அதிநவீன ஆன்டெனாக்களை நிறுவி, சர்வதேச அமைப்புகளின் ரகசிய தகவல்களை உளவு பார்த்ததாகக் கூறி, 3 ரஷிய தூதரக அதிகாரிகளை ஆஸ்திரிய அரசு நாட்டை விட்டு வெளியேற்றியுள்ளது.

வியன்னாவில் அமைந்துள்ள சர்வதேச அணுசக்தி முகமை, ஒபெக், ஐரோப்பா பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான அமைப்பு போன்ற சர்வதேச அமைப்புகளின் செயற்கைக்கோள் இணையத் தரவுகளை ரஷியா இடைமறித்துச் சேகரித்ததாக கூறப்படுகிறது.

இதற்கு ரஷியா கண்டனம் தெரிவித்துள்ளது. ஆனால், இது தொடர்பாக ரஷிய தூதருக்கு கடந்த மாதமே சம்மன் அனுப்பப்பட்டதாகவும், விசாரணைக்கு ஒத்துழைக்க மறுத்ததாலேயே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

## சீனா: பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 21 பேர் பலி

**பெய்ஜிங், மே 6:**

சீனாவின் ஹுனான் மாகாணத்தில் உள்ள லியுயாங், ஒரு முக்கிய பட்டாசு உற்பத்தி மையமாகும். சீனாவில் விற்கப்படும் பட்டாசுகளில் சுமார் 60 சதவீதத்தையும், ஏற்றுமதி செய்யப்படும் பட்டாசுகளில் 70 சதவீதத்தையும் இங்குதான் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்த நிலையில், இந்த பகுதியில் செயல்பட்டு வரும் ஒரு பட்டாசு ஆலையில் திடீரென வெடிவிபத்து ஏற்பட்டது. இதனால் அப்பகுதியே புகைமூட்டமான காணப்பட்டது. இந்த விபத்தில் பட்டாசு ஆலை கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமானது.

இதையடுத்து உடனடியாக மீட்புப்பணிகள் தொடங்கப்பட்டது. இந்த விபத்தால் இடிபாடுகளில் சிக்கி 21 பேர் உயிரிழந்தனர். மேலும் 61 பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்பு காரணங்களுக்காக, விபத்து நடந்த பகுதியில் இருந்து 3 கிலோமீட்டர் சுற்றளவில் வசிக்கு மக்கள் அப்புறப்படுத்தப்பட்டனர்.

இந்த விபத்து நடந்ததற்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## ஜப்பானில் தொடரும் மக்கள் தொகை சரிவு: குழந்தைகள் எண்ணிக்கை 1.33 கோடியாக வீழ்ச்சி

**டோக்கியோ, மே 6:**

ஜப்பானில் குழந்தைகளின் எண்ணிக்கை தொடர்ந்து 45-வது ஆண்டாக சரிவைச் சந்தித்துள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. இன்று (மே 5) ஜப்பானில் 'குழந்தைகள் தினம்' கொண்டாடப்படும் நிலையில், அந்நாட்டு உள்விவகார அமைச்சகம் இந்த புள்ளிவிவரங்களை வெளியிட்டுள்ளது. 14 வயது அல்லது அதற்குக் குறைவான வயதுடைய குழந்தைகளின் எண்ணிக்கை 1.329 கோடியாக (13.29 மில்லியன்) குறைந்துள்ளது. இது கடந்த ஆண்டை விட 3.50 லட்சம் குறைவாகும். மொத்த குழந்தைகளில் சிறுவர்கள் 68.1 லட்சம் பேரும், சிறுமியர் 64.8 லட்சம் பேரும் உள்ளனர். 12 - 14 வயதுடையவர்கள் 30.9 லட்சம் பேர். 0 - 2 வயதுடையவர்கள் வெறும் 21.3 லட்சம் பேர் மட்டுமே உள்ளனர். இது ஜப்பானில் பிறப்பு விகிதம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதை காட்டுகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் 2025-ஆம் ஆண்டு உலக மக்கள் தொகை வாய்ப்பு அறிக்கையின்படி, 4 கோடிக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நாடுகளில், தென்கொரியாவிற்கு (10.2%) அடுத்தபடியாக, ஜப்பான் (10.8%) மிகக் குறைந்த குழந்தைகளைக் கொண்ட நாடாகத் திகழ்கிறது.

# பிலிப்பின்ஸ்: மாயோன் எரிமலை சாம்பல் வெளியேற்றத்தால் பாதிப்பு




**டெல்அவிவ், மே 6:**

பிலிப்பின்ஸ் நாட்டின் புகழ்பெற்ற மாயோன் எரிமலையில் இருந்து கடந்த வார இறுதியில் பெருமளவில் எரிமலைச் சாம்பல் வெளியேறியது. எரிமலையின் தென்மேற்கு சரிவில் தேங்கியிருந்த எரிமலைக் குழம்புப் படிமங்கள் திடீரென சரிந்து விழுந்ததால், அடர் சாம்பல் மூட்டம் அப்பகுதியில் உள்ள 87 கிராமங்களைச் சூழ்ந்தது.

அதிருஷ்டவசமாக, இந்த இயற்கைச் சீற்றத்தால் உயிரிழப்புகள் ஏதும் ஏற்படவில்லை.

எனினும்முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, 300-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டனர்.

# உக்ரைனில் ரஷியா மீண்டும் தாக்குதல்!



**மாஸ்கோ, மே 6:**

வடகிழக்கு உக்ரைனின் கார்கிவ் மாகாணத்தில் உள்ள மெரெஃபா நகரின் மீது ரஷியா திங்கள்கிழமை காலை நடத்திய ஏவுகணை தாக்குதலில், 3 பெண்கள் உள்பட 6 பேர் உயிரிழந்தனர்.

மேலும், 2 வயது குழந்தை உள்பட 30-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதுகுறித்து கார்கிவ் மாகாண ஆளுநர் ஒலெக் சினியூபோவ் கூறுகையில், 'உள்ளூர் நேரப்படி காலை 9.35 மணியளவில் மக்கள் நடமாட்டம் மிகுந்த நகர மையப்பகுதியில் ரஷியா தாக்கியது. இதில் 10 வீடுகள், ஒரு நிர்வாகக் கட்டடம், கடைகள், வாகனப் பழுதுபார்க்கும் நிலையம் உள்ளிட்டவை பலத்த சேதமடைந்தன' என்றார்.

இத்தாக்குதலில் 3 பெண்கள், 2 ஆண்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், படுகாயமடைந்த ஒரு நபர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தாக்குதலில் உயிரிழந்த பெண் ஒருவரின் கணவர் கூறுகையில், 'எனது மனைவி பணிக்குச் சென்ற 10 நிமிஷங்களில் பயங்கர வெடிச்சத்தம் கேட்டது. நான் பதறியடித்துக்கொண்டு ஓடிசென்று பார்த்தபோது, சாலையோரம் அவர் சடலமாக இருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தேன்' என கண்ணீருடன் தெரிவித்தார்.

போர் தொடங்கிய 2022 முதல் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவதை ரஷியா தொடர்ந்து மறுத்து வருகிறது. இருப்பினும், உக்ரைனின் துறைமுகக் கட்டமைப்புகள் மற்றும் மக்கள் வசிக்கும் பகுதிகள் மீது சமீபகாலமாக தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளதாக அந்நாடு குற்றஞ்சாட்டியுள்ளது.

## போர்க்கப்பல் மீது தாக்குதல் நடத்தியதா ஈரான்? அமெரிக்கா மறுப்பு

**தெஹ்ரான், மே 6:**

ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதலைத் தொடர்ந்து ஈரான் தனது கட்டுப்பாட்டில் இருந்த ஹார்முஸ் ஜலசந்தியை மூடியது. இதனால் ஏராளமான சரக்கு கப்பல்கள் அந்த பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளன. கப்பல் போக்குவரத்து முற்றிலுமாக தடைபட்டுள்ளதால், பல்வேறு நாடுகளுக்கான கச்சா எண்ணெய், சமையல் எரிவாயு விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் ஈரானின் துறைமுகங்களை மற்றும் கடற்பகுதியை அமெரிக்கா முற்றுகையிட்டுள்ளது. இதனால் ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் திறக்காமல் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறது. ஈரானை வழிக்கு கொண்டு வந்து ஹோர்முஸ் ஜலசந்தி வழியாக சரக்கு கப்பல்களை கொண்டு செல்வதற்காக பல்வேறு ராஜதந்திர மற்றும் கொள்கைரீதியான வழிமுறைகளை அமெரிக்க அதிபர் டிரம்ப் பரிசீலித்து வருகிறார். இந்நிலையில், அமெரிக்காவின் போர்க்கப்பலை ஈரான் தாக்கியதாக தகவல் வெளியானது. ஹார்முஸ் ஜலசந்திக்கு தென்கிழக்கே, கடல்சார் பாதுகாப்பு விதிமுறைகளை மீறியதால் அமெரிக்க கடற்படைக் கப்பல் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியதாகவும், இதையடுத்து அந்தக் கப்பல் வந்த வழியே பின்வாங்கி சென்றதாகவும் ஈரானிய செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டன. இதனால் மீண்டும் அப்பகுதியில் பதற்றம் உருவானது. ஆனால் இந்த தகவலை அமெரிக்க ராணுவம் மறுத்துள்ளது. பாரசீக வளைகுடாவிற்கு அருகிலுள்ள பகுதியில் அமெரிக்கா தொடர்ந்து தீவிரமாக செயல்பட்டு வருகிறது. ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல்கள் செல்வதை வழிநடத்தவும், ஈரானின் அனுமதியை பெறாத கப்பல்கள் மீது அந்த நாடு விதித்துள்ள முற்றுகையை அகற்றவும் அமெரிக்கா முயற்சி மேற்கொண்டு வரும் நிலையில், அமெரிக்க ராணுவத்தின் இந்த தகவல் வெளியாகியிருக்கிறது. இது ஒருபுறமிருக்க தெற்கு லெபனான் முழுவதும் போர்நிறுத்தத்தை மீறி இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதாக லெபனானின் தேசிய செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. குனைன் மற்றும் பராச்சித் நகரங்கள் மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் தாக்குதல் நடத்தியதாகவும், குனைன் மீது பீரங்கி தாக்குதல் நடத்தியதாகவும் அந்த செய்தியில் கூறி உள்ளது.

துலைன், கஃபார் தெப்னிட், ஸவ்தார் அல்-கர்பியா ஆகிய நகரங்களையும், டெய்ர் சிரியான்-ஸவ்தாரின் புறநகர்ப் பகுதிகளை இஸ்ரேல் படைகள் குறிவைத்ததாகவும் அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

## தென்கொரியாவில் தூக்க போட்டியில் பரிசை தட்டி சென்ற 80 வயது தாத்தா



**சியோல், மே 6:**

தென் கொரியாவில் அதிகரித்து வரும் தூக்கமின்மையை போக்குவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக அந்நாட்டில் தூக்கப் போட்டி நடத்தப்பட்டது. தென் கொரிய தலைநகர் சியோலில் உள்ள ஹான் நதிக்கரையில் உள்ள யோயுடோ ஹாங்கங் பூங்காவில் தூங்குவதற்கான போட்டி மே 2 ல் நடந்தது. இதன்படி, நன்றாக ஆழ்ந்து குட்டித் தூக்கம் போடும் நபர்களுக்கென போட்டி நடத்தி அதில் வெற்றி பெறுபவர்களுக்கு அரசு சார்பில் பரிசு வழங்கப்படுகின்றது. இந்நிகழ்வு 3 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது. சியோல் மாநகராட்சியால் ஆண்டுதோறும் நடத்தப்படும், 'பவர் நேப்' என்ற இந்த போட்டியில் 170 பேர் கலந்துகொண்டனர். இந்தப் போட்டியில் கலந்துகொள்ள குறிப்பிடத்தக்க விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றது. போட்டியில் வெற்றி பெறுவதற்கு கண்களை வெறுமனே மூடுவது மட்டும் போதாது. இதில், போட்டியாளர்கள் ஒவ்வொருவருக்கும் இதயத் துடிப்பைக் கணக்கிடும் கருவிகள் வழங்கப்படும். அதன்மூலம், இதயத் துடிப்பு எந்த அளவிற்கு குறைந்து சீராக இருக்கிறது எனக் கணக்கிட்டு, குறிப்பிட்ட 2 மணி நேரத்திற்குள் ஆழ்ந்த தூங்குபவருக்கு அதற்கான மதிப்பெண் வழங்கப்படும். மேலும் பல தொந்தரவுகளை தாண்டி ஆழ்ந்த தூக்கத்தை தொடர்கிறவர்களே போட்டியின் வெற்றியாளராக தேர்ந்தெடுக்கப்படுகிறார். இப்போட்டியில், 80 வயது முதியவர் ஒருவர் முதலிடம் பிடித்து வெற்றி பெற்றார். இவருக்கு அடுத்ததாக, 37 வயதான அலுவலகப் பணிசெய்யும் நபர் ஒருவர் இரண்டாம் இடம்பிடித்துள்ளார். பல இளைஞர்கள் கலந்துகொண்ட நிலையில் 80 வயது முதியவர் ஒருவர் வெற்றி பெற்றுள்ளார்.

# ஹோர்முஸ் நீரிணை முடக்கத்தை முறியடிக்க முயற்சி: அமெரிக்க கப்பல்கள் பாதுகாப்பாக கடந்து பயணம்

**தெஹ்ரான், மே 6:**

ஈரானால் முடக்கப்பட்டுள்ள ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் திறக்கும் முயற்சியில் அமெரிக்கா இறங்கியுள்ளது. இதன் முதல்கட்டமாக, அமெரிக்காவின் 2 சரக்குக் கப்பல்கள் ராணுவப் பாதுகாப்போடு அந்த நீரிணையைக் கடந்துள்ளதாக அமெரிக்க ராணுவம் அறிவித்துள்ளது.

கடந்த பிப்ரவரி இறுதியில், ஈரான் மீது அமெரிக்கா-இஸ்ரேல் போரைத் தொடங்கியதில் இருந்து, இந்த முக்கிய கடல் வழித்தடம் ஈரானின் முழு கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. இதனிடையே, இஸ்ரேல்- லெபானான் போர்நிறுத்தத்தையொட்டி நீரிணையைத் திறப்பதாக ஈரான் அறிவித்தது. ஆனால், ஈரான் துறைமுகங்கள் மீதான அமெரிக்காவின் கடல்வழி முற்றுகை கைவிடப்படாததால் அந்த அறிவிப்பு திரும்பப் பெறப்பட்டது. அமெரிக்கா கடல்வழி முற்றுகையை விலக்கிக் கொண்டால், ஹோர்முஸ் நீரிணையைத் திறப்பதாக ஈரான் சமரசத் திட்டங்களை முன்மொழிந்தது. ஆனால், அணுசக்தி பேச்சுவார்த்தையில் ஈடுபட தொடர்ந்து மறுத்து வருவதால் ஈரானின் இந்த முன்மொழிவுகளை அமெரிக்கா திட்டவட்டமாக நிராகரித்துவிட்டது.

ஹோர்முஸ் நீரிணை வழியாக 20 சதவீத கச்சா எண்ணெய் போக்குவரத்து நடைபெற்று வந்தது. ஈரானின் முடக்கத்தால் உலகளாவிய எரிபொருள் விலை கடுமையாக உயர்ந்து, பொருளாதாரச் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இச்சூழலில் பல உலக நாடுகளின் கோரிக்கைக்கு இணங்க, 'புராஜெக்ட் ஃப்ரீடம்' எனும் பெயரில் பாரசீக வளைகுடாவிலிருந்து கப்பல்களை மீட்டெடுக்கும் நடவடிக்கையை அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்தார். நீரிணைப் பகுதியில் ஓமன் கடல் எல்லை வழியாக கப்பல்களைச் செலுத்தும்படி கப்பல் நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும், கடலில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள் மற்றும் ஈரானின் தொடர் தாக்குதல் அச்சுறுத்தல் காரணமாக கப்பல் நிறுவனங்களும், அவற்றுக்கான காப்பீட்டு நிறுவனங்களும் பெரும் அச்சத்தில் உள்ளன.

அமெரிக்காவின் இந்த முன்னெடுப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்த ஈரான், ஹோர்முஸ் நீரிணைக்குள் நுழையும் எந்தவொரு வெளிநாட்டு ராணுவக் கப்பலையும் குறிவைத்துத் தாக்குவோம். அமெரிக்காவின் இந்த முயற்சி போர்நிறுத்தத்தை மீறும் செயல்' என்று குற்றஞ்சாட்டியது.

எனினும், 'புராஜெக்ட் ஃப்ரீடம்' நடவடிக்கை திங்கள்கிழமை தொடங்கப்பட்டு, நீரிணைப் பகுதியில் போக்குவரத்துச் சீராகத் தொடங்கியதாக அந்நாட்டு ராணுவம் தெரிவித்தது. இதையொட்டி, ஐக்கிய அரபு அமீரகத்தின் மீது ஈரான் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதுள்ள தற்காலிக போர்நிறுத்தம் நீடிக்கப்படுமா அல்லது ஹோர்முஸ் நீரிணை விவகாரத்தில் அமெரிக்காவின் தீவிர நிலைப்பாடும், ஈரானின் பதிலடி எச்சரிக்கையும் வளைகுடா பிராந்தியத்தை மீண்டும் போர்க்களமாக மாற்றுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

# முதலமைச்சராக நாளை பதவியேற்கிறார் விஜய்?



## முதல்வர் பதவியை ராஜினாமா செய்தார் மு.க.ஸ்டாலின்: ஆளுநருக்கு கடிதம்

## மேற்கு வங்கம்: மே 9ல் புதிய பாஜக அரசு பதவியேற்பு!

## 17-வது சட்டசபைக்குள் நுழையும் 22 பெண் உறுப்பினர்கள்!

## ஆப்பிரிக்கா: சொகுசு கப்பலில் ஹன்டா வைரஸ் பாதிப்பால் 3 பேர் பலி


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 06.05.2026 புதன்கிழமை இலவச இ–பேப்பர்